படம் 18
காட்சி 4

2598

பேசும் படம்

★ டிசம்பர் - 1959 ★

பொருளடக்கம்

		பக்கம்
1.	கலை உலகில்	... 4
2.	நக்ஷத்திர மண்டலத்தில் நாலு வாரங்கள்	... 9
3.	ஆர். ஆர். பிக்சர்ஸ் படத்தில் சரோஜாதேவி	... 17
4.	ஸ்ரீராமா பிலிம்ஸ் "அம்பரீஷா" படத்தில் ஸ்ரீரஞ்சனி	... 18
5.	வாசு பிலிம்ஸ் "கைராசி"யில் குசலகுமாரி	... 19
6.	ஜமுனா புரொடக்ஷன்ஸ் "அப்பா ஆ, உடுகி" படத்தில் அம்பிகா	... 20
7.	சௌகார் ஜானகி	... 21
8.	வீரப்பா - அஞ்சலிதேவி	... 22
9.	அஞ்சலிதேவி - என். டி. ராமாராவ்	... 23
10.	ஜீவன்கலா (வர்ணப் போட்டோக்கள்)	... 24
11.	அமுதவல்லி கதை - வசனம்	... 27
12.	நான் அறிந்த பாகவதர்	... 34
13.	ஸ்டுடியோ விஜயம்	... 41
14.	செய்திச் சுருள்	... 49
15.	செய்திப் படங்கள்	... 54
16.	"சகோதரி" (படக் காட்சிகள்)	... 57
17.	"பண்ணையார் மகன்" (படக்காட்சிகள்)	... 61
18.	வெட்டுங்கள் வெட்டுங்கள்	... 66
19.	இம்மாத நக்ஷத்திரங்கள்	... 71
20.	புதிய வெளியீடுகள்	... 76
21.	"விஜயபுரி வீரன்" (படக் காட்சிகள்)	... 81
22.	"சபாஷ் ராமு" (படக் காட்சிகள்)	... 85
23.	தபால் பெட்டி	... 89
24.	கேள்வி - பதில்	... 94
25.	நான் ரசித்த காட்சி	... 101
26.	"பேசும் படம்" போட்டோ ஆல்பம்	... 105

★ EIGHTEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam, Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications
Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:
Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon.

★ கலையுலகில் ★

‘கலைமணி’ மனோகர்

சென்ற மாதம் 22-ம் தேதியன்று, சென்னை என். கே. டி. கலாமன்றத்தில், பிரபல சினிமா நடிகர் மனோகருக்கு ‘கலைமணி’ என்ற பட்டம் வழங்கப்பட்டது. சென்னை சட்ட சபைத் தலைவர் டாக்டர் யு. கிருஷ்ணராவ் இந்தப் பட்டத்தை வழங்கினார்.

சரோஜா கல்வி நிலையம்

சினிமா நடிகை இ. வி. சரோஜா, தனது சொந்த ஊரான எண்கண் என்ற இடத்தில் தனது பெயரில் பள்ளிக்கூட மொன்றைக் கட்டியிருக்கிறார். இதன் திறப்புவிழா எண்கண் ஊராட்சி மன்றத் தலைவர் டி. பாலகிருஷ்ணன் தலைமையில் சென்றமாதம் 21-ம் தேதியன்று நடைபெற்றது. அறிஞர் அண்ணாதுரை இந்தக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

கிருஷ்ணனைத் தொழும் இவள் மீரா அல்ல. ‘வீரகடோத்கஜன்’ தமிழ்ப் படத்தில்.

‘எழுத்தறிவித்தவன் இறைவனுக்குச் சமானம்’ என்ற உண்மையை செயலில் காட்டியிருக்கும் இ. வி. சரோஜாவை நாம் பாராட்டுகிறோம்.

எம். ஜி. ஆர். வந்தார்

கால் எலும்பு முறிந்து, கடந்த ஐந்துமாத காலமாக படுத்த படுக்கையாக கிடந்த எம். ஜி. ஆர். பூரண நலம் பெற்று, சென்ற மாதம் 19-ம் தேதியன்று முதன் முதலாக ‘தாய் மகளுக்குக் கட்டிய தாலி’ படப்பிடிப்பில் கலந்து கொண்டார். அவர் நடிக்கும் இப்படம் இம்மாதம் வெளிவருகிறது.

வாழ்த்துகிறோம்

‘தங்கமலை ரகசியம்’, ‘சபாஷ் மீனா’ மற்றும் பல படங்களுக்கு இசை அமைப்பாளராகப் பணியாற்றிய டி. ஜி. லிங்கப்பாவுக்கும்-சாந்தம்மாவுக்கும் சென்ற மாதம் 12-ம் தேதியன்று சென்னையில் மிகச் சிறப்பாக திருமணம் நடந்தேறியது. படவுலகப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். தம்பதிகளுக்கு நமது ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சௌகார் பறந்தார்

நமது சினிமா நடிகைகளில் பலருக்கும் அயல்நாடுகளுக்குச் சென்று வரவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்து வருகிறது. இதை எடுத்துக் காட்டுவது போல் சென்ற மாதம் ஜப்பான் நாட்டுக்கு சௌகார் ஜானகி பறந்து சென்றிருக்கிறார். சுமார் மூன்று வாரங்கள் அவர் அங்கு தங்கியிருப்பார்.

பாராட்டினார்கள்

சென்னை சினிமா இசைக் கலைஞர் சங்கத்தினர்கள், சென்ற மாதம் 15-ம் தேதியன்று, இசை அமைப்பாளர் ஆதிநாராயண ராவுக்கு ஒரு பாராட்டு விழாவை நடத்தினார்கள். ‘ஸ்வர்ண சுந்தரி’ இசை அமைப்பிற்

89696
சென்னை-60 008.

நீடித்த
உழைப்பிற்கு
ஈடற்ற புகழ்

நீண்ட காலம் உழைப்பதில் மேட்டூர் மல்களையும் லாங்கிளாத்தையும் மிஞ்சக்கூடிய துணி வேறு எதுவும் இல்லை. இதனால், இயல்பாக ஈடுகட்டக் கூடிய வெள்ளை நிறத்துணிகளைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறவர்கள் மேட்டூர் மல்களையும், லாங் கிளாத்தையும் தேர்ந்தெடுக்கிறார்கள். மேட்டூர் அடையாளத்தைக் கவனியுங்கள். உங்களூரிலுள்ள வியாபாரியிடம் நம்பிக்கையுடன், நிர்ணயிக்கப் பட்ட, சிக்கனமான விலைகளைக் கொடுத்து வாங்குங்கள்.

METTUR INDUSTRIES LTD
METTUR MULL

மேட்டூர் மல்கள் & லாங்கிளாத்

தயாரிப்பவர்கள்:
மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்
மேட்டூர் அணை R.S—சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்டுகள்:
W. A. பியர்ட்ஸெல் & கம்பெனி (பிரைவேட்) லிமிட்டெட்.
மதராஸ் 1.

EP

பார்த்தாலே தெரிய வில்லையா, இளவரசி என்று? 'இரத்தின புரி இளவரசி'யில் இ. வி. சரோஜா.

காக, சென்ற ஆண்டின் சிறந்த இசை அமைப்பாளர் என்று பம்பாய் சினிமா பத்திரிகையாளர்கள் சங்கத்தினரால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதை யொட்டி இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. டாக்டர் யு. கிருஷ்ணராவ் தலைமையில் சென்னை கிருஷ்ண கான சபையில் இவ்விழா நடைபெற்றது.

கெய்ரோவில் தமிழ்ப் படங்கள்

எகிப்து நாட்டின் தலைநகரமான கெய்ரோவில் இன்னும் சில வாரங்களில் திரைப்பட விழா ஒன்று நடைபெறவிருக்கிறது. இதில் கலந்து கொள்வதற்காக எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் 'நாடோடி மன்னன்', வினஸ் 'கல்யாண பரிசு', ஜெமினியின் 'வஞ்சிக்கோட்டை வாலிபன்', விஜயா புரொடக்ஷன்ஸ் 'மாயா பஜார்', ஸ்வஸ்திஸ்ரீயின் 'ராஜசேவை' கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ் 'சிவகெங்கைச் சீமை' ஆகிய ஆறு படங்களை அனுப்பி வைக்க தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையினர் தீர்மானித்திருக்கின்றனர்.

உதகையில் பிலிம் தொழிற்சாலை

இந்திய சினிமாத் தொழிலுக்காக பிரதி வருஷமும் சுமார் ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள கச்சா

பிலிம் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. இதைகணிசமாகக் குறைத்து இந்தியாவிலேயே ஒரு கச்சா பிலிம் தொழிற்சாலையை ஏற்படுத்த நீண்ட நாட்களாகவே இந்திய சர்க்கார் திட்டமிட்டு வருகின்றனர். தென் இந்தியாவில் நீலகிரி மலையை அடுத்து உதகமண்டலத்திற்கு அருகாமையில் இதை ஏற்படுத்துவதென்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. நடுவில் இது கைவிடப்பட்ட போதும், மீண்டும் இது சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் துவங்கப்பட்டிருக்கின்றன. பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் நீலகிரியே கச்சா பிலிம் தொழிற்சாலையை ஏற்படுத்த சிறந்த இடம் என்று சொல்லியிருக்கிறார். ஐரோப்பிய நாட்டொன்றின் உதவியுடன், சுமார் பத்து கோடி ரூபாய் செலவில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்படும் என்று தெரிகிறது.

ஆர் எஸ். ஆர். மூவிடோன் 'தர்பமத்தினி'க்காக வேதாவின். டைரக்ஷனில் பாடல் பதிவாக்கப்படுகிறது.

இலங்கையில் முஸ்தபா

இலங்கை, கொழும்பு நகரத்தில் நடைபெற்ற தேசிய கலைச் சங்க விழாவில், இவ்வாண்டு சினிமா நடிகர் முஸ்தபா கலந்து கொண்டு சிறப்பித்தார். இச்சங்கத்தின் கலை விழா கொழும்பு நகரத்தில் உள்ள சரசுவதி மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ் சினிமா ரசிகர்கள் சங்கத் தலைவர் செல்ல முத்துவின் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

சங்கத்தினரின் கலை வளர்க்கும் நோக்கத்தைப் பாராட்டி முஸ்தபா பேசினார். "கலைக்கு ஊக்கமளித்தால் தான் அது வளர முடியும்" என்று அவர் சொன்னார்.

பாகவதர் மறைந்தார்

படவுலகிலே முன்பு மகத்தான புகழுடன் விளங்கிய எம். கே. தியாகராஜ பாகவதர் சென்றமாதம் 1-ம் தேதி காலமானார். படவுலகில் பாகவதர் என்றால் தெய்வமாக மதிக்கப்பட்ட காலமும் இருந்தது. பாகவதர் படவுலகில் நுழைந்தபின் எத்தனையோ பேர் பாடியிருக்கிறார்கள்; பாடியும் வருகிறார்கள். ஆனால் அவரைப்போல் இதுவரை யாருமே பாடியதில்லை. பாகவதர் காலத்திலே கர்னாடக சங்கீதம் படவுலகில் மிகச் சிறந்த இடம் பெற்றிருந்தது. பாமரரும் பாடும்படி எளிய அமைப்பில் அவரது பாடல்கள் அமைந்திருந்ததால்தான் இன்றும் அந்தப் பாடல்களை ரசிகர்கள் பாடி வருகிறார்கள். பாகவதர் என்றால் எம். கே. தியாகராஜ பாகவதர் ஒருவரைத்தான் குறிக்கும். அந்த அளவுக்குப் புகழ் பெற்றிருந்த பாகவதர் நாற்பத்தொன்பதே வயதில் காலமானது படவுலகிற்குப் பெரிய நஷ்டமாகும்.

பாகவதரைப் போல் புகழ் பெற்றவர், பாகவதரைப் போல் உன்னத ஸ்தானம் வகித்தவர், பாகவதரைப் போல் வாழ்ந்தவர் படவுலகில் யாருமே இல்லை. பாகவதர் இன்று நம்மிடையே இல்லை. ஆனால் படவுலகம் உள்ளளவும் அவர் புகழ் அழியாது. பாகவதர் நடித்திருக்கும் "சிவகாமி" படத்திற்கு ஆதரவளிப்பதுதான் அவரது குடும்பத்திற்கு நாம் தெரிவிக்கும் இதயபூர்வமான அனுதாபமாக இருக்கும்.

''கலைஞர் திலகம்''
ஸ்ரீதருக்குப் பாராட்டு

சென்ற 24-ம் தேதி செங்கற்பட்டில் 'கலைஞர் திலகம்' ஸ்ரீதருக்குப் பாராட்டு விழா மகத்தான முறையில் நடைபெற்றது. சென்னை மாகாண உள் நாட்டு அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். இந்த விழாவுக்கு அரசியல், விஞ்ஞானத்துறைத் தலைவர்களுடன் டி. கே. ஷண்முகம், எம். ஜி. ராமச்சந்திரன், ஏ. நாகேஸ்வர ராவ், சிவாஜி கணேசன், தங்கவேலு, பத்மினி முதலிய கலையுலக அன்பர்கள் பலரின் வாழ்த்துச் செய்திகளும் வந்திருந்தன. படவுலகின் பல ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.

''ஸ்ரீதர் வளர்ந்து,படித்து, கலையுலகுக்கான முயற்சிகளில் ஈடுபட ஆரம்பம் செய்தது எல்லாம் இந்தச் செங்கற்பட்டில்தான். அவருக்கு இங்கே பாராட்டு நடைபெறுவது தான் மிகவும் பொருத்தமானது'' என்று கூறி ஸ்ரீதரின் திறமையைப் பாராட்டிப்பேசி ஆசி கூறினார் அமைச்சர்.

ஸ்ரீதரின் திறமைதான் கலைஞர்களுக்கும் அவருக்கும் புகழ் தேடித்தந்திருக்கிறது. வீனஸ் கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தராஜன் ஆகிய ஸ்ரீதரின் பாகஸ்தர்களும் ஸ்ரீதரின் இந்த உயர்வுக்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள். 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் இந்த வீனஸ் ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கும் ஸ்ரீதரின் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்திருக்கிறார்'' என்று கூறி, ஸ்ரீதரின் திறனைப்பற்றி விவரித்தார் ஜெமினி கணேசன. அவரது பேச்சின் முடிவில் ஸ்ரீதர் பாராட்டு விழாக் கமிட்டியின் சார்பில் கேடயத்தை ஸ்ரீதருக்கு பரிசளித்தார். நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் இளைய சகோதரர் வி. ஸி. ஷண்முகம் கணேசனின் சார்பில் ஒரு விலையுயர்ந்த பேனாவை எழுத்தாளர் ஸ்ரீதருக்குப் பரிசளித்தார். பிரபுராம் பிலிம்ஸ் சார்பில் பிரம்மாண்டமானதொரு மலர் மாலையை ஷண்முகம் ஸ்ரீதருக்குச் சூட்டினார். மற்றும் வீனஸ் கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தராஜன், ஷண்முகம், காரியதரிசி பி. எஸ். ரங்கநாதன் முதலியோரும் ஸ்ரீதரைப் பாராட்டிப் பேசினார்கள்.

'நான் வளர்ந்து,படித்து, இங்குள்ளோரின் ஆசியோடுதான் கலையுலகில் புகுந்தேன். இன்று நான் எப்படி இருந்தாலும் உங்கள் குழந்தைதான்'' என்று தன்னடக்கத்துடன் பேச ஆரம்பித்த ஸ்ரீதர், தனது வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த யாவருக்கும் நன்றி தெரிவித்தார். இந்த விழாவை முன்னிட்டு ஒரு பாராட்டுவிழா மலரும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

JEYRAD RADIO

எங்கும்
எப்பொழுதும்
குதூகலமளிப்பது
ஜெராட் ரேடியோ



மாடல் A 96

ஜெராட் எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸ் - 38, தங்கசாலை வீதி - சென்னை-3

சென்னை பிராட்வே & சன்

மற்றும் தென்னுடெங்கும்

நீங்கள் படித்தீர்களா ?

★

திக்கற்ற

இரு குழந்தைகள் 1.00

கமலாம்பாள்

சரித்திரம் 1.00

செயற்கை சந்திரன் 1.50

செவ்வாய் மோகினி 1.00

பறக்கும் தட்டு 2.00

★

விவரங்களுக்கு :

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

ஆற்காடு ரோடு, சென்னை-24.

சிரஞ்சீவியின் மர்ம நாவல்கள்
அனைத்தும் எம்மிடம்
கிடைக்கும்

★

சிரஞ்சீவி எழுதிய
புதிய நாவல்கள்

காட்டுப்பாக்கம்
கண்ணம்மா

இரண்டு ஆஸ்
ஒரு ராணி

விலை ஒவ்வொன்றும்
ரூ. 1-50

★

தபால் மூலம் பெறவிரும்புபவர் புத்தக கிரயத்தை முன்னதாக அனுப்பினால் எமது செலவில் அனுப்பி வைக்கப்படும். வி. பி. கிடையாது.

★

அமர நிலையம்

சென்னை - 24.

அமைப்பாளர்களும் பாராட்டி இருப்பதாகச் சொன்னார் அவர். குறிப்பாக ஒரு தென்னிந்தியர், வட இந்திய நாடோடி இசையை நன்கு புரிந்து கொண்டு, படத்தில் அதைப் புகுத்தியிருப்பதை அவர்களில் பலரும் பாராட்டினார்களாம்.

அதிலும் பிரபல ஹிந்திப்பட இசை அமைப்பாளரான ஸி. ராமச்சந்திரா, ஆதிநாராயணராவிடம் 'உங்கள் படத்தை நான் ஐந்து தடவைகள் பார்த்தேன். அதன் இசை என்னை மயக்கிவிட்டது!'' என்று சொன்னாராம்.

இதைக் கேட்டதும் ஆதிநாராயண ராவும் வியந்து விட்டாராம். காரணம் ஸி. ராமச்சந்திராவும் அவரது மதிப்புக்குரிய இசை அமைப்பாளரில் ஒருவராக விளங்கி வருவதுதான்!

* * *

சென்ற மாதத்தில் ஒருநாள் வாஹினி ஸ்டுடியோவில் 'மீண்ட ஸ்வர்கம்' ஸெட்டில் டைரக்டர் ஸ்ரீதர், நடன ஆசிரியர் கோபாலகிருஷ்ணன் முதலியோருடன் பேசிக் கொண்டிருந்தேன்.

பயிற்சிக்கு வரும் மாணவிக்கு நடன ஆசிரியர் நடனம் சொல்லித் தருவதான ஒரு கட்டம் அன்று படமாக்கப்பட்டது.

பத்மினி ஆடும் இந்த நடனத்திற்கு கோபாலகிருஷ்ணன் நடனம் அமைத்திருந்தார்.

''பின்னணிப் பாடகர் ஏ. எம். ராஜாவை சங்கீத டைரக்டராக 'கல்யாண பரி'சில் அறிமுகப்படுத்தியிருந்தீர்கள். இந்தப் படத்தில் என்ன செய்திருக்கிறீர்கள்?'' என்று ஸ்ரீதரிடம் கேட்டேன்.

எதிரே இருந்த நடன டைரக்டர் கோபாலகிருஷ்ணனை அவர் சுட்டிக் காட்டினார். கோபாலகிருஷ்ணன் சிரித்தார் மௌனமாக.

பின்னர் ஸ்ரீதரே விஷயத்தை விளக்கினார்.

பத்மினி ஆடும் மேற்படி நடனத்தின் பாடலை எழுதியிருப்பவர் கோபாலகிருஷ்ணன்தான்; தவிர, அதற்கு மெட்டமைத்ததும் அவரேதான். இதை அவர் முதல் தடவையாக இப்படத்தில் செய்திருக்கிறார்.

'''கதை, வசனம் டைரக்ஷன் ஸ்ரீதர்' என்பதுபோல் 'பாடல், இசை, நடனம் கோபாலகிருஷ்ணன்' என்று இனி சொல்லலாமல்லவா?'' என்று நான் சொன்னபோது இருவருமே புன்னகை பூத்தார்கள்.

''நடனத்தையும் இசையையும் பற்றிய ஒரு சுவையான சித்திரமாக இப்படம் இருக்கும்'' என்று ஸ்ரீதர் சொன்னார்.

இதேபோல் எஸ். எஸ். ஆரும் தானே எழுதிய பாட்டொன்றை, சொந்தக்குரலில், அவரது சொந்தப் படமான 'தங்கரத்தின'த்தில் பாடியிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது!

ஜெயமாருதியின் 'படிதாண்டா பத்மினி'யில் கண்ணனும், சேதுபதியும்.

மேகலா பிக்சர்ஸ்
குறவஞ்சி
..காட்சிகள்...


முற்றிலும் 'புதிய பாத்திர
மொன்றில் நடிகர்'திலகத்
தை நடிக்க வைத்து 'குற
வஞ்சி'யைத் தயாரித்துள்
ளார்கள். மு. கருணாநிதி
இதன் வசனகர்த்தா.
டைரக்டர் ஏ. காசிலிங்கம்.

டிசம்பர் 4௳ முதல்
சென்னை மற்றும் தென்னாடெங்கும்
உணர்ச்சி மிகுந்த குடும்பச்சித்திரம்
மாடர்ன் தியேட்டர்ஸ்
எங்கள் குலதேவி
டைரக்ஷன்: A. சுப்பராவ் • சங்கீதம்: K.V. மஹாதேவன்
பாலாஜி · பண்டரிபாய் · மைனாவதி · சூர்யகலா · வி. ஆர். ராஜகோபால்
BALU BROS

இந்தப் பெண் கபடமறியாத, வெள்ளை உள்ளம் படைத்தவள் என்று பார்வையே சொல்லுகிறதே !-வி. பி. புரொடக்ஷன்ஸாரின் முதல் தயாரிப்பில் 'சௌகார்' ஜானகி.

மகிழ்ச்சியின் முத்திரையாக முகத்தில் விரிவதுதான் சிரிப்பு. இங்கே அஞ்சலிதேவியும் வீரப்பாவும் சிரிப்பதற்குக் காரணம் தெரிய வேண்டுமானுல் ‘வீரக்கனல்’ படத்தைத்தான் பார்க்கவேண்டும்.

எதிர்ப்பக்கத்தில் சிரிப்பை உதிர்த்த அஞ்சலிதேவி, என். டி
ராமராவுடன் இங்கு சிந்தனைக்கு வித்திட்டு நிற்கிருர். பி. ஏ. எஸ்
ஐந்தாவது தயாரிப்பில் இப்படி இருவரும் வருகிருர்கள்

எம். வி. ராமன் தயாரித்து, டைரக்ட் செய்து வரும் 'கொஞ்சும் சலங்கை' வர்ணப் படத்தில் புது முகமான ஜீவன் கலா இப்படி உடையணிந்து நடனமாடி இருக்கிறார்.

Phone : 222 Tel : ANNUGANDHI

கன்னித் தமிழ் கொஞ்ச, வண்ண ஓவியங்கள் மிளிரும் பொங்கல் வாழ்த்துக்கள், ஓவிய மன்னர் கே. மாதவன் அவர்கள், ஓவிய விற்பன்னர் வி. மாதவம் பிள்ளை அவர்கள், உலகப் புகழ் வாய்ந்த புகைப்பட நிபுணர்கள் ஆகியவர்களின் கை வண்ணம், கற்பனைத் திறன் எல்லாம் ஒருங்கே பிரதிபலிக்கும் வண்ணம், எங்களிடம் விற்பனைக்குத் தயாரில் இருக்கின்றன.

காண்போர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய்
அமைந்திருக்கின்றன.

அணுகாந்தி பாண்டிய பதிப்பகம்

16, கீழவாசல் : : தஞ்சாவூர்

நவம்பர்
27ல் வெளியீடு
ஜூபிடரின்
அமுதவல்லி
டைரக்ஷன்...A.K.சேகர்
கதை,வசனம்..அரு.ராமநாதன்· சங்கீதம்..விஸ்வநாதன் ராமமூர்த்தி
நெப்டியூன்
தயாரிப்பு...M.சோமசுந்தரம்

ஜூபிடர்

அமுதவல்லி

காட்சி 1

யாரிவன் ?

தென்பாண்டி நாட்டின் முச்சந்தி யொன்றில் ஒரு கூட்டம் தொடர முரசடித்துக் கெக்கலித்துப் பேசி வருகிறுன் ஒருவன். அவன் வடமதுரைப் புலவர் சங்கரமூர்த்தி சுவாமிகளின் சீடன். புலவருக்கு இருக்க வேண்டிய அடக்க மில்லாத கர்வி இந்த சுவாமிகள்.

சீடன் : தென்பாண்டி மக்களே, வடமதுரை மகா கவிஞரும் மகாமகாஞானியும் எங்கள் குரு தேவருமான சகலகலா பண்டிதர் சதுர்வேத சாஸ்திர விற்பன்ன சங்கீத கலாவித்துவ ரத்தின ஸ்ரீலஸ்ரீ சங்கரமூர்த்தி சுவாமிகள் திக்விஜயம் செய்யப் புறப்பட்டு அகில உலக சமஸ்தான

திரைக்கதை வசனம்

புலவர்களை யெல்லாம் கானத்திலும் ஞானத்திலும் வென்று அடிமை கொண்டு ஜெயக் கொடி நாட்டி வருகிறார்.

சந்திரன் குதிரை மீது வேகமாக வந்து கூட்டத்தோடு நிற்கிறான்.

சீட : இன்று அந்திப் பொழுதிற்குள் அவரை வாதிலே வெல்வார் இந்நாட்டிலே எவரும் இல்லையென்றால் இந்த விருதுக்கொடியோடு இந்நகரத்துப் புலவர்களையும் அடிமைகளாக்கி அடப்பக்காரர்களாக வடமதுரைக்கு இழுத்துச் சென்று விடுவார். அவரை வாதிலே வெல்லத்தக்க புலமையுள்ளோர் இங்கு எவரேனும் உண்டென்றால் இந்த விருதுக் கொடிக்குப் பதில் கூறட்டும்.

விருதுக்கொடியை பூமியில் நாட்டுகிறான். சந்திரன் வேகமாக வந்துகொண்டே பேசுகிறான்.

சங் : உண்டு ஒருவன்!

கொடியை கையில் எடுத்துக் கொள்கிறான்.

சங் : மண்ணெல்லாம் ஞான விளக்கேற்றும் தென்னகத்தின் அறிவு அன்னியனின் அகம்பாவத்துக்குத் தலை வணங்காது. வள்ளுவனைத் தந்து வான் புகழ் கொண்ட தமிழகம் தறுக்கி வந்தோரின் தலைக் கனத்தை இறக்காமல் விடாது.

சந்திரன் விருதுக்கொடியுடன் குதிரையில் சென்று விடவே திடுக்கிட்ட சீடன், ஒருவரிடம் கேட்கிறான்.

சீட : எங்கள் தலைவரை எதிர்க்கத் துணிந்த அந்தச் சிறுவன் யார்?

ஒரு : எங்கள் சமஸ்தானத்தின் முதுபெரும் புலவர் சிவஞானப் பெரியார் பெற்ற சிந்தனைச் செல்வன். வீரத்தில் மட்டுமல்ல, விவேகத்திலும் சிறந்த சந்திரவாணன்...

சீட : உம்! எங்கள் குருதேவரை இவன் எதிர்க்கிறானும்!

போகிறான்

காட்சி 2

அந்த ஒரு நூல்

விருதுக்கொடியைப் பறித்துச் சென்ற சந்திரவாணன் பற்றி



பாண்டி மன்னரிடம் கூறுகிறுர், வட மதுரைப் புலவர்.

புல : ஹ...ஹா...! தென் பாண்டி மன்னனே! பன்மொழிப் பாவலர்களை யெல்லாம் வாதப்போரிலே வென்று உம் தென் தமிழ்ப் புலவர்களேயும் அடிமை கொண்டுவிட்டோம். எங்கள் வடமதுரையே எதிலும் இமயமென உயர்ந்தது என நிரூபித்து விட்டோம். இப்போது என் விருதுக் கொடியை வீதியிலே விளேயாடும் ஒரு சிறுபிள்ளே பறித்தான் என்ருல் அவனைத் தண்டித்தால் மட்டும் போதாது. அதற்குத் பரிகாரமும் நீர் எமக்குச் செய்தாக வேண்டும்!

சந்திரன் விருதுக்கொடியுடன் வருகிருன்.

சங் : அவசரப்படாதீர்; இமயத்திலும் உயர்ந்த வித்துவரத்தினமே அவசரப்படாதீர்!

புல : யாரிவன்?

சங் : தமிழ் காக்கும் தென்னக வேந்தரே, வணக்கம்! நம்முடைய சமஸ்தானப் புலவர்களே யெல்லாம் அன்னியரது அடிமைப் பந்தத்திலிருந்து மீட்கவே வந்தேன்!

அர : சந்திரவாணு! தமிழன்னே உனக்கு அருள் புரியட்டும்.

புல : நான் யார் தெரியுமா? நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணம், அறுபத்தி நான்கு கலே ஞானங்களேயும் கரைத்துக் குடித்த கவிராஜ வித்வ ரத்தினம்!

சங் : ஓஹோ! தாங்கள் அவ்வளவு நூல்களேயும் கரைத்துக் குடித்திருக்கிறீர்களா? நான் படித்ததெல்லாம் ஒரே ஒரு நூல்தான்.

புல : ப்பூ...! ஒரே ஒரு நூல்தானு?

சங் : ஆமாம்! கடுகைத் துளேத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தறித்தநூல்!

புல : அதென்ன நூல்?

சங் : குறள்! அடக்கம் அமரருள் உய்க்கும் - அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும் என எடுத்துக்காட்டும் எங்கள் பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்!

புல : உன்னே ஒரே நொடியில் வென்று நீ எமக்கு வெற்றி சங்கு ஊத, உன் அரும்பெரும் புலவர்கள் எல்லாம் எம் பல்லக்கைச் சுமந்துவர யாம் செல்வோம் எம் நாட்டிற்கு!

புல ; என்ன சிரிப்பு? உதடுகள் படாமல் உன்னுல் பாட முடியுமா?

சங் : நான் பாடினுல்?

புல : பாடா விட்டால் நாக்கைக் கிழித்து விடுவோம்.

சந்திரன் பாடிவிடப் புலவர் கீழே விழுகிருர். அரசர் முதலானேர், சந்திரனிடம் செல்கிருர்கள்.

அர : பெரியாரே! நீர் பெற்ற செல்வம் இந்த சமஸ்தானத்தின் பெருமையைக் காப்பாற்றினுன். இவனுக்கு இந்த யானையையும் பரிவட்டங்களும் பரிசளிக்கிறேன்.

புல : எம் அகம்பாவத்தால் நாமே உமக்கு அடிமையாகி விட்டோம்.

சங் : ஐயா! நாங்கள் யாருக்கும் அடிமைப்படுவதும் இல்லை! யாரையும் அடிமைப்படுத்துவதுமில்லை.

புல : ஹா...ஹா! என்ன பெருந் தன்மை

சங் : அதுதான் தென்னவரின் தனித் தன்மை! மகா பண்டிதரே! அறிவிற்கு அடையாளம் அடக்கமே தவிர, ஆணவமல்ல! இனியாவது இதை உணர்ந்து செல்லும்.

புலவர் நொண்டியபடிப் போய் விடுகிருர்.

(113-ம் பக்கம் பார்க்க)

இரவில் தனியாக இருக்கும் போதுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்திறுல் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்ருகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம் தான் மிக நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை. ரூ. 4.

BED ROOM PHOTOS

படுக்கை அறை படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு செட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள், 12 படங்கள் கொண்ட சாம்பிள் செட் ரூ. 3-50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ. வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE
Durgiana (P.P.M.) Amritsar.

தானுகவே 50 முறை சுடும் பிஸ்டல்

தானுகவே 50 முறை சுடும் லைஸன்ஸ் அவசியமில்லாத அமெரிக்கன் மாடல் பிஸ்டல், சுடும்போது வரும் ஓசை மிருகங்களையும் விரோதிகளையும் நடுங்கச் செய்யும். இதை சினிமா, நாடகங்களுக்கும் உபயோகப்படுத்தலாம். இது உங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறது. டீலக்ஸ் மாடல் விலை ஒன்று ரூ. 10/50 வி. பி. சிலவு ரூ. 2/50. இலங்கைக்கு ரூ. 4/50. 25 குண்டுகள் இலவசம். தனி குண்டுகள் டஜன் ரூ. 1/- பிஸ்டலின் கேஸ். ரூ. 4/50. ரிப்பேர் செய்ய எண்ணை ரூ. 1/-

டெக்னிகல் புத்தகங்கள்

மின்சாரம் & ரேடியோ அட்டவணை: 117 படங்கள் கொண்ட அட்டவணைமூலம் நீங்கள் மெகானிக் ஆகலாம். நீங்கள் ரூ. 15/-க்கு ஒரு ரேடியோ தயார் செய்து மின்சாரத்தைப் பற்றி நன்கு அறியலாம். ரேடியோ ரிப்பேரிங், வயரிங், எலக்டிரிகல் மெகானிசம், இன்னும் பல விஷயங்கள் அடங்கியது. விரிவான புதிய பிரசுரம் ரூ. 5/- வி. பி. சிலவுகள் ரூ. 1/- தனி.

டெய்லரிங் & கட்டிங் ரூ. 4/- போட்டோ கலை ரூ. 3/- சோப்பும் & வாசனை திரவியங்களும் செய்யும் விதம் ரூ. 4/50. வி. பி. சிலவு ரூ. 1/- தனி (புத்தகம் ஒன்றுக்கு).

TARUN TRADERS,
No. 450, Post Box 19,
ALIGARH.

ஜெயலட்சுமி பிக்சர்ஸ்....

நடமாடும் தெய்வம்

ஜெயலட்சுமி பிக்சர்ஸார் "நடமாடும் தெய்வம்" என்ற பெயரில் ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரித்து வருகிறார்கள்.

தமிழகத்தின் நக்ஷத்திர நடிகர்களான 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன், சாவித்திரி, எம். என். நம்பியார், தாம்பரம் லலிதா, சூர்யகலா, அசோகன், சுந்தரிபாய், நம்பிராஜன் முதலியோர் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

தமிழ்த் திரையுலகின் மிகப் பிரபல ஹாஸ்ய ஜோடியான தங்கவேலுவும் எம். சரோஜாவும் ஹாஸ்யப் பகுதியைக் கவனித்துக் கொள்ளுகிறார்கள். ஏராளமான பொருட் செலவில் துரிதமாகத் தயாராகிறது இப்படம்.

ராசிக்காரரான ஆதுர்த்தி சுப்பாராவ் இந்தப் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

நான் அறிந்த பாகவதர்

தமிழ்ப் படவுலகின் இசை வேந்தனாக விளங்கிய பாகவதரைப் பற்றி அவருடன் நெருங்கிப் பழகி, அவரது பல படங்களுக்கு இசை அமைப்பாளராகப் பணியாற்றிய ஜி. ராமநாதன் கூறுகிறார்.

நீலத்திரைக்கடலின் கரையோரம் அமைந்திருக்கும் திருச்செந்தூர் கோயிலின் வெளிமண்டபத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். ஆழ்கடலில் பொங்கி எழுந்த அலைகள், மண்டபம் உயரத்திற்குக் கிளம்பி, அதில் முட்டி மோதிச் சிதறிய போது, வானத்திலிருந்து விண்மீன்கள் பொல பொலவென உதிர்வது போலிருந்தன. ஆலயத்திலிருந்து கிளம்பிய மணியோசை காற்றில் மிதந்து வந்து, கடலலையின் 'ஓ' வென்ற ஒலிக்குச் சுருதியாக அமைந்து, மெய்மறக்கச் செய்யும் ஒரு சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டிருந்தது. என் காதில், சற்று முன்பு முருகன் சன்னதியில் மனமுருகப் பாடிய பாகவதரின் பாடல்கள் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. நானும் அவரும் ஒன்று சேர்ந்து பாடினோம் என்றாலும், அவரது குரல் மட்டும் தான் என் காதில் மீண்டும் மீண்டும் மோதிக் கொண்டிருந்தது!

PSR

பாகவதர் சிறந்த பாடகர் மட்டும்தான் என்று கருதியவர்களுக்கு அவர் ஒரு தேர்ச்சி பெற்ற நடிகரும்கூட என்பதை அவரது சொந்தப் படமான 'திருநீலகண்டர்' எடுத்துக் காட்டியது.

சிறிது நேரத்திற்கெல்லாம் பாகவதர் வெளியே வந்தார். நானும் அவரும் ஒன்ருகக் கிளம்பினேம்.

இம்மாதிரியான அனுபவங்கள் நாடகங்களுக்காக பல்வேறு இடங்களுக்கு பாகவதருடன் செல்லும் போது எனக்கு ஏற்படும். நாடகம் நடத்த அவர் எந்த ஊருக்குச் சென்ருலும் அவர் செய்யும் காரியங்கள் இரண்டு உண்டு. முதலில் அவர் செய்யும் காரியம் கோயிலுக்குப் போய் இறைவனை வழிபடுவது தான்! அடுத்து அவர் உடனே நாடகக் கொட்டகைக்குச் செல்வார். தான் வந்து விட்டதை அறிவிக்கவே அவர் செல்வார்.

'நாடகம் ஏற்படுத்தியவர்கள் எந்தக் காரணம் கொண்டும் கலங்கக் கூடாது' என்ற எண்ணம் உடையவர் அவர். அதே சமயம் நாடகத்தை நடத்த எவ்விதத் தடையிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் நடத்தவும் செய்வார். ஜனங்களை ஏமாற்றக் கூடாது என்ற அபிப்பிராயம் கொண்டவர் அவர். இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தையும் சொல்கிறேன்.

விளாத்திகுளம் கோயிலுக்காக ஒரு சமயம் நாடகமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று நல்ல மழை. நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கும், நாடகம் நடக்கவிருந்த இடத்திற்கும் இடையில் ஒரு காட்டாறு ஓடிக்கொண்டிருந்தது. மழை பலமாகப் பெய்யவே ஆற்றில் தண்ணீர் நிறைய ஓட ஆரம்பித்தது அக்கரைக்கு நாங்கள் செல்ல முடியவில்லை. தண்ணீர் வடிந்தால்தான் அக்கரைக்குச் செல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

மணி இரவு பதினொன்றுக்குமேல் ஆகி விட்டது. நாங்கள் ஒரு சத்திரத்தில் உட்கார்ந்திருந்தோம்.

அங்கிருந்த ஒருவர், "நாடகத்தை மறுநாள் நடத்திக் கொள்ளலாமே" என்று சொன்னார்.

"கூடவே கூடாது! நம்மை ஆவலுடன் எதிர்பார்த்து ஜனங்கள் காத்திருப்பார்கள். அவர்களை ஏமாற்றக்கூடாது. தண்ணீர் சிறிது வடிந்ததும், கரை கடந்து நாடகத்தை நடத்தி விடுவோம்" என்று தீர்மானமாகச் சொன்னார் பாகவதர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மழை நின்றது. காட்டாறுதானே? தண்ணீரும் விரைவில் வடிய ஆரம்பித்து விட்டது.

ஆனால் ஆற்றைக் கடந்து கார் செல்ல முடியவில்லை. காரை இக்கரையிலேயே விட்டு விட்டு, இரவு பனிரெண்டு மணிக்கு நடந்தே சென்று ஒரே சேறும் சகதியுமாய் இருந்த அந்த ஆற்றைக் கடந்தோம். நாடகத்தை நடத்தினோம்.

நாடகத்தை முடித்துவிட்டுதிரும்பும் போது, "நாம் இருவரும் ஓடுவோம். யார் முதலில் அக்கரைக்குப் போகிறார்கள்என்று பார்ப்போம்"என்று பாகவதர் சவால் விடுத்தார்.

நான் அந்த ஆற்றைக் கடந்து ஓட ஆரம்பித்தேன்; அவரும் என்னைத் துரத்தியபடி ஓடி வந்தார். நான் முதலில் ஓடிவந்து விட்டேன். "தொந்தியும் தொப்பையும் கொண்ட இவர் என்னைத் தோற்கடித்து விட்டாரே!" என்று அவர் சொன்னபோது கூடியிருந்தவர்கள் சிரித்தார்கள். இம்மாதிரி ஏதாவது தமாஷ் செய்து கொண்டே இருப்பார் பாகவதர். இதனால் நாடகம் நடத்திய போது நமக்கு ஏற்பட்ட சோர்வும் அயர்வும் கூட மறந்து விடும்!

கழுத்துவரை வளர்ந்துள்ள அலை அலையான கறுத்த முடி - அகன்ற நெற்றி - அதில் பெரியதொரு ஜவ்வாது பொட்டு - கணுக்கை வரை தொட்டிருக்கும் முழுக்கை சட்டை—கணுக்கால் வரை படர்ந்து நிற்கும் பஞ்ச கச்ச வேஷ்டி - ராஜநடை இவற்றோடு கூடிய பாகவதர்தான் தமிழ்நாட்டு ரசிகர்களுக்கு அறிமுகமாகியிருந்தார்.

ஆனால் கைக்கு அடங்காத குடுமியுடன் நாலு முழம் துண்டு கட்டிய பாகவதராகத்தான் அவர் எனக்கு முதன் முதலில் அறிமுகமானார்.



பாகவதர் குதிரை சவாரி நன்கு பழகியவர். இதற்காக சொந்தத்தில் அவர் ஒரு வெள்ளைக் குதிரையை வாங்கியிருந்தார். அதைத்தான் 'ஹரிதாஸ்' படத்தில் அவர் உபயோகப்படுத்தினார். அதில் அவர் தோற்றம் இது.

பாகவதரும் கட்டுரை ஆசிரியர் ஜி. ராமனுதனும். ''என் வாழ்நாளில் நான் பல பாடகர்களைக் கண்டிருக்கிறேன். பாகவதரைப் போன்ற மதுரமான குரல் படைத்தவரைக் கண்டதில்லை'' என்கிருர் இந்தக் கட்டுரை ஆசிரியர்.

1932-ம் ஆண்டு இருக்கும் என்று நினைக்கிறேன். நான் திருச்சியில் தங்கியிருந்தேன். அப்போது பாகவதர் என் தமையனுர் சுந்தர பாகவதருடன் நந்தனுர், வள்ளி முதலிய நாடகங்களில் நடித்து வந்தார். நான் அந்த நாடகங்களுக்கு ஹார்மோனியம் வாசிப்பேன். இந்தச் சமயத்தில் பாகவதர் என் தமையனுரைக் காண்பதற்காக அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார். அப்போதுதான் எனக்கு அவரது பழக்கம் ஏற்பட்டது.

என்னுடைய பாட்டிலும் இசை அமைப்பிலும் அவருக்கு அதிகமான ஈடுபாடு உண்டு. அவருக்கு திருமணம் நடந்தபோது எஸ். டி. சுப்புலக்ஷ்மியின் ஹரிகதா காலக்ஷேபம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது பாகவதர் நான் பாடிக் கேட்க வேண்டுமென்று வற்புறுத்தி, எஸ். டி. எஸ். கதைக்கு என்னை பின்பாட்டு பாடச் செய்து கேட்டு மகிழ்ந்தார்.

முதன் முதலாக அவரது சொந்தத் தயாரிப்பான 'சத்தியசீலன்' படத்திற்கு இசை அமைப்பதற்காக நான் அவருடன் பம்பாய்சென்றிருந்தேன். அதிலிருந்துதான் நாங்கள் இருவரும் மிகவும் நெருங்கிப் பழக ஆரம்பித்தோம். இடையில் எனக்கும் அவருக்கும் சில படங்களில் நெருங்கிய தொடர்பு இல்லாமலிருந்தது. கடைசியாக 'சிவகவி' யிலிருந்து நாங்கள் இருவரும் இணை பிரியாத் தோழர்களாகப் பழக ஆரம்பித்தோம். அவர் எங்கு சென்ருலும் யாருடன் பேசினுலும் சங்கீதத்தைப்பற்றிப் பேசாத நாட்களே கிடையாது!

பாகவதர் பரந்த மனேபாவம் கொண்டவர். யாரிடத்திலும் அன்புடனும் பண்புடனும் பழகக்கூடியவர். 'நான் ஒரு பெரிய நடிகர்; பாடகர்' என்ற எண்ணம் அவரது மனதில் என்றுமே எழுந்தது இல்லை. அவரது பரந்த மனேபாவத்திற்கு உதாரணமாக இரண்டொரு சம்பவங்களைச் சொல்லுகிறேன்.

சிவகவி படத்தில் அவர் நடித்து வந்தபோது தீபாவளி வந்தது. அதற்கு சில தினங்களுக்கு முன்பாக பாகவதர், நான் மற்றும் சிலர் ஒன்ருக அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் பேச்சு 'தீபாவளி' யைச் சுற்றிச் சுற்றி வந்தது.

'ஏழைகட்கு தீபாவளி எங்கே கோலாகலமாக நடக்கிறது? புத்தாடையை எத்தனை ஏழைகள் அணிகிருர்கள்?' என்றெல்லாம் தத்துவார்த்த ரீதியில் பேச்சுகள் சிலரிடம் எழுந்தன.

பாகவதர் இதைப்பற்றியெல்லாம் என்ன சிந்தித்தாரோ என்னவோ, மறுநாள் அவர் ஸ்டுடியோவுக்கு வந்தபோது, அவருடன் இருபதாயிரம் ரூபாய் மதிக்கத்தக்க ஜவுளி

களும் வந்தன. பாகவதர் அவை அனைத்தையும் ஸ்டுடியோவில் பணியாற்றி வந்த அத்தனை தொழிலாளிகளுக்கும் கொடுத்தார்.

கடைசியாக என்னிடம் வந்தார். "இதை அணிந்துதான் இந்த வருஷம் தீபாவளியை நீங்கள் கொண்டாட வேண்டும்" என்று சொல்லி என்னிடம் ஒரு பட்டு வேஷ்டியைத் தூக்கிக் கொடுத்தார்.

முதல் நாள் அவர் முகத்தில், தீபாவளியைப் பற்றிய சம்பாஷணையின் போது எழுந்த வேதனை - அவரிடம் அன்று மறைந்து போனதைக் கண்டேன்!

பிறர் மகிழ்வதைக் கண்டு தான் மகிழும் உயர்ந்த பண்பாடு கொண்டவர் பாகவதர்.

இதேபோல் நாடகங்கள் நடத்தி விட்டுத் திரும்பும்போது, பாகவதர் எளியவர்களிடம் காட்டிய அன்பு குறிப்பிடத்தக்கது.

நாடகம் முடிந்து திரும்பும்போது கூடை நிறைய பழங்களும், இட்டிலியும் வாங்கி வருவார்.

வழியில் ஆங்காங்கே காரை நிறுத்தி, அங்குள்ள ஏழைகளுக்கு அவற்றைத் தன் கையாலேயே தருவார். அப்போது அவர் முகத்தைப் பார்த்தாலேயே போதும்! அந்த மகிழ்ச்சியில் நாமும் நம்மை மறந்து விடுவோம்!

பாகவதர் நாடகங்களுக்காக வாங்கிய தொகை மிகப்பெரிது. தமிழ் நாட்டில் இன்றுள்ள நாடகக் கம்பெனிகள் வாங்கிய தொகையைவிட அதிகமாக அந்த நாட்களிலேயே வாங்கியவர் அவர். அவர் நாடகங்களுக்கும் அமோகமான வசூல் கிடைக்கும்.

எதிர்பாராத சில காரணங்களினால் சில சமயம் போதுமான வசூல் இல்லாமற் போய்விடும். அப்போதெல்லாம் நாடகத் தொகையைக் குறைத்து வாங்கிக்கொண்டு போகும் பெருந்தன்மையைக் கொண்டவர் பாகவதர்.

ஒரு சமயம் இப்படித்தான் ஒரு ஊரில் நாடகமொன்று நடந்தது. அன்று ஒரே மழை. பாகவதர் நாடகம் நடத்திவிட்டு வெளியே வந்தார். நாடகத்தை ஏற்பாடு செய்தவர் ஒரே கவலையுடன் நின்றிருந்தார். அன்றைய நாடகத்திற்கு பாகவதருக்குப் பேசிய தொகையைக்கூட கொடுக்க வசூல் ஆகவில்லை. பாகவதரிடம் எப்படி பணத்தைக் குறைத்து வாங்கிக் கொள்ளும்படிக் கேட்பது என்று அவர் பயந்து கொண்டிருந்தார்.

பாகவதர் அவரிடம் வந்தார். அவருக்கு விஷயம் விளங்கி விட்டது. பாகவதர் அவரிடம் ஒரு தொகையைக் குறிப்பிட்டு, அதைக் கொடுத்தால் போதும் என்று சொல்லி விட்டார். நாடகத்தை நடத்தியவர், அந்தத் தொகையைக் கேட்டு அப்படியே திகைத்து நின்று விட்டார். ஆமாம், பாகவதருக்கு அவர் தரலாம் என்று நினைத்ததைவிட மிகக் குறைவாகவே கேட்டிருந்தார் பாகவதர்.

பாகவதருக்கு கர்நாடக இசையில் அமோகமான பற்றுதல் உண்டு. அதே சமயம் எந்த ஒரு பாட்டையும் சரிவர ஒத்திகைப் பார்க்காமல்

பாகவதரின் 'ராஜநடை' பிரசித்தி பெற்றது. இங்கே ராஜநடை போட்டு 'அமரகவி' படத்தின் ஆரம்ப விழாவுக்கு வருகிறார்.

அவர் பாட முன் வரமாட்டார். சுமார் பதினைந்து முதல் இருபது நாட்கள் வரை ஒத்திகைப் பார்த்து, பாடல்கள் நன்கு மனப் பாடமாகி, மெருகேறியதும்தான் அவர் 'ஸெட்'டில் பாடவருவார். ஒத்திகையில் பாட உட்கார்ந்தால் நடுவே எழுந்திருந்து செல்லவே மாட்டார் அவர்.

அதே சமயம் அவர் பாடல்களில் குறைகள் இருந்தால் அதைச் சொல்லக் கேட்டு, திருத்திக்கொள்ளும் உயர்ந்த பண்பும் அவருக்கு இருந்தது.

'அம்பிகாபதி' படம் முடிந்து வெளியான சமயம் அது. பாகவதர் அதில் பாடிய ஒவ்வொரு பாட்டும் ரசிகர்களின் முணுமுணுப்புக்கு இலக்காகின.

அதில் "உலகினில் இன்பம் வேறேது?" என்ற பாட்டை பாகவதர் பாடியிருக்கிறார்.

ஒரு நாள் அவர் என்னைக் கூப்பிட்டனுப்பினார். நான் சென்றிருந்தேன்.

"நான் பாடிய 'உலகினில் இன்பம்' என்ற பாட்டில் குறை ஒன்றிருக்கிறது. அதை உங்களால் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

நான் உடனே அந்தக் குறையை எடுத்துச் சொன்னேன்.

பாகவதர் உடனே என்னை அணைத்துக் கொண்டார்.

நான் கோவையில் 'சிவகவி' படத்திற்காக தங்கியிருந்த சமயம் மற்றொரு ரசமான நிகழ்ச்சி நடைபெற்றது.

ஒருநாள் இரவு மணி இரண்டிருக்கும். நான் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன்.

வாயிற் கதவைத் தடதடவென யாரோ தட்டும் சப்தம் கேட்டது.

என்னவோ ஏதோ என்று விழுந்தடித்துக்கொண்டு கதவைத் திறந்தேன். திறந்தவன் அப்படியே திகைத்து நின்று விட்டேன்!

எதிரே பாகவதர் நின்றிருந்தார்!!

"உங்களிடம் ஒரு முக்கிய விஷயமாக வந்தேன். உள்ளே போகலாம் வாருங்கள்" என்று சொல்லியபடி உள்ளே வந்தார்.

மறுநாள் அவருக்கு திருச்சி ரேடியோ நிலையத்தில் ஒரு விசேஷ நிகழ்ச்சி இருந்தது. "அதற்காக இரு பாடல்களை நான் புதிதாகப் பாட விரும்புகிறேன். இதோ அந்தப் பாட்டுக்கள். இவற்றுக்கு உடனே மெட்டமைத்துக் கொடுங்கள்" என்று சொன்னார்.

இரண்டே மணி நேரத்திற்குள் அந்த இரண்டு பாட்டுக்களையும் முற்றிலும் மனப்பாடம் செய்துகொண்டு, சரியாக நான்கு மணிக்கெல்லாம் என் வீட்டைவிட்டுக் கிளம்பி விட்டார் பாகவதர். அப்போது அவர் ஒரு மிகப் பிரபலமான நக்ஷத்திரம்; நானோ சாதாரண சங்கீத டைரக்டர்! ஆயினும் என் வீடு தேடிவந்த அவரது பெருந்தன்மையை என்னால் மறக்க முடியவே இல்லை. பாடல்களை விரைவில் மனப்பாடம் செய்வதில் அவருக்கு இருணை அவர்தான்!

பாகவதர் தற்புகழ்ச்சியை விரும்பாதவர். அதே சமயம் தன்மானம் நிறைந்தவர். அவருடன் பழகிய நாட்களில் நான் பல புதுப்பாடங்களைக் கற்றிருக்கிறேன்.

என்னுடன் நெருங்கிப் பழகிய நண்பர் ஒருவர் மறைந்து விட்டார் என்ற செய்தியை என்னால் கற்பனையில்கூட உருவகப்படுத்திப் பார்க்க முடியவில்லை.

அவரை என்னால் மறக்க முடியாது; அவர் பாடிய பாட்டுக்களையும், அவர் தீபாவளியன்று கொடுத்த பட்டு வேஷ்டியையும் என்னால் மறக்க முடியாது.

அவர் மறைந்தார் என்ற செய்தி கேட்டதும் எனக்கு அந்த பட்டு வேஷ்டிதான் எதிரில் வந்து நின்றது.

'சிவகவி'யில் பணியாற்றிய போது அவர் கொடுத்த அந்த அங்கவஸ்திரம்தான் அதிருஷ்ட தேவதையாக எனக்கு இன்றும் இருக்கிறது; அதைக் கொடுத்த அவரை எப்படி நான் மறக்க முடியும்? ★

ஸ்டூடியோ விஜயம்

வெங்கடேஷ் பிலிம்ஸ் 'பேசும் கண்கள்' படத்தின் ஸெட்டில் அசோகனும், குசலகுமாரியும் ஆடும் இந்த நடனத்தைப் படம் பிடித்தேன்.

அழகிய ஒரு சிறு மேடை. அந்த மேடையின் மத்தியில் ஒரு நடராஜர் சிலையும், அதன் இரு புறமும் இசைக் கருவிகளும் வைக்கப்பட்டிருந்தன.

வத்திகளின் இனிய மணம் அந்த இடத்தில் பரவி ஒரு இனிய சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

திடீரென்று அந்த இடத்திலிருந்து 'கலீர் கலீர்' என்ற சலங்கை ஒலி கிளம்பியது. பின்னணியில் நடனத்தின் ஜதிகள் இனிமையாக ஒலிக்க தேவலோகத்து ஊர்வசியோ என வியக்கும்படி, எழில் மங்கை ஒருத்தி அங்கே நடனமாடிக் கொண்டிருந்தாள்......

சில ஜதிகளுக்கு அவள் அபிநயம் பிடித்து முடிந்ததும் 'கட்' என்ற ஒலி எழுந்தது. குரல் வந்த திசையில் டைரக்டர் ஸ்ரீதர் நின்றிருந்தார்.

மதுரம் பிக்சர்ஸ் 'மீண்ட ஸ்வர்கம்' படத்திற்காக பத்மினி ஆடும் இந்தக் காட்சி வாஹினியில் சென்ற மாதம் படமாக்கப் பட்டது.

ஸ்ரீதரிடம் காட்சியின் விவரத்தைப் பற்றிக் கேட்டேன்.

சேகர் ஒரு படித்த வாலிபன். நிர்மலா என்ற வயதுப் பெண்ணை அவன் சந்திக்கிறான். அநாதையான அவளை, தனது நெருங்கிய நண்பரான குமரய்யா என்பவரிடம் அழைத்து வருகிறான். நடனத் துறையில் பேராசிரியராக விளங்கும் அவர், தகுந்த மாணவர்கள் கிடைக்காததால் தனது கலைக்கூடத்தையே மூடியிருந்தார்.

நிர்மலாவைப்பற்றி பலத்த சிபாரிசு செய்கிறான் சேகர். அவளிடம்,

'வளையாபதி' முத்துக்கிருஷ்ணனுக்கும் 'வில்லன்' டி. கே. ராமச்சந்திரனுக்கும், இடையில் கைகட்டி நிற்பவர் என். லலிதா 'சவுக்கடி சந்திரகாந்தா' படப்பிடிப்பின் இடை வேளையில் வெளியே எடுத்த படம் இது.

'இடையே குடும்ப வாழ்வில் ஈடுபடக் கூடாது' என்ற நிபந்தனைப்பெற்று, நடனம் சொல்லித்தரச் சம்மதிக்கிருர் குமரய்யா.

அமைதி நிலவியிருந்த அந்த இடத்தில் மீண்டும் சலங்கையின் ஒலி கிளம்பியது. நிர்மலா நடனம் பயில ஆரம்பித்தாள்.

நிர்மலா நடனம் பயிலும் இந்தக் காட்சிதான் அன்று படமாக்கப் பட்டது.

நிர்மலாவாகப் பத்மினி இதில் தோன்றுகிருர். குமரய்யாவாக கே. நடராஜனும் சேகராக ஜெமினி கணேசனும் இதில் நடித்து வருகிருர்கள்.

"இசைக்கும் நடனத்திற்கும் பிரதான்ய மளித்து, புதிய பாணியில் இந்தப் படத்தை எடுத்து வருகிரோம்" என்று டைரக்டர் ஸ்ரீதர் சொன்னுர். இதன் திரைக் கதை, வசனத்தையும் அவரே எழுதி யிருக்கிருர்.

* * *

பாரமவுண்ட் ஸ்டுடியோவில் நண்பரொருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். "கலைவாணி கல்யாணி" என்ற பாடல் காற்றிலே மிதந்து வந்தது. 'அருமையான குரல் வசதி படைத்த யாரோ பாடுகிருர்கள் கலைவாணியைக் குறித்து; நாமும்தான் சென்று வாணியைத் துதிப்போமே' என்று உள்ளே சென்றேன்.

ரமணீயமானதொரு பூங்கா. எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேரென்ற புல் தரையும் செடிகளிலே பூத்திருக்கும் வண்ண மலர்களும் கண்களுக்கு விருந்தாயிருந்தன. அந்த மனேகரமான சூழ்நிலையும் இனிமையானகானமும்கண்ணுக்கும்

கருத்துக்கும் பெரு விருந்தளித்தன. உள்ளே சென்றதும் தான் விஷயம் விளங்கியது. ஒரு இளைஞன் ஒரு மேடையில் அமர்ந்து பாடிக் கொண்டிருந்தான். அவன் எதிரிலிருந்த மலர்க் குவியல் அசைவது போலிருந்தது. கூர்ந்து கவனித்தேன். அந்த மலர்க் குவியலிலிருந்து எழுந்தாள் ஒரு ஆரணங்கு. அன்ன நடை போட்டு அசைந்த அவளைப் பார்த்ததும் ''தந்தமெனும் உன் அங்கமெலாம்'' என்று ஆரம்பித்தான் இளைஞன். அவள் அந்தப் பாடலுக்கு அபிநயம் பிடிக்க ஆரம்பித்தாள்.

கூர்ந்து கவனித்தேன். பாடலைப் பாடியவர் டி. ஆர். மகாலிங்கம். அபிநயம் பிடித்தவர் மாலினி. இந்தப் பாடலைத் தொடர்ந்து அவர்களிருவரும் (காட்சியில் தான்) தங்கள் எதிர்காலம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆர். ஏ. பிக்சர்ஸாரின் ''பண்ணையார் மகன்'' படத்திற்காக இந்தக் காட்சி சுடப்பட்டது. தயாரிப்பாளர் ராகவன் இப்படத்தை பொங்கலன்று வெளியிட துரிதமாக ஏற்பாடு செய்து வருவதாக கூறினார். ஜம்பனாவின் டைரக்ஷனில் வளரும் இப்படத்தில் டி. ஆர். மகாலிங்கம், மாலினி, டி. கே. ராமச்சந்திரன், பத்மினி பிரியதர்சினி, சந்திரா, சுந்தரிபாய், பாண்டியன், குலதெய்வம் ராஜகோபால் முதலியோர் நடித்து வருகிறார்கள்.

ஏ.எல். நாராயணன் வசனம் அமைத்திருக்கிறார். ஜி. ராமநாதன் இசை அமைத்திருக்கிறார்.

ராகவன் ''பண்ணையார் மகன்'' படத்தை முடித்தவுடன் ஒரு முழு நீள ஹாஸ்யப் படத்தைத் தயாரிக்கப் போவதாகக் குறிப்பிட்டார். சமீபத்தில் பம்பாய் சென்று ஒரு ஹிந்தி சமூகக் கதையையும் ஒரு மராத்தி நகைச்சுவைக் கதையையும் அவர் வாங்கி வந்திருக்கிறாராம். இந்த ஹாஸ்யப் படம் தமிழ் வருடப் பிறப்பன்று வெளியிடப்பட்டு விடுமாம். 'பண்ணையார் மகன்' படத்தில் நடிப்பவர்களே அதிலும் நடிப்பார்கள் என்று ராகவன் குறிப்பிட்டார்.



இடுப்பிலே கைவைத்து சொகுசாக நிற்கும் இவர் தான் ''பண்ணையார் மகன்'' டி. ஆர். மகாலிங்கம் ஆர். ஏ. பிக்சர்ஸ் தயாரிப்பு இது.

‘ஆளுக்கொரு வீடு’ வெளிப்புறக்காட்சி படப்பிடிப்பின்போது எடுத்தது. தலையில் குல்லாயுடன் இருப்பவர்தான் தயாரிப்பாளர் பி. என். பிள்ளை.

அது ஒரு அழகிய பங்களா. அதன் முன்கூடம் பெரியதாக இருந்தது. நாகரீகத்தின் வாடை வீசும் அந்த வீடு ஒரு பெரும் செல்வந்தருடையதெனத் தெள்ளத் தெரிந்தது. அங்கே ஒரு யுவதி குயிலாகப் பாடியபடி மயிலாகஆடிக் கொண்டிருந்தாள். காண்போர் உள்ளங்களைக் கிளுகிளுக்கச் செய்யும் அந்தப் பருவப் பாவையின் முன் ஒரு ஆடவன் நின்று அவள் ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தான். நானும் ரசித்துக்கொண்டே யிருக்கும்போது, ‘கட்’ என்ற குரல் கேட்டது. அவளது ஆட்டம் நின்றது.

டைரக்டர் பக்தா அங்கே நின்று கொண்டிருந்தார். வெங்கடேஷ் பிலிம்ஸாரின் “புரொடக்ஷன் நெ. 1.” படத்திற்காக கோல்டன் ஸினி ஸ்டுடியோவில் முதல் நாள் படப்பிடிப்பு அன்று நடைபெற்றது. குசலகுமாரி நடனம் ஆடினார். அசோகன் அவருடன் நடித்தார். ராதாமணாளன் கதை வசனம் எழுதியிருக்கும் இப்படத்தில் சிவாஜி கணேசன், குலதெய்வம் ராஜகோபால், பாலாஜி, குசலகுமாரி, மனோரமா, அசோகன் முதலியோர் நடிக்கிறார்கள். மாஸ்டர் மூர்த்தி இதன் நடன டைரக்டர். ஏ. எம். ராஜா சங்கீதடைரக்டர். கே. வி. எஸ். இப்படத்தின் ஒளிப்பதிவாளர்.

சுமுகம் பிக்சர்ஸ் படத்திற்கான பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டபோது எடுத்த படம்.



சத்யநாராயணு புரொடக்ஷன்ஸ் படப்பிடிப்பில் சம்பந்தப்பட்டவர்கள்.

அவள் ஒரு யுவதி. பண்பும் அடக்கமும் கொண்ட அவள் சிறையிலே ஒரு தூணில் கட்டப்பட்டிருக்கிருள். ஆனுல் அவளைப் பார்த்தால் கவலைப்படுபவளாகத் தோன்றவில்லை. அங்கே ஒரு வீரன் நுழைந்தான். இரக்க குணமே அண்ட முடியாத அரக்க குணமுள்ளவன்போல் தோற்றமளித்தான் அவன். கையிலே சாட்டையை ஏந்திய அவன் தலை கவிழ்ந்து கொண்டான். அவன் உள்ளத்திலும் இரக்கம் ஏற்பட்டு விட்டதோ என்று நினைத்தேன். ஆனுல் முருகனைத் தொழுதுவிட்டு நிமிர்ந்தான். மீண்டும் அவன் முகத்திலே பழையபடி கொடுமை. அநியாயம் செய்யப் புகுபவன்கூட ஆண்டவனைத் தொழும் அதிசயத்தைக் கண்டு பிரமித்தபடி நின்றிருந்தேன்.

'கட்' என்ருர் டைரக்டர் கோபிநாத். ஸ்புட்னிக் பிக்சர்ஸாரின் "வீரமங்கை வேலுநாச்சியார்" படத்திற்காக அந்தக் காட்சி சுடப்பட்டது.

வேலு நாச்சியை கம்பத்தில் கட்டி வைத்து அடிக்கப் போகிருன்



எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸ் 'தங்கரத்னம்' படப்பிடிப்பில் கலைஞர்களும், நடிகர்களும். காமிராவுக்குப் பின்னுலிருப்பவர் ஒளிப்பதிவாளர் கர்ணன்.



கணேசன் கடிகாரத்தைச் சுட்டிக் காட்டுவதற்கும். பத்மினி விரலை விரித்துக் காட்டுவதையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் ''படப்பிடிப்பில் ஈடுபட்ட நமக்கு நேரம் போனதுகூடத் தெரியவில்லையே!'' என்று சொல்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா? மதுரம் பிக்சர்ஸ் ''மீண்ட ஸ்வர்கம்'' ஸெட்டின் வெளியே எடுத்த படம் இது.

சின்னச்சாமிச் சேர்வை. அவனை மாறுவேடத்திலிருக்கும் மன்னர் முத்து வடுகநாதர் தடுக்கிறார். வேலு நாச்சியாராக பண்டரிபாயும் சின்னச்சாமியாக கே. கண்ணனும் முத்துவடுக நாதனாக வளையாபதி முத்துகிருஷ்ணனும் நடித்தார்கள்.

பிரம்மம் திரைக்கதை, வசனம் எழுதியிருக்கும் இப்படத்தில் பண்டரிபாய், அசோகன், கண்ணன் வளையாபதி முத்துகிருஷ்ணன், ஆறுமுகம், சந்தியா, பிரண்ட் ராமசாமி, சுதாராணி முதலியோர் நடித்து வருகிறார்கள். ஏ. எம். ராஜா இசையமைத்திருக்கும் இப்படம் பாரமவுண்டில் வளர்ந்து வருகிறது.

* * *

டி. ஆர். மகாலிங்கம், புஷ்பலதா, வி. எஸ். ராகவன் ஆகியவர்கள் ஒரு செட்டிலே நின்று கொண்டிருந்தார்கள். சத்யநாராயணா புரொடக்ஷன்ஸாரின் ''நானே உன்னைக் கல்யாணம் செய்து கொள்வேன்'' என்ற படத்திற்காக அன்று அவர்கள் 'மேக்-அப்'புடன் நின்றிருந்தார்கள். தண்பரிடம் படமாக்கப் படவிருந்த காட்சிபற்றி விசாரித்தேன். அவர் விவரமாகக் கூறினார்.

செல்வந்தரான தர்மலிங்கம் பிள்ளைக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கிறார்கள். மகன் சேகர் ஒரு வழக்கறிஞன். நாகரிக வாலிபன். தர்மலிங்கம் பிள்ளையின் சகோதரி கிராமத்திலிருக்கிறாள். அவளுக்கு ஒரு மகளிருக்கிறாள். அவளை சேகருக்கு மணமுடிக்க விரும்புகிறார் தர்மலிங்கம் பிள்ளை. ஆனால் பட்டிக்காட்டுப் பெண்ணை நாகரிக மோகமுள்ள தன் மகன் மணக்க மறுத்துவிடக் கூடாதே என்று கவலைப்படுகிறார் அவர்.

சேகரை அத்தை வீட்டுக்கு அனுப்புகிறார் அவர். ஆனால் பெண் பார்க்க அவனை அனுப்புவதாகக் கூறாமல் மறைத்து விடுகிறார். கிராமம் செல்லும் அவன், தன் மருமகளை பார்த்த பிறகு நாம் திருமணம்பற்றி அவளிடம் பேசலாம் என்று தீர்மானிக்கிறார் அவர். சேகர் லேசில் கிராமத்திற்குக் கிளம்பவில்லை. தர்மலிங்கம் பிள்ளையும் சேகரின் தங்கை மீனாவும் வற்புறுத்தவே அவன் சத்தியபுரம் கிராமத்துக்குக் கிளம்புகிறான்.

அன்று இந்தக் காட்சிதான் படமாக்கப்பட்டது. சேகராக டி. ஆர். மகாலிங்கமும் மீனாவாக புஷ்பலதாவும் தர்மலிங்கம் பிள்ளையாக வி. எஸ். ராகவனும் நடித்தார்கள்.

மித்ரதாஸ் டைரக்ஷனில் வளரும் இப்படத்தை ஆர். ராஜாராம் தயாரிக்கிறார். இதன் மூலக் கதையையும் அவரே எழுதி யிருக்கிறார். அப்பன்ராஜ் திரைக்கதை, வசனங்களை எழுதி யிருக்கிறார். மருதகாசி, கம்பதாசன் இருவரும் பாடல்களை இயற்ற எஸ். அனுமந்தராவ் அவற்றிற்கு இசை யமைத்திருக்கிறார்.

* * *

அது ஒரு ரமணியமான தோட்டம். பச்சைப் பசேலென்ற செடி கொடிகளும் நிழல்தரும் பெருமரங்களும் நிறைந்த அங்கு ஒருத்தி மகிழ்ச்சியோடு அமர்ந்திருந்தாள். சிறிது நேரத்திலே அங்கே ஒரு வாலிபன் வந்தான். இருவரும் நன்கு அறிமுகமானவர்கள் போலப் பேச ஆரம்பித்தார்கள். அருகில் சென்றேன். அவர்கள் காதலர்கள்! அவர்கள் பேச ஆரம்பித்தும் இடையில் ''கட்'' என்றார் டைரக்டர் எம். கிருஷ்ணன்.

திரும்பிப்பார்த்தேன். சுபாஷ் மூவீஸ் பாகஸ்தர்களான பி. என். பிள்ளையும் சாத்தப்ப செட்டியாரும் சிரித்தபடி என்னருகே வந்தனர். கம்பெனி மானேஜர் ராம்தாஸ் அவர்களிடம் காட்சியின் விவரம் கேட்டேன்.

ராஜனும் லக்ஷ்மியும் காதலர்கள், அவர்களது வீட்டாருக்குத் தெரியா

ஜுபிடரின் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' படத்தில் ஹரிசிங் இப்படி வேடமணிந்து வந்து, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாட்டுக்கு வாயசைத்து நடித்திருக்கிறார்.

'வீரமங்கை வேலுநாச்சியார்'
பண்டரிபாய்.

மல் அவர்களிருவரும் அங்கே வந்து அளவளாவுகின்றனர்.

ராமாவரம் வேணு செட்டியார் தோட்டத்தில் சுபாஷ் மூவீசாருக்கான இந்தக் காதல் காட்சி படமாக்கப்பட்டது. சத்யன் ராஜனாகவும் எல். விஜயலக்ஷ்மி லக்ஷ்மியாகவும் நடித்தனர். இவர்களுடன் டி. ஆர். ராமச்சந்திரன், தாம்பரம் லலிதா, முத்தையா; பேபி மாலதி முதலியோரும் நடிக்கும் "ஆளுக்கொரு வீடு" தமிழ்ப்படம் விரைவில் திரைக்கு வரவிருக்கிறது.

* * *

நெப்டியூன் ஸ்டூடியோவில் நான் நுழைந்தபோது அங்கே ஒரு சாமியார் பாடிக் கொண்டு வருவதைக் கேட்டேன்.

"கோடி கோடி உயிர்கள் வந்து
நித்தம் நித்தம் போகுது!..."

என்று பெரிய தத்துவத்தைப் பாட்டாகப் பாடிக்கொண்டிருந்தார் அந்தச் சாமியார்.

"யார் இந்தச் சாமியார்?" என்று கேட்டேன்.

ஜுபிடரின் "எல்லோரும் இந் நாட்டு மன்ன"ரில் இந்தச் சாமியார் வருவதாகச் சொன்னார்கள். மேற்படி பாடலை காலஞ் சென்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதியிருக்கிறார்.

பண்பட்ட அனுபவ நடிகரான ஹரிசிங் சாமியாராக அன்று நடித்தார்.

மு. கருணாநிதி திரைக்கதை, வசனம் அமைத்துள்ள இந்தப் படத்தை டி. பிரகாஷ்ராவ் டைரக்ட் செய்து வருகிறார்.

செய்திச் சுருள்

மேகலாவின் 'குறவஞ்சி'

தமிழ் மணமும் பண்பும் கமழும் திரை ஓவியமாக மேகலாவின் 'குறவஞ்சி' படம் உருவாகி வருகிறது. மு. கருணாநிதி கதை, வசனம் எழுதும் இந்தப் படத்தில் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன், புதியதொரு பாத்திர மேற்று நடித்து வருகிறார். சாவித்திரி அவருடன் கதாநாயகியாகத் தோன்றி நடிக்கிறார். மற்றும் பண்டரிபாய், குமாரி வனஜா, மைனாவதி, வி. ஆர். ராஜகோபால் முதலியோர் நடித்து வரும் இப்படத்தை ஏ. காசிலிங்கம் டைரக்ட் செய்து வருகிறார். முடிவடையும் தறுவாயிலுள்ள இப்படம் பொங்கல் திருநாளன்று வெளிவர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

உத்தமி பெற்ற ரத்தினம்

எம். ஏ. திருமுகம் டைரக்ஷனில் அமரா புரொடக்ஷன்ஸார் 'உத்தமி பெற்ற ரத்தினம்' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார்கள். பண்டரிபாய், மாலினி, பாலாஜி மற்றும் பலர் நடித்து வரும் இதை எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்து வருகிறார். விரைவில் திரைக்கு வரக்கூடிய படங்களில் ஒன்றாகும் இது.

வருகிறது 'ராஜபக்தி'

தமிழ் நாட்டு திரைப்பட ரசிகர்களுக்கு ஒரு அபூர்வமான வாய்பை 'ராஜ பக்தி' படத்தின் மூலம், தயாரிப்பாளர் பி. ராஜமாணிக்கம் அளிக்கப் போகிறார். இந்தப்படத்தில் தமிழகத்தின் மிகப் பிரபலமான கதாநாயகிகளான பத்மினி, பானுமதி, வைஜயந்திமாலா மூவரும் ஒன்று சேர்ந்து முதல் தடவையாக நடிக்கிறார்கள். 'நடிகர் திலகம்' கதாநாயகனாக, பண்டரிபாய், பாலய்யா, நம்பியார், முதலியோருடன் சேர்ந்து இதில் நடிக்கிறார். பிரபல வழக்கறிஞர் வி. சி. கோபாலரத்தினத்தின் இக்கதைக்கு கு. ராஜவேலு வசனம் அமைத்திருக்கிறார். இவ்வாண்டு இறுதிக்குள் வெளியிட முயற்சி செய்யப்பட்டு வரும் இதை, கே. வேம்பு டைரக்ட் செய்து வருகிறார்.

இம்மாதம் 'சகோதரி'

ஏவி. எம். கலைக்கூடத்தில் வளர்ந்து வரும் 'சகோதரி' இம்

'கண்ணின் மணிகள்' அறிமுகப்படுத்திய புதுமுகம் சுந்தர் 'புன்னகை சொல்லும் கதை'யில் நடித்து வருகிறார்.

ஜெமினி கணேசன், சுப்பய்யா, ராமராவ், பாலய்யா, எம். கிருஷ்ணன் தோன்றும் இக்காட்சியை 'பொன்னு விளையும் பூமி'யில் பார்க்கலாம்.

தாய் மகளுக்குக் கட்டிய தாலி

நீண்டகால இடைவெளிக்குப் பிறகு 'புரட்சி நடிகர்' எம். ஜி. ஆர். நடித்து வெளிவரப்போகும் முதல் படமாக 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' வரப்போகிறது. ஸி. என். அண்ணாத்துரை கதை எழுதியிருக்கும் இதில் புரட்சி நடிகருடன் ஜமுனா, கண்ணாம்பா, ராஜசுலோசனா, வி. கோபாலகிருஷ்ணன், தங்கவேலு முதலியோர் நடித்துள்ளார்கள். சீர்திருத்தக் கருத்தொன்றைப் பிரதி மாதம் திரைக்கு வருகிறது. ஏ. பீம்சிங் டைரக்ஷனில் வளர்ந்துள்ள இதன் திரைக்கதை வசனத்தை மாறன் எழுதியிருக்கிறார். ஓவியன் ஒருவனது வாழ்க்கையைப் பின்னணியில் கொண்டுள்ள இந்தச் சுவையான சித்திரத்தை ஜி. கே. புரொடக்ஷன்ஸார் தயாரித்துள்ளார்கள். பாலாஜி, பிரேம்நசீர், சந்திரபாபு, நாகய்யா, தேவிகா, ராஜசுலோசனா, என். லலிதா முதலியோர் இதில் நடித்திருக்கிறார்கள். பத்மினி பிரியதர்சினியின் சில கவர்ச்சிகரமான நடனங்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

மகாலிங்கம் பெண் வேஷ மணிந்து 'இன்பவல்லி'யில் தோன்றினார். 'பத்மாவதி'யில் இப்போது மீண்டும் தோன்றுகிறார்.

பொன்னு விளையும் பூமி

பத்மினி, ராகினி, ஜெமினி கணேசன், சந்திரபாபு, பாலய்யா, தயாரிப்பாளர் சத்யபால் மற்றும் பல முன்னணி நக்ஷத்திரங்கள் தோன்றும் 'பொன்னு விளையும் பூமி' இம்மாதம் வருகிறது. பீம்சிங் டைரக்ட் செய்துள்ள இதன் திரைக்கதை வசனங்களை அரங்கண்ணல் எழுதியிருக்கிறார். கிராமியச் சூழ்நிலையில் வைத்துப் பின்னப்பட்ட இப்படத்தின் இசை அமைப்பை விஸ்வநாதன் - ராமமூர்த்தி செய்திருக்கிறார்கள்.

பலிக்கும் இதன் வசனங்களை அரங்கண்ணல் எழுதியிருக்கிருர்.

குமார ராஜா

ஹாஸ்ய நடிகர் சந்திரபாபு, முதன் முறையாக குணசித்திர பாத்திரமொன்றை ஏற்று, கதாநாயகனுக நடித்து வரும் படத்தை சிவகாமி பிக்சர்ஸார் தயாரித்து வருகிருர்கள். ஒளிப்பதிவாளர் ஜி. கே. ராமு டைரக்ஷனில் வளர்ந்து வரும் இதன் திரைக்கதை, வசனங்களை மாறன் எழுதி வருகிருர். சந்திரபாபுவுடன்

கட்டிலில் அமர்ந்திருக்கும் அந்தக் கட்டழகிக்கு இவர் என்ன சொல்கிருரோ? — 'வைஜயந்திமாலா' படத்தில் எம்.என்.ராஜம்.எம்.ஏ. கணபதி.

இதில் பாலய்யா, டி. எஸ். துரைராஜ், ஜாவர் சீதாராமன் மற்றும் பலர் நடித்து வருகிருர்கள். தமிழ்த் திரைப்படவுலகுக்கு ஒரு புதுமாதிரியான கதைப் போக்கைக் கொண்ட இதன் பெயர் 'குமார ராஜா.

தாமரை முகம் கொண்ட இவர்தான் 'பத்மாவதி'யோ? இதே பெயர் கொண்ட படத்தில் நடிகை பி. எஸ். சரோஜா.

வளரும் 'கைராசி'

'ஒரே வழி' படத்தை வெளியிட்ட வாசு பிலிம்சார் 'கைராசி' என்ற படத்தைத் தயாரித்து வருகிருர்கள். ஜெமினி கணேசன், எம். ஆர். ராதா பி. சரோஜாதேவி, எம். வி. ராஜம்மா முதலானேர் நடிக்கிருர்கள் கே.சங்கர் டைரக்ட் செய்யும் இப்படம் விஜயா-வாஹினி ஸ்டுடியோக்களில் உருவாகி வருகிறது. படத்தின் கதை, வசனங்களை ஜாவர் சீதாராமன் எழுதியிருக்கிருர்.

தாலி கட்டிய மனைவி

மனேகர், பாலாஜி, எஸ். வி. சுப்பய்யா, பக்கிரிசாமி சி. கே. சரஸ்வதி முதலியோர் நடிக்கும் "தாலி கட்டிய மனைவி" என்ற படத்தை, தேவகி பிலிம்சார் தயாரித்து வருகிருர்கள். கோல்டன் ஸ்டுடியோவில் படமெடுக்கப்பட்டு வரும் இதன் டைரக்ஷனை ஜி. ஆர். ராவ் ஏற்றிருக்கிருர். எஸ். சி. கிருஷ்ணன் இசை அமைத்து வருகிருர். கதை,

வசனத்தை ஏ. எல். நாராயணன் எழுதியிருக்கிறார்.

ராணியின் படம்

ராணி புரொடக்ஷன்ஸார் தங்கள் முதல் படத்தில் நடிப்பதற்காக பண்டரிபாய், மைனுவதி, குலதெய்வம் ராஜகோபால், எஸ். வி. சுப்பய்யா முதலியோரை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். சிவப்பிரகாசம் என்பவர் இப்படத்தை டைரக்ட் செய்யப் போகிறார்.

வீனஸின் அடுத்தது

'கல்யாண பரிசு' படத்தைத் தெலுங்கில் தயாரித்துக் கொண்டிருக்கும் வீனஸ் பிக்சர்ஸார், 'சியாமளி' என்ற படத்தை ராஜஸ்ரீயின் கூட்டுறவோடு, அடுத்து தயாரிக்கப் போகிறார்கள். இதைத்தவிர, 'தேன் நிலவு' என்ற படத்தையும் அவர்கள் சொந்தத்தில் தயாரிக்கப் போகிறார்கள். இவ்விரண்டு படங்களின் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை ஸ்ரீதர் ஏற்றிருக்கிறார். தவிர, வசந்தி என்ற ஒரு சட்டக் கல்லூரி மாணவியையும் இவற்றின் மூலம் திரையுலகுக்கு வீனஸ் பிக்சர்ஸார் புது முகமாக அறிமுகப்படுத்தவிருக்கிறார்கள்.

அன்புக்கோர் அண்ணி

பத்மா பிலிம்சாரின் இரண்டாவது தயாரிப்பான "அன்புக் கோர் அண்ணி" முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. பொங்கல் வெளியீடான இப்படத்தை டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்து வருகிறார். ஏ. எம். ராஜா இசை அமைத்து வரும் இதன் கதை, வசனத்தை மா. ரா. எழுதியிருக்கிறார். பண்டரிபாய், மைனுவதி, எம். சரோஜா, தங்கவேலு, டி. பாலசுப்பிரமண்யம் முதலியோர் நடித்து வரும் இப்படம் பிலிம்சென்டரில் தயாராகி வருகிறது.

யானைப் பாகன்

தேவர் பிலிம்ஸ் அடுத்து தயாரிக்கப் போகும் 'யானைப் பாகன்' படத்தின் பெரும்பாலான காட்சிகள் கேரள நாட்டிலுள்ள காடுகளில் படமாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் பிரதம பாகத்தில் ஜெமினி கணேசன், பி. சரோஜாதேவி இருவரும் நடிக்கப் போகிறார்கள். எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்யும் இப்படம் ஒரு யானைப் பாகனின் பயங்கரம் பல நிறைந்த வாழ்க்கையைச் சித்தரிக்கும்.

ஆயிரத்தில் ஒருவன்

பிரேம் நசீர், 'வளையாபதி' முத்து கிருஷ்ணன், டி. ஆர். ராமச்சந்திரன், என். லலிதா முதலியோரை நடிக்க வைத்து பானு பிலிம்ஸார் ஒரு படத்தைத் தயாரிக்க முனைந்திருக்கிறார்கள். 'ஆயிரத்தில் ஒருவன்' என்ற இந்தப் படத்தின் கதை, வசனங்களை சோமு எழுதியிருக்கிறார். ராமமூர்த்தி டைரக்ட் செய்யும் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.

தமிழில் 'கைதி 911'

ஹிந்தியில் வெளி வந்து வெற்றியடைந்த 'கைதி 911' என்ற படத்தை மாடர்ன் தியேட்டர்ஸார் தமிழில் தயாரிக்கப் போகிறார்கள். ஏ. எஸ். ஏ. சாமி இந்த படத்தை டைரக்ட் செய்ய அமர்த்தப்பட்டிருக்கிறார். மனோஹர், ரங்கராவ், எஸ். வி. சுப்பய்யா, தங்கவேலு, ஜாவர் சீதாராமன் முதலியோர் இதில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

'நாகநந்தினியில்' மாற்றம்

பி. வி. என். புரொடக்ஷன்ஸாரின் 'நாகநந்தினி' படத்தில் டைரக்டர் டி. ஆர். ரகுநாத்தின் ஸ்தானத்தில் ஜி. ஆர். நாதன் அமர்த்தப்பட்டிருக்கிறார்.

வீரசிவாஜி

பரணி ஸ்டுடியோவில் 'வீர சிவாஜி' என்ற படத்தின் ஆரம்ப விழா சென்ற மாதம் நடைபெற்றது. முற்றிலும் சிறுவர், சிறுமியரை நடிக்க வைத்து இப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது. சின்ன அண்ணாமலை கதை, வசனம் எழுதியிருக்கும் இந்தப் படத்தை பிரபல மராட்டி எழுத்தாளர் தாதா மிராசி டைரக்ட் செய்கிறார். வெற்றிவேல் பிலிம்ஸார் படத்தைத் தயாரித்து வருகிறார்கள்.

உமா பிக்சர்ஸ்....

சித்தூர் ராணி பத்மினி

பணத்தை ந்ராகச் செலவழித்து உமா பிக்சர்ஸார் "சித்தூர் ராணி பத்மினி" தமிழ்ப் படத்தை பிரம்மாண்டமான முறையில் தயாரித்து வருகிறார்கள்.

இதற்காக மிகப் பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 'சக்கரவர்த்தித் திருமகள்' படத்தைத் தொடர்ந்து அவர்கள் தயாரிக்கும் படம் இது.

சிவாஜி கணேசன், டி.எஸ்.பாலையா, எம். என். நம்பியார், வைஜயந்திமாலா காகா ராதாகிருஷ்ணன், முத்துலக்ஷ்மி, புளிமுட்டை ராமசாமி முதலியோர் நடித்து வருகிறார்கள். ஹெலனின் நடனம் இதிலே சிறப்பாக இருக்கும். ஸியெச். நாராயணமூர்த்தியின் டைரக்ஷனில் இப்படம் வளர்ந்து வருகிறது.

'கலைஞர் திலகம்' ஸ்ரீதர் இப்படத்திற்கான திரைக் கதை - வசனங்களை எழுதி யிருக்கிறார். அடுத்த ஆண்டில் வெளி வரும் மிகப் பெரிய படமாக "சித்தூர் ராணி பத்மினி" விளங்கும்.

செய்திப் படங்கள்



நடிகை ஜெயஸ்ரீ புது மனை புகுவிழாவின் போது 1. கிரகப்பிரவேசம். 2. பால் பொங்குகிறது. 3-4 விழாவிற்கு வந்த என். டி. ராமராவ், நாகேஸ்வரராவ் முதலானோருடன் ஜெயஸ்ரீ.

போட்டோக்கள்:



1. ‘மருதநாட்டு வீரன்’ வெளிப்புறக் காட்சிக்காக பனாலாவுக்குச் சென்றபோது எடுத்தபடம். சிவாஜிக்கும், டைரக்டர் ரகுநாத்துக்கும் இடையே இருப்பவர் மராட்டி படப் பிரமுகர். 2. அங்கு ஒரு பள்ளி விழாவில் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார் சிவாஜி கணேசன். 3. ‘சதி துளசி’ படத்தின் ஆரம்ப விழாவில் எடுத்த படம்.



'ஸ்வர்ணசுந்தரி' ஹிந்திப் பதிப்பின் சங்கீத டைரக்டரான ஆதிநாராயணராவ், சென்ற ஆண்டின் சிறந்த சங்கீத டைரக்டரென, பம்பாய் சினிமா பத்திரிகையாளர்கள் சங்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கௌரவிக்கப் பட்டார். இதையொட்டி, சாவித்திரி, எஸ். வரலக்ஷ்மி, நாகேஸ்வரராவ், நாகய்யா, ராமராவ் முதலியோர் ஒன்று சேர்ந்து ஒரு பாராட்டு விழாவை சென்னை நீதிபதி பி. வி. ராஜமன்னார் தலைமையில் நடத்தினார்கள்.

G.K. புரொடக்ஷன்ஸ்
சகோதரி
படக் காட்சிகள்
PSR







நியூ ஏஞ்சல் புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
R.A. பிக்சர்ஸாரின்



ஆர். ஏ. பிக்சர்ஸ் தயாரிப்பான இதில் மகாலிங்கம், டி. கே. ராமச்சந்திரன், வி. ஆர். ராஜகோபால், மாலினி, சுந்தரிபாய் முதலியோர் நடித்து வருகிருர்கள்.

உங்கள் சருமத்திற்கு

மிருதுத்தன்மை அளிக்க
அதிக கிளிஸரின்

பாதுகாப்பிற்கு
லேனேலின்

கிருமிகளை அழிக்க
ஆக்டமொர்

மகிழ்வளிக்கும் **புதுமை** மிகுந்த

OK ஓ.கே சந்தன சோப்

இதோ உங்கள் கனவு நனவாகிறது. பரிபூர்ண அழகும், வசீகரமும், வழி வழியாக வந்த உன்னதச் சிறப்பு மங்காமல், உங்களுக்குச் சுலபமாகக் கிடைக்க வழி, பரவசமூட்டும் புதிய ஓ. கே. சந்தன சோப். பரிசுத்தமான சந்தனத்தைலம் வேண்டிய அளவு இதில் இருக்கிறது. அதோடு நன்மைகள் பல அளிக்கும் நவீன லேனேலின்; ஆக்டமொர்; அதிகப்படியான கிளிஸரின் ஆகியவற்றின் தன்மைகளையும் சேர்த்துக் கணக்கிடுங்கள். இந்திய டாய்லெட் சோப்புகளிலேயே சிறந்தது. இந்த சோப்புதான் எனக் கூறுகிறோம் நாங்கள். ஏனென்றால்,

- வரளச்செய்யும் வெய்யில், காற்று, உஷ்ணம் ஆகியவற்றை எதிர்த்து, மிருதுவான சருமத்தின் பட்டுத் தன்மைக்கு அவசியமான ஈரப்பசையை பாதுகாக்கிறது லேனேலின்.
- அழுக்குக் கிருமிகள் மூலம் அபாயம் நேராமல் பாதுகாத்து, சருமத்திற்கு ஆரோக்கியம் அளிக்கிறது ஆக்டமொர்.
- மிகவும் மென்மையான சருமத்திற்கும் இதம் அளிப்பது அதிகப்படியான கிளிஸரின்.

எல்லாவற்றிற்கும் மேலாக சந்தனத்தின் இனிமை மிகு சுகந்தம்

இனும்

ஓ. கே. அறிமுகப்
பரிசளிப்பு
(3 மாதங்களுக்கு மட்டும்)
3 கட்டி ஓ. கே. சந்தனசோப் வாங்குங்கள் கவர்ச்சிகரமான தந்த முலாம் சோப்புப்பெட்டி ஒன்றை முற்றிலும் இலவசமாகப் பெறுங்கள்.

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1.

EP

விட்டுங்கள் / விட்டுங்கள்

பாகப் பிரிவினை

கணவனுக்கு வைத்தியம் செய்வதற்காகச் சென்னை செல்லும் பொன்னி ஊருக்குக் கடிதம் எழுதுகிருள். சுந்தரலிங்கத்திற்கு அதை தபால்காரர் வாசித்துக் காட்டுகிருர். ஆனல் பிறகு அதே பொன்னி கணவனுக்கு மின்சார சிகிச்சை செய்யப்பட விருப்பதுபற்றி எழுதும் கடிதத்தை சுந்தரலிங்கமே படித்தறிவதாகக் காட்டப்படுகிறது. முன்னுக்குப் பின் முரணுக உள்ள இக்காட்சியை வெட்டி விடலாம். கடிதம் வந்தது; யார் மூலமோ படித்தறிந்தார் என்று ஏதாவது வசன மூலம் விளக்கி யிருக்கவேண்டும்.

வி. கோசன்-
வலம்புரி.

இதோ இவர் போர்க்கோலம் பூண்டு விட்டார். இனி எதிரிகளின் தலைகளுடன்தான் திரும்புவார். — ராஜ மாணிக்கம் செட்டியாரின் -''ராஜபக்தி'' படத்தில் சிவாஜி கணேசன்.

கண் திறந்தது

வள்ளி குடத்தில் தண்ணீர் மொண்டு வரும்போது முத்து பள்ளிக்கூடம் செல்லாமலிருப்பது கண்டு புத்திமதி கூறுகிருள். அப்போது அவள் தந்தையும் அங்கே வருகிருர். கடைசியில் மூவரும் தத்தம் வழியில் செல்கின்றனர். வள்ளி குளத்திலிருந்துதான் தண்ணீர் மொண்டு வந்திருக்கிருள். அவள் அப்பாவுடனும் முத்துவுடனும் பேசிக்கொண்டிருக்கும்போது இடுப்பில் குடம் இருக்கிறது. ஆனல் குடம் காலியாகஇருக்கிறது! குளத்திலிருந்து நீர் கொண்டு வரும் காட்சியை வெட்டலாம்-அல்லது குடத்து நீரை ஏதாவது பாத்திரத்தில் கொட்டுவதாகக் காட்டலாம்.

ஆர். பி. ஈஸ்வரன்,
பெங்களூர்.

அவள் யார்

ரவிச்சந்திரன் ஒரு புகழ் பெற்ற இசைக்கலைஞன். அவன் பாட்டைப் புகழ்ந்து எழுதும் விஜயா நேரில் வந்து இசை பொழிய வேண்டுமென்று எழுதுகிருள். ஆனல் வீட்டுத் தோட்டத்தில் அவன் இரவு வருவதாக எழுதுகிருன். கண்ணியமான முறையில் உலவுபவன் அயோக்கியனுக இருந்தால்கூட, அவள் வீட்டு தோட்டத்திற்கு இரவு வருவதாக எழுதாமல் தன் இருப்பிடம் வருமாறுதான் எழுதுவான். அவள் வீட்டுத் தோட்டத்திற்குச் சென்று இந்த அளவுக்கு மட்டமாக நடக்க மாட்டான். அவனை அவள் வரவேற்று வீட்டாருக்கு அறிமுகப்படுத்தி வீட்டில் பாடச் செய்வாளே ஒழிய தோட்டத்தில் அல்ல. அவளது பாத்திர அமைப்புக்குக் காட்டப்படும் அப்பாவித்தனம் அந்தக் காட்சியில் பிரதிபலிக்கவில்லை. ஆகவே இரு பாத்திரங்களுக்கும் களங்

கம் கற்பிக்கும் இக்காட்சியை வெட்டிவிடலாம்:

பார்த்தசாரதி,
தாம்பரம்.

"ஏய். ஏய்! நீ என்னெ காதலிக்க மாட்டியா?" —அஞ்சலி பிக்சர்ஸ் "அடுத்த வீட்டுப் பெண்" படத்தில் டி.ஆர். ராமச்சந்திரன்-அஞ்சலிதேவி.

அவள் யார்

மகாலக்ஷ்மிக்குப் பிறந்த மகன், பட்டம் பெற்று வாலிபனாகி மணக்கிறான். ஆனால் அவன் பிறக்காததற்கு முன்பே பருவத்தில் இருந்த ஆஷாவுக்கும் பூபதிக்கும், கண்ணனுடன் தான் சேர்ந்து திருமணம் நடக்கிறது. அதாவது சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு. அப்போதும் அவர்கள் எப்படி வாலிபமாகவே இருக்க முடியும்? இந்த ஆஷா-பூபதி 'அறுபதாம்



"இட்ட அடி நோக, எடுத்த அடி கொப்பளிக்க, தட்டிலிருப்பது ஆறிவிட" என்று பாட அவர் தயாராகி விட்டார்! சுபாஷ் மூவீஸாரின் "ஆணுக்கொரு வீடு" படத்தில் சத்யன், பேபி மாலதி, எல். விஜயலக்ஷ்மி.

ஆண்டு' திருமணத்தைக் காட்டாம விருப்பதுடன், படத்தில் இவர்களுக்கும் வயதானவர்களைப்போல் 'மேக்-அப்' செய்திருக்கலாம். இதேபோல் எல்லா பாத்திரதாரிகளுக்கும் 'மேக்-அப்' மாற்றி இருக்கலாம்.

பி. ராமன்,
சென்னை.

அவள் யார்

பறவையை வேட்டையாட வந்த பூபதி ஒரு மனிதனை தவறுதலாகச் சுட்டு விட்டதாக நினைக்கிறான். ஆனால் அம்மனிதனோ மரணமடையவில்லை என்பதை மற்றொரு காட்சி காட்டுகிறது. சுட்டவன் பீதியடைவான் என்பது உண்மையானாலும், சுடப்பட்டவர் உடலிலிருந்து ஒரு துளி ரத்தம்கூட வரவில்லை. இதைக்கூடவா ஒருவர் பார்க்காமல் நடுங்கிச் சாவார்?

சி. முத்துக்குமரன்,
தாம்பரம்.

''அவர் அப்படிப்பட்டவரல்லவே! என்னைவிட்டு அவர் எங்குமே போகமாட்டாரே! அவர் வராததற்குக் காரணம் எதுவாக இருக்கும்?'' - 'உமா பிக்சர்ஸ்' ''சித்தூர் ராணி பத்மினி''யில் 'விழி அழகி' வைஜயந்திமாலா.

பாகப் பிரிவினை

மின்சாரக் கம்பியில் சிக்கிக்கொண்ட பட்டத்தை எடுப்பதற்காக கம்பத்தில் ஏறிய சிறுவன் கன்னையன், தனது இடது கையால் கம்பத்தைப் பற்றிக்கொண்டு, வலது கையால் பட்டத்தை எடுக்க முயற்சிக்கிறான். அப்போது வலது கையில் மின்சாரம் தாக்கப்பட்டு கீழே விழுகிறான். ஆனால் கன்னையன் வளர்ந்து பெரியவனாகும்போது, 'தென்னை மரத்தில் தேள் கொட்டப் பனைமரத்தில் நெறிகட்டிய கதையாக' வலக்கரத்தில் மின்சாரம் பாய, இடக்கரம் ஊனமாக்கப்பட்டிருக்கிறது! தவிர, பிறிதொரு இடத்தில் கன்னையனின் கை, கால் ஊனமான தற்கான காரணத்தை மீனாட்சி பொன்னியிடம் விளக்கிக் கூறுவதாலும் முன்னுக்குப்பின் முரணாக இக்காட்சி விளங்கி விடுகிறது. எனவே சிறுவன் மின்சாரம் தாக்கி விழும் காட்சியை எடுத்து விடலாம்.

அன்னபூரணி மெய்யப்பன்,
சேலம்.

காரர்கள் குறுக்கிடாமலிருப்பது தானே நல்லது?

சாலமன்,
பம்பாய்.

பாக்ய தேவதை

தன் கணவன் செய்தது தவறு என எண்ணி சரளா என்ற பெண் துக்கமான பாட்டொன்றைப் பாடுகிருள். அப்போது அங்கு யாருமில்லை. அவள் பாடும்போது பாட்டுடன் வேறு சப்தமும் வருகிறது. இதனுல் அப்பாட்டின் இசை கெடுவதுடன், அந்தக் கட்டத்தின் மதிப்பும் குறைகிறது. இதை வெட்டி விடுவதனுல் படத்தில் விருவிருப்பை மேலும் கூட்ட முடியும்.

இராமலிங்கம்,
உமையாள்புரம்.

"இதோ வருகிறேன் என்றவர் இன்னும் வராததற்குக் காரணம் என்னவாக இருக்கும்? வரும் வழிமேல் விழிவைத்துக் கண்ட பலன்? ஏமாற்றம்தான்!" ஜூபிடர் பிக்சர்ஸ் "அமுதவல்லி"யில் எம். என். ராஜம்.

அவள் யார்

ரவிச்சந்திரன் ஒரு பெரிய புகழ் பெற்ற பாடகன். அவன் மேடைமீது ஏறி பாடவருகிருன். வந்தவுடன் வாழ்த்துப் பாடல் பாடப்படும் என்பதுதான் நாம் இதுவரை கண்டறிந்த உண்மை. ஆனல் இவனே வந்தவுடன் ஒரு காதல் பாட்டைப் பாடிவிட்டுப் போய் விடுகிருன். கச்சேரியைக் கேட்கவந்த பெண்கள் மெய்ம்மறந்து விடுவது போலக் காட்டப்படுகிறது. பின்பு ஒரு நபர் வந்து விசில் அடித்தவுடன் எல்லோரும் விழித்தெழுவதாகச் சித்ரிக்கப் பட்டிருக்கிறது. இது காட்சியின் தரத்தை மேலும் குறைத்து விடுகிறது. விசிலடித்து எழுப்புவதை வெட்டி விடலாம்.

கு. மாணிக்கம், தேனீ.

உலகம் சிரிக்கிறது

இப்படத்தில் எஜமானனையும் வேலைக்காரனையும் ஹாஸ்யம் என்பதன் அடிப்படையில் பொருந்தாத வகையில் பேச விட்டிருக்கிருர்கள். உதாரணமாக எஜமான், பணத்தை வசூல் செய்து வரும்படி வேலைக்காரனிடம் சொல்லும்போது "நான் போகமாட்டேன். ஏனென்ருல் நீங்கள் உங்கள் பெண்ணைத் தருவதாகச் சொல்லி அவர்களை ஏமாற்றி விட்டீர்கள். எனக்கு அங்கு போக அவமானமாக இருக்கிறது" என்று சொல்கிருன். இது சற்று மிகையாகவே தென்படுகிறது. இதை வெட்டி விடலாம். கூடுமான வரையில் குடும்ப விஷயத்தில் வேலைக்

உங்களுக்கும் — சினிமா நட்சத்திரங்களின்

பூந் தளிர் மேனி யழகு

"மேனியழகின் பராமரிப்புக்கான சாதனங்களில் மிகச் சிறந்ததென நான் கருதுவது **லக்ஸ் டாய்லெட் சோப்பே**; வாசனையும் சுத்தமும் மிகுந்தது அது!" என்கிருர் அழகுநட்சத்திரம் பி. சரோஜாதேவி. தூய, வெண்மையான **லக்ஸ்** சோப்பின் உதவியால் **உங்கள்** மேனியும் அதே அழகுடன் மிளிர முடியும்.

தூய, வெண்மையான **லக்ஸ் டாய்லெட் சோப்**

சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

இம்மாத நக்ஷத்திரங்கள்

இம்மாத நக்ஷத்திரம் என்ற தலைப்பில், குறிப்பிட்ட படத்தில் சிறப்பாக நடித்த நடிகரைப்பற்றி நான் எழுதுவது வழக்கம். இம்மாதம் அதற்கு விதி விலக்காக மூன்று பேரைக் கௌரவிக்கிறேன். முன்பும் இதேபோல, 'சம்சாரம்' படத்தில் நடித்த எம். கே. ராதா - புஷ்பவல்லி இருவரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

இம்மாத நக்ஷத்திரங்கள் மூவர். ஒருவர் சூத்திரதாரி; ஒருவர் உத்தமக் கதாநாயகர்; மூன்றுமவர் வில்லன். சரவணா பிலிம்ஸார் தீபாவளியன்று திரையிட்ட ''பாகப்பிரிவினை''யில் இம்மூவரும் வைத்தியலிங்கம் - கன்னையன் - சிங்காரம் என்ற பெயர்களில் வருகிறார்கள். வைத்தியலிங்கம் அந்த மிராசுக் குடும்பத்தில் மூத்தவர். தம்பி மகனைத் தன் மகனாக வளர்த்து, அவன்தான் தனது உயிர் என்றிருப்பவர். அவனுக்காக எதையும் செய்யத் துணியும் மனம் மட்டும் அவரிடமிருந்து செயல் வேறாகிவிடும் நிலை ஏற்படுகிறது. மனைவியின் கொடுமையால், தம்பி, சுந்தரலிங்கத்துடன் பாகப்பிரிவினை செய்து கொள்கிறார். அப்போது பெற்றோரின் படத்துடன் வந்து தம்பியிடம் மன்னிப்புக் கேட்டுக் கதறுகிறார் வைத்தியலிங்கம். நாமும் அழுகிறோம், அப்போது வில்லனாகப் புகழடைந்து, நடிப்புத் துறையில் யாரும் அண்டமுடியாத அளவு உயர்ந்துவிட்டு, சமீபமாக ஹாஸ்ய பாகத்திலும் சோபித்த டி. எஸ். பாலையா, இந்தப் படத்திலே முற்றிலும் புதுமாதிரியான பாத்திரமேற்று அற்புதமாக நடித்திருக்கிறார். சுவற்றுக்கு இந்தப்புற மிருந்து கன்னையன் தம்பதிகளுக்கு மஞ்சளரிசி போட்டு வாழ்த்தும்போது, அவரிடம் காணும் மகிழ்ச்சி; பொன்னிக்காக மனைவி யறியாமல் மாம்பழம் திருடித் தருகிறாரே அப்போது அவரிடம் காணும் திருப்தி; கடைசியில் 'மாமா என்று மட்டும் கூப்பிடாதே' என்று வெறுத்துக் கூறுகிறாரே அதிலிருக்கும் கிண்டல் இவை பாலையாவின் திறனைக் கூறாமல் கூறுகின்றன.

கன்னையன் !

தோற்றம், பார்வை இரண்டினாலுமே நம் உள்ளத்தின் அடித்தளத்திலே வேதனையைக்கிளறி விடுபவன் அவன். சிவாஜி கணேசனுக்கு இந்த ரசிகர்களின் மேல் என்ன கோபமோ தெரியவில்லை. ஆரம்பம் முதல் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களை அழச் செய்கிறார்!

கழுநீர்த் தொட்டியில் விழுந்து விட்டு எழுந்திருக்க முடியாமல் கன்னையன் அவஸ்தைப் படுவதறிந்து வேதனைப்படுகிறோம்.

பொன்னியிடம் தன்னைப் பற்றிக் கூறி வேதனைப்படும் மீனாட்சியிடம், ஊருக்கு நல்லது வந்தால் ஒரு சிலர் பாதிக்கப்படத்தான் செய்வார்கள் என்று கன்னையன் கூறுகிறானே, அப்போது பார்வையை மறைக்கும் கண்ணீருடன் அவன் மொழி கேட்டு அவன் அறிவுத் திறனை வியக்கிறோம்.

சிங்காரத்தின் ஆங்கிலச் சொற்றொடர்கள் கேட்டு 'தமிழ்லே பேசுடா' என்று மொழிப் பெருமை பேசுகிறானே, அந்தத் தமிழனின் பண்பு கண்டு பாராட்டுகிறோம்.

வீடு திரும்பிய தம்பியிடம் சிங்காரத்தை ஆங்கிலத்தால் ''மாட்ட''ச் சொல்லுகிறானே, அந்த அண்ணனின் மகிழ்ச்சி கண்டு பூரிக்கிறோம்.

தம்பிக்குத் தண்ணீர் இழுத்துக் கொடுக்க முன் வந்து, இயலாமல் தவிக்கும் கன்னையனைக் கண்டு நம்மனம் ஏங்குகிறது.



மணப் பந்தலிலே தந்தையின் உடல் நலம் குறித்துப் புத்திபோதிக்கும் அண்ணனைக் கண்டு, படித்தவனுக்கு அனுபவம் போதனை செய்வது

கண்டு வேதனையிலும் சிரிக்கிறோம்.

வர மறுக்கும் தம்பியிடம் தாலி பாக்கியத்திற்காகத் தாய் வேதனைப்படுகிறாள் எனக் கூறி, 'உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றதற்குக் கூலியாகவாவது வாடா' என்கிறானே அப்போது தாய்ப் பாசத்தின் சிறப்பை அறிகிறோம்.

தன்னை பொன்னியின் கணவனுக்குத் தீர்மானிக்கும் பெற்றோரின் மொழி கேட்டு அவர்களிடம் அது தவறு என்று வாதாடுகிறான் கன்னையன். அவனைப் பார்க்கும்போதே ஏதோ தீராத வேதனை நம்மை உலுப்பி விடுகிறது. விம்மும் இதயத்தை இடது கையால் அழுத்திக் கொண்டு. வலது கையில் கைக்குட்டையை எடுத்துக் கொள்ளுகிறோம். "ஒனக்கு பொன்னிமாதிரி ஒரு பொண்ணிருந்து, என்னை மாதிரி நொண்டிப் பயலுக்குக் கல்யாணம் பண்ணிக் குடுன்னா உன்னுடைய மனசு என்ன கஷ்டப்படும் சொல்லும்மா?" என்று இதயத்தைத் திறந்து காட்டி, அப்பனுக்கு அப்பனாகிறானே, அந்த அறிவாளியின் உடல் நிலையை நினைத்துத் துடிக்கிறோம்.

பொன்னி அங்கே புகுந்து அவனைக் கணவனாக ஏற்றவுடன் அவர்களுக்கு முன்னால் நிற்க முடியாமல் நவரசங்களையும் பிரதிபலித்தபடி தூர வந்து நிற்கிறானே அப்போது "ஆஹா கன்னையா!" என்று வேதனையால் வெடித்து விடுகிறோம். நினைவு மீள வெகு நேரமாகிறது நமக்கு.

பொன்னியிடம், தான் அப்பாவாகப் போவதை ரகசியமாகக் கூறுகிறானே, அப்போதுதான் நாம் கபடற்ற வாலிபனின் நிலையை நன்கு ரசிக்கிறோம்.

'என்னைத்தானே திட்டுகிறார்கள்?' என்று கூறி மனைவிக்கு ஆறுதல் கூறுகிறானே, அந்த உத்தமக் கணவனின் பண்பு கண்டு மனமகிழ்கிறோம்.

தன் வாழ்வே முடியப் போவதாக அவள் நினைக்கும் சமயம், தவறுணர்ந்த தம்பி வருகிறான். அவனிடம் விரக்தியுடன் பேசும் அண்ணனின் நிலை நம்மை வேதனைப்படச் செய்கிறது.

கடைசியில் கை, கால் சுவாதீனம் பெற்ற அவன் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கும்போது, நம் உள்ளத்திலும் ஆனந்தம் துள்ளுகிறது.

இந்தக் கட்டங்களிலெல்லாம் அசல் கிராமத்தானாக, அப்பாவியாக முடவனாக நம்முன்னே வாழ்ந்து காட்டிவிட்டுப் போகும் சிவாஜி கணேசன், நம்மை அழச்செய்வதாக நினைத்து ஏமாறுகிறார்! நாம்தான் அவருடனேயே ஒன்றிவிடுகிறோமே!

தோன்றும் கட்டங்களிலெல்லாம் வாழ்வின் குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டியபடி, ஏமாற்றிப் பிழைக்கும் கபடவேஷதாரியின் பாத்திரத்திலே அற்புதமாக நடித்திருக்கிறார் எம். ஆர். ராதா.

சிங்காரம்! அவனிடம் ஏமாறாதவர் யாருமில்லை. அவன் கொடுமைக்குப் பலியாகாதவர் யாருமில்லை. தன்னைத்தவிர, யாருமே வாழக் கூடாது என்ற கொடுமையுள்ளம் படைத்த சிங்காரமாகவே ராதா மாறி விட்டார் என்றால் மிகையாகாது.

மூவரும் அற்புதமாக நடித்துப் படத்தின் வெற்றிக்குக் காரணமாயிருந்திருக்கிறார்கள். ஆகவே அம்மூவரையுமே இம்மாத நக்ஷத்திரங்கள் எனக் குறிப்பிட்டிருக்கிறேன்.

பளபளப்பான
நீண்ட கரும்
கூந்தலழகுக்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட் ஹேர் ஆயில்
இப்பொழுது அழகான இப் புதுமாதிரி சீசாவில்
ரோஜா அல்லது மல்லிகை
மணத்துடன் கிடைக்கிறது.
ERASMIC
PERFUMED
COCONUT
HAIR OIL
JASMINE

ஆஸ்திக்கொரு ஆணும் ஆசைக்கொரு பொண்ணும்

கலைஞர் ஏ. பி. நாகராஜன் நீண்ட தலைப்புக் கொடுத்து எழுதியிருக்கும் ''ஆஸ்திக்கொரு ஆணும் ஆசைக்கொரு பொண்ணும்'' என்ற கதையை தினகரன் பிக்சர்ஸார் படமாக்கி வருகிறார்கள்.

கே. சோமு டைரக்ஷனில் வளரும் இப்படத்தில் கண்ணாம்பா, எம். என். ராஜம், பிரேம்நசீர், வி. கே. ராமசாமி, மாதுரிதேவி, கே. சாரங்கபாணி, டி. கே. ராமச்சந்திரன், 'குலதெய்வம்' ராஜகோபால், மனோரமா முதலியோர் நடித்து வருகின்றனர். இப்படம் விரைவில் திரையிடப்பட விருக்கிறது.

வாழ்க்கையின் அன்றாடச் சம்பவங்களை வைத்துப் பின்னப்பட்ட இந்தப் படத்தின் கதை ஜனரஞ்சகமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

மருதகாசி பாடல்கள் இயற்றியிருக்கிறார். கே. வி. மகாதேவன் இந்தப் படத்தின் சங்கீத டைரக்டர். தயாரிப்பாளர்களுக்கு இப்படம் வெற்றி தேடித்தரும் என்று நம்பலாம்.

தொன்று தொட்டு நமது தமிழ் நாட்டில் இருந்து வரும் நடைமுறைச் சட்ட திட்டங்கள்படி குடும்பத்தின் ஆண் சந்ததிகள் சொத்தை அனுபவிக்கும் பிறவிகளாகக் கருதப் படுகிறார்கள். பெண்கள் மணமாகி கணவனுடன் செல்வதால் அவர்களுக்குச் சொத்தில் பாகம் செய்து தரப்படுவதில்லை. அவள் சென்ற இடத்தை - செலவு வைக்கும் பெண்ணொருத்தி - நாட்டுப் பெண் என்ற பெயரில் அந்த விட்டில் நுழைந்து ஈடு செய்து விடுவதால் சொத்து அங்கேயே தங்குகிறது. இந்தக் குடும்ப வாழ்க்கையின் பிரதிபலிப்புகளையும் அவற்றால் ஏற்படும் விளைவுகளையும் எடுத்துக் கூறும் விதத்திலே இப்படம் இருக்கும் என்று நம்பலாம்.

இடையிலே சிறிது காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இதன் படப்பிடிப்பு இப்போது மிக விரைவாக நடைபெற்று வருகிறது. இப்போது வளரும் வேகத்தைப் பார்த்தால் இவ்வாண்டு இறுதிக்குள் வந்துவிடும் போலிருக்கிறது.







அவள் யார் ?

அபலை அஞ்சுகம்

புதிய வெளியீடுகள்

அவள் யார்

தயாரிப்பு : சுதர்சனம் பிக்சர்ஸ்
டைரக்ஷன் : கே. ஜெ. மகாதேவன்
வசனம் : வே. லட்சுமணன்
நீளம் : 16,591 அடிகள்
வெளியிட்டதேதி : 30-10-59.
நடிகர்கள் : சிவாஜி கணேசன், டி. கே. ஆர்., டி. ஆர். ஆர்., பண்டரிபாய், சவுகார்ஜானகி, மாலினி, சந்தியா.

தந்தையின் நன்மைக்காக சதாசிவம் என்ற வக்கிலின் இரண்டாம் தாரமாகிறாள் மகாலக்ஷ்மி. பணப்பேய் பிடித்த பகதூர் என்பவன் அகாரணமாக அவள் மீது மாசு கற்பித்து அந்தக் குடும்பத்தைச் சிதைக்கிறான். மகாலக்ஷ்மி தன் குழந்தையுடன் வெளியேறுகிறாள். வழியில் குழந்தை மணிவேலு என்ற பெரிய மனிதரிடம் அகப்படுகிறது. குழந்தை கண்ணன் வளர்ந்து பெரியவனாகிப் படித்துப் பட்டம் பெற்று வக்கிலாகிறான். அப்போது சதாசிவம் நீதிபதியாகி விடுகிறார். புத்திஸ்வாதீனமில்லாதிருந்த மகாலக்ஷ்மி குணமடைந்து, கண்ணனின் காதலியான விஜயாவின் வீட்டில் வேலை செய்கிறாள். அப்போது அவளுக்கு கண்ணன் யாரென்று தெரிந்து விடுகிறது.

அதே சமயம் கண்ணன் விஜயா இருவரின் வாழ்வையும் சூரையாட பகதூர் செய்யும் சூழ்ச்சியிலிருந்து இளம் ஜோடிகளைத் தப்புவிக்க மகாலக்ஷ்மி முயலும்போது அவள் மீது கொலைக் குற்றம் சுமத்தப்படுகிறது.

நீதிபதி சதாசிவம் தீர்ப்புக் கூறுமுன் உண்மைக் குற்றவாளிகள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்வதால் மகாலக்ஷ்மி நிரபராதி என்பதும், அவள் யார் என்பதும் வெளிப்படுகிறது.

'அந்த நாள்' என்ற நூலிலே கோர்க்கப்பட்ட புதுமை கலந்ததொரு முத்துமாலை இந்தக்கலை நுணுக்கப்படம். 'சஸ்பென்ஸ்' என்ற பிரதான கருப்பொருளை சிறப்பாக உள்ளடக்கி யிருப்பது இப்படத்தின் விசேஷ அம்சம்.

அபலை அஞ்சுகம்

நயாரிப்பு : அருணா பிலிம்ஸ்
டைரக்ஷன்: ஆர். எம். கிருஷ்ணசாமி
கதை, வசனம் : ஏ. எல். நாராயணன்
நீளம் : 15,970 அடிகள்
வெளியிட்டதேதி : 31-10-59
நடிகர்கள் : டி. ஆர். மகாலிங்கம், வி. ஆர். ராஜகோபால், சௌகார் ஜானகி, எம். என். ராஜம், மதுரம்.

நிரபராதியான அஞ்சுகம் யாரோ செய்த குற்றத்துக்காக சிறைவாசம் செய்கிறாள். விடுதலையடைந்ததும் மேகராஜபுரம் ஜமீன்தாரிணியிடம் வேலைக்கமருகிறாள். அங்கு முன்பேயிருந்த நிர்மலாவின் எல்லாப் பொறுப்புக்களும் அஞ்சுகத்தின் கையில் மாறவே பொறாமை கொண்ட நிர்மலா, அஞ்சுகத்தின் மேல் திருட்டுக் குற்றம் சுமத்தி அவளை வெளியேற்றுகிறாள்.

அஞ்சுகம் தனது பழைய நண்பர்களான சொக்கன், குப்பம்மாள் ஆகியவர்களை யடைகிறாள். நிர்மலாவை நாடி நியாயம் கேட்கப் போன சொக்கன் கடைசியில் அவள் சொல்படியெல்லாம் ஆட ஆரம்பிக்கிறான். காணாமற்போன ஜமீன் வாரிசு விஜயரங்கமாக நடித்து ஜாமீன் மாளிகையில் வசிக்கிறான்.

இதற்கிடையில் உண்மை ஜமீன்தார் வந்து விடவே அவனை ஒழிக்க நிர்மலா திட்டம் தீட்டுகிறாள். இதில் அஞ்சுகம் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டு எல்லா உண்மைகளையும் வெளிப்படுத்துகிறாள்.

மகாலிங்கம் நிறையப் பாடியிருக்கிறார்; ஆனால் சம்பந்தமில்லாமல் இருக்கின்றன அவரது பாடல்கள். படிக்கும்போது இக்கதையில் இருந்த பிடிப்பும் ஸ்வாரஸ்யமும் படமாக்கப்பட்ட பின் குறைந்து விட்டன.



கண் திறந்தது

தயாரிப்பு: நாராயணன் கம்பெனி
கதை, வசனம், டைரக்ஷன்: கே. வி. ஸ்ரீநிவாசன்
நீளம்: 14,229 அடிகள்
வெளியிட்ட தேதி: 31-10-'59
நடிகர்கள்: மாஸ்டர் வியாஸ், சகஸ்ரநாமம், மைனுவதி, ராமனுதன், மதுரம், சூர்யகலா.

தாயற்ற ஒரு சிறுவன் தறுதலையாகத் திரிகிருன். கொலைகாரப் போலி ஜமீன்தார் ஒருவரிடம் அவன் தந்தை வேலை செய்கிருர். நிஜ ஜமீன்தாருக்குத் துணையாக நின்று காலஞ்சென்ற ஜமீன்தாரின் உயிலையும் அவரிடம் சேர்த்துக் கதையை சுபமாக முடிக்கிருன் இந்தச் சிறுவன். அவனுடைய நல்ல முயற்சியைக் கண்டு அவன் தகப்பனுரின் மனம் மாறுகிறது.

மத்திய சர்க்காரின் குழந்தைகள் படப்பிரிவு தயாரித்த ஹரியா என்ற படக்கதையின் பாணியில் சிறுவர்களைக் கேந்திரமாகக் கொண்டு வெளி வந்திருக்கிறது இப்படம். தலைப்பு பொருந்தவில்லை. சிறுவனின் குணசித்திரம் முழுமையடையவில்லை. சமீபகாலப் படங்களின் கதைப் போக்கிற்கு இப்படக் கதை ஓர் ஆறுதலளிக்கும் மாறுதலைச் செய்திருக்கிறது.



பாகப்பிரிவினை

தயாரிப்பு: சரவணு பிலிம்ஸ்
டைரக்ஷன்: ஏ. பீம்சிங்
கதை, வசனம்: சோலைமலை
நீளம்: 16,769 அடி
வெளியிட்டதேதி: 31-11-59
நடிகர்கள்: சிவாஜி கணேசன், எம். ஆர். ராதா, பாலய்யா, சரோஜாதேவி, ராஜம்மா, என். லலிதா, சுப்பய்யா.

சுந்தரலிங்கம் மீனுக்ஷி தம்பதிகளுக்கு கன்னையன், மணி என்ற இரு புதல்வர்கள். கன்னையனுக்கு இளமையிலேயே மின்சாரத்தினுல் கைகால் விளங்காமற் போகிறது.

சுந்தரலிங்கத்தின் தமையன் வைத்தியலிங்கத்துக்கு குழந்தைகள் இல்லை. அவர் மனைவி அகிலாண்டம் மணியை ஆதரிக்கிருள். ஒரு சமயம் அகிலாண்டத்தின் அண்ணன் மக்களான சிங்காரமும் அமுதாவும் அங்கு வந்து சேருகின்றனர். அமுதாவின் காதலில் மயங்கிய மணி ஒன்றுபட்டிருந்த குடும்பத்தைப் பாகப் பிரிவினை செய்கிருன்.

இதற்கிடையில் சிங்காரத்தின் திருவிளையாடல்களால் ஆஸ்தி முழுதும் இழந்து அகிலாண்டம் அல்லல் படுகிருள். எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டுமென்று துணிந்த சிங்காரம் கன்னையனின் குழந்தையை ஷோ கொட்டகையில் யானையின் தும்பிக்கையில் வைக்க ஏற்பாடு செய்கிருன். இதை யறிந்த கன்னையன் ஷோ கொட்டகை சென்று குழந்தையை விடுவிக்க முயற்சிக்கும்போது தற்செயலாக மின்சாரத்தினுல் தாக்குண்டு கைகால் குணமடைகிருன். குழந்தையையும் யானையிடமிருந்து மீட்டு வருகிருன். அதேசமயம் பழைய

குற்றங்களுக்காக சிங்காரமும் கைது செய்யப்படுகிறான்.

கன்னையனுக்கு கைகால் விளங்கவில்லை என்று கற்பித்து அவனை அனுதாபப் பாத்திரமாகத் தீட்டியிருக்கிறார் இக்கதாசிரியர். இந்த ஓர் அம்சத்தைத் தவிர, கதையில் புதுமையில்லாததுடன் அசம்பாவிதங்களும் இருக்கின்றன. போதுமான அஸ்திவாரமற்றது சிங்காரம் என்ற பாத்திரம். ஷோ கொட்டகையும் அதில் யானைத்துதிக்கையில் குழந்தை வைப்பதும் திணிக்கப்பட்ட சம்பவங்களாகத் தனித்து நிற்கின்றன.

உணர்ச்சிகளை உலுக்கும் வகையில் கன்னையனாகத் தோன்றி சிவாஜி கணேசன் அற்புதமாக நடித்திருப்பது ஒன்றுதான் இப்படத்தின் மிகச் சிறப்பான அம்சம்.

தெய்வமே துணை

பார்வதியின் அத்தைமகன் ரத்தினம் ஒரு ரௌடி. அவனை மணக்க மறுத்து சங்கரை மணந்த பார்வதியின் வாழ்வைச் சீரழிக்க விரும்புகிறான் அவன். ரத்தினத்திடமிருந்து சங்கருக்கு ஒரு கடிதம் வருகிறது. அதில் பார்வதியின் குழந்தை ரவியைத் தன்னுடையதென்கிறான் ரத்தினம். இந்தக் கொடுமை தாங்காது வீட்டிலிருந்து வெளியேறிய சங்கர் பட்டணத்தில் பத்மாவைச் சந்திக்கிறான்.

கணவனால் கைவிடப்பட்ட பிறகு அண்ணன் வீடுசென்ற பார்வதி அண்ணியின் கொடுமை தாங்காமல்

தயாரிப்பு: எஸ். பி. எஸ். பிக்சர்ஸ்
டைரக்ஷன்: சி. எச். நாரயண மூர்த்தி.
வசனம்: கே. எம். கோவிந்தசாமி.
நீளம்: 16.412 அடிகள்
வெளியிட்டதேதி: 30-10-59.
நடிகர்கள்: ஏ. நாகேஸ்வரராவ் நம்பியார், டி. ஆர். ராமச்சந்திரன், பத்மினி, ராகினி, ஈ. வி. சரோஜா.

மகனுடன் சென்னை சேருகிறாள். அங்கு பத்மாவையும் சங்கரையும் பார்த்து, அவர்கள் வாழும் பொருட்டு, தான் தற்கொலைசெய்து கொள்ளமுயற்சிக்கிறாள். அப்போது அங்கே வந்த அவள் அண்ணன் சேகர் அவளைக் காப்பாற்றுகிறான். இதற்குள் சங்கருக்கும் பார்வதி மேலிருந்த சந்தேகம் தீர்ந்து விடுகிறது. மீண்டும் குடும்பம் ஒன்று சேருகிறது.

கதை, கருத்து, சம்பவங்கள் ஆகியவற்றில் புதுமையில்லாததுடன், ரத்தினம் முதல் முயற்சியின் போதும் இரண்டாம் முயற்சியின் போதும் உடனே கைதாவதாகக் காட்டுவதும், கடைசியில் அவன் உயிரை விடுவதும் (கார் விபத்தில் தான்), உயிரை விடும்போது உண்மையைச் சொல்வதும் - எல்லாமே சிரமப்படாமல் கதையெழுதியிருப்பதையே காட்டுகிறது. பத்மினியின் நடிப்பு இப்படத்தின் சிறந்த அம்சம்.

சேவல் மார்க்கு உயர்தர ஊதுவத்திகள்- வாசனைகள், கஸ்தூரி பத்தி, கதம்ப அத்தர், சுத்த சந்தன முகப்பவுடர், மட்டிப்பால் பத்தி, புனுகு, அரகஜா, வாசனை சந்தனப்பவுடர் ப்ளவர் டஸ்டு பாக்கெட் (ஆடைப்பெட்டியில் வைக்க).

கூந்தல் செழிக்க
நீலா
இளநரை தடுக்க

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரி தயாரிப்பு

பல விருத்திக்கு: ஆல்மன்டைன், ஓஜோலா.

சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, சென்னை-1.

இந்தப் பெண் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாக இருந்தாலும் இவளது பார்வை இவள் ஒரு விஷகன்னி என்று பறைசாற்றுகிறதே! ஜுபிடரின் "அமுதவல்லி" படத்தில் என். லலிதா.

சிட்டடெல் பிலிம் கார்ப்பொரேஷன் தயாரித்து வரும் ‘விஜயபுரி வீரன்’ முடிவடையும் கட்டத்திலிருக்கிறது. புதுமுகங்கள் பலர் நடித்துவரும் இந்தப் படம் பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளுடன் தயாராகிறது. ஜோசப் தளியத் தயாரித்து டைரக்ட் செய்யும் படம் இது.

பானு பிலிம்ஸ் அளிக்கும்
சபாஷ் ராமு
காட்சிகள்







சபாஷ் ராமுடு என்ற பெயரில் தெலுங்கில் வெளியிடப்பட்டு மகத்தான வெற்றி பெற்ற படத்தை 'சபாஷ் ராமு' என்ற பெயரில் பானு பிலிம்ஸார் தமிழ்ப்படுத்தி யிருக்கிருர்கள். அருமையான கதையமைப்பு கொண்ட இப்படத்தில் என். டி. ராமராவ், தேவிகா, எம். என். ராஜம், கிரிஜா, மாலினி, ரேலங்கி, கும்மிடி, காலஞ்சென்ற ஆர். நாகேஸ்வரராவ் முதலியோர் நடித்திருக்கிருர்கள்.


பானு பிலிம்ஸ் அளிக்கும்
சபாஷ் ராமு
காட்சிகள்



தபால் பெட்டி

* ஏற்றுக் கொள்வீர்களா?

ஆண்டுதோறும் 'பேசும் படம்' சிறந்த நடிகரைத் தேர்ந்தெடுத்து கௌரவிப்பது யாவரும் அறிந்ததே. அதில் ஒவ்வொரு ஆண்டும் 'நடிகர் திலகம்' தான் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார். இனியும் இவர் தான் கௌரவிக்கப்பட வேண்டும் என்பது எங்களுடைய ஆசை. நடிகர் திலகத்திற்கு ஈடு இணையே நடிப்பில் கிடையாது. இதனால் மற்ற எந்த நடிகரையும் தேர்ந்தெடுத்து கௌரவிக்க முடிவதில்லை. ஆகையால் நம் 'நடிகர் திலக'த்தை நிரந்தர சிறந்த நடிகராக்கி விட்டு, அடுத்தபடியாக சிறப்பாக நடித்திருப்பவரைத் தேர்ந்தெடுத்துக் கௌரவிக்க வேண்டும். இதனால் மற்ற நடிகர்களுக்குத் தக்க சந்தர்ப்பம் கிடைக்கிறது. இது என் தாழ்மையான வேண்டுகோள். இதை ஆசிரியர் ஏற்றுக் கொள்வாரென நம்புகிறேன்.

குமாரி. ஆர். கௌரி,
பெங்களூர்-3.

** பட்டுக்கோட்டையின் மறைவு

திரை உலகத்தின் தீந்தமிழ்க் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் மறைந்தது அனைவரும் வருந்தக்கூடிய செய்தியாகும். நல்ல முற்போக்கு கருத்துள்ள பாடல்கள் இயற்றுவதில் உள்ள வல்லமையை அவரது எழுத்து வண்மை இன்று நாட்டிலே பறைசாற்றி வருகின்றது. நாடோடி மன்னன், கல்யாண பரிசு, தங்கப்பதுமை ஆகிய படங்களுக்கு அவர் எழுதிய இனிமையான பாடல்கள் சிறப்பை ஏற்படுத்தி தற்போதைய நாட்டின் நிலைமையை தெளிவாகக் காட்டுவதாகவும் உள்ளன.

'தேனாறும் பாயுது. செங்கதிரும் சாயுது. ஆனால் - வயிறு காயுது.'

இவ்வாறு ரத்தினச் சுருக்கமாகவும், 'தூங்காதே தம்பி தூங்காதே' என்று வருங்கால இளைஞர்களுக்கு ஏற்ற வழியும் காட்டினார். 'பெண்களின் அழகை கண்ணாடியில் மட்டுமல்ல; நகத்திலே மைதீட்டி அதனுடைய பவள நிறத்திலேயும் பார்க்கலாம்' என்றும் உவமை கூறினார். வல்லமை சேர நல்லவனாக வளர்ந்தாலே போதுமடா என்று வாழ்வின் விளக்கம் தருகின்றார். இவ்வாறு இளம் வயதிலே அறிவும், அழகும், பண்பும் கொண்ட ஆழ்ந்த புலமையுள்ள கவிஞராக வாழ்ந்த இவரை காலன் பொருமை கொண்டு பறித்துச் சென்று விட்டான். தவிக்கின்ற மனைவி, இளம் குழவி, பெற்றோர் யாவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்.

''அவரு வந்தார் - இவரு வந்தார்
ஆடினார் - முடிவில்
எவருக்குமே தெரியாமல் ஓடினார் -
மனதில்
இருந்ததெல்லாம் மறந்து கண்ணை
மூடினார்''

என்று அவர் பாடலே அவர் மறைவைப் புகழ்பாடி நினைவாகப் பரப்புகின்றது.

பொருளாட்சியோன்,
பொள்ளாச்சி.

கண்ணியம் தேவை

இப்பொழுது வரும் தமிழ்ப் படங்களில் பெரும்பாலானவை ஆபாசமான ஆடையணிகளுடன் காணப்படுகின்றன. இது பெண்களை தலை குனியச் செய்கிறது. ஆபாசமான

---

* முதற் பரிசு ரூ. 15.

** இரண்டாம் பரிசு ரூ. 10

காட்சிகளை அமைத்தால்தான் படம் வெற்றிகரமாக நடைபெறும் என்ற எண்ணம் படவுலகில் இருந்து வருகிறது. குறிப்பாக 'காவேரியின் கணவன்' என்ற படத்தில் சூர்ய கலாவிற்கு ஆபாசமாக ஆடையலங்காரம் செய்துள்ளார்கள். இவைகள்குடும்பப்பெண்கள் பார்க்க தகுதியற்றதாகும். ஆபாசமான காட்சிகள் இல்லாத படங்கள் வெற்றியுடன் நடைபெறவில்லையா? சினிமாவே ஒழிய வேண்டும் என்று கூறுபவர்களுக்கு இது வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது போலாகும். ஆபாசக்காட்சிகள் இளைஞர்கள் மனதைக் கெடுக்கிறது. சினிமாவில் இம்மாதிரி காட்சிகள் வெளிவராமல் படத்தயாரிப்பாளர்கள் கண்ணியத்தைக் கடைபிடிக்க வேண்டும்.

எம். லத்தீப்,
பொள்ளாச்சி.

நடிகர் திலகத்துக்கு ஓர் யோசனை

சிவாஜி கணேசனை அமெரிக்காவிற்கு அனுப்பும்படி இந்திய அரசாங்கத்திடம் அமெரிக்க அரசாங்கம் கேட்டிருக்கிறது. இதற்கு இந்திய அரசாங்கம் சிவாஜி கணேசனிடம் அனுமதி பெற்று அமெரிக்காவுக்கு அனுப்பி வைப்பதாக வாக்களித்துள்ளது என்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறியது. இதைக் கண்டு தமிழகம் மிக்க மகிழ்ச்சி அடைகிறது. அண்மையில் மதுரையில் நடந்த கட்டபொம்மன் விழாவின் போது, "எனக்கு அமெரிக்காவுக்கு வரும்படி அழைப்பு வந்துள்ளது. எனக்கு விருப்பம் இருந்த போதிலும் இங்கு பல காரியங்கள் தடைப்பட்டு விடும் என்பதனால் நான் செல்ல மறுத்து விட்டேன்" என்று ஒரு பத்திரிகையில் வெளியான பேட்டியில் கூறியுள்ளார். இதைக் கண்டு மிக வருந்துகிறோம். அமெரிக்க மக்கள் நாகரிகம் உடையவர்கள். அவர்கள் இவர் வர மறுப்பதை அநாகரிகமாக எண்ணக் கூடும். மேலும் இவர் வலுவில் அமெரிக்கா செல்லவில்லை. அந்நாட்டு மக்கள் அழைப்பின் பேரில் தான் அமெரிக்காவுக்குச் செல்கிறார். இந்திய அரசாங்கமும் இவரை அனுப்பி வைப்பதாக வாக்களித்து விட்டது. ஆதலால் இவர் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், இந்திய அரசாங்கத்தின் மதிப்பைக் காப்பாற்றவும் பிப்ரவரி மாதம் அமெரிக்கா செல்ல வேண்டும்.

மா. பிரகாசம்,
பட்டிவீரன்பட்டி.

ஒரு ஏழை ஜிப்ஸியின் அலங்காரங்கள் கூட பத்மினியின் அழகை அதிகப்படுத்தவே செய்கின்றன. மதுரம் பிச்சர்ஸ் 'மீண்ட ஸ்வர்கம்' படத்தில்.

என்று வருமோ?

தமிழகத்தைச் சேர்ந்த திருச்சி, சென்னை வானொலி நிலையங்களில் தமிழ்த் திரைப்படப் பாடல்களுக்கு ஒரு நாளில் ஒதுக்கப்படும் நேரம் மிகச் சிறிதளவு. ஆனால் சிங்கள நாட்டைச் சேர்ந்த இலங்கை வானொலிநிலையத்தில் தமிழ்த்திரைப் பட பாடல்களுக்கென எட்டு மணி நேரம் ஒதுக்கப்படுகிறது. மேலும் தமிழ்மொழியின் சிறப்பையும் இனிமையையும் அயல் நாடுகளுக்கு உணர்த்துவதோடல்லாமல் 'வானொலி நிலையம்' என்று தூய தமிழில் அழைத்து தமிழ்மொழியின் பெருமையை எடுத்துரைக்கிறது. தமிழ்மொழியின் பெருமையை குறைப்பதோடு நில்லாது, வானொலி என்னும் தூய தமிழ்ச்சொல்லை 'ஆகாஷ் வாணி' என்றாக்கி தமிழ்மொழியின் பெருமைக்கு இழுக்கு தேடித்தருகிறது, தமிழ்நாட்டின் வானொலி நிலையங்கள். இவர்களுக்கு அறிவு புகட்ட ஒரே வழிதான் உண்டு. என்று தமிழ் திரைப்பட பாடல்களுக்கென அதிக நேரம் ஒதுக்கி 'ஆகாஷ் வாணி'யை 'வானொலி' யாக்குகிறார்களோ அன்றுவரை அந்த நிலையங்களுக்கு தமிழ் திரைப்பட இசைத் தட்டுக்களை ஒலிபரப்ப அனுமதி தரக்கூடாது. இந்த நிலை என்று வருமோ?

கே. எஸ். ஹாரிஸ்பாபு.
மதுரை.

நல்ல பண்பு

அண்மையில் வெளிவந்த ஜெயந்தி பிலிம்ஸாரின் ''வாழ்க்கை ஒப்பந்தம்'' என்ற தமிழ்ப் படம், இல்லற வாழ்க்கையின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. ஒரு வணிகன் தன் புதல்வியை ஆஸ்தியில்லாத, கல்வியறிவும் நன்னடத்தையும் உள்ள ஒரு வாலிபனுக்கு திருமணம் செய்வது, முற்போக்கான கருத்தை உடையது. மேலும் தமிழ் நாட்டுப் பெண்ணுக்கு கற்பு நெறியுடன், அச்சம், நாணம் என்ற சிறந்த அணிகலன்களோடு குடும்பத்தில் பங்கு கொள்ளும் விதம் உலகில் வாழும் மற்ற பெண்களுக்கு நல்ல படிப்பினை. நல்ல பண்போடுகூடிய கல்வியறிவுள்ள பெண் எவ்வித அச்சமும் பயமும் இல்லாமல் தொழிலில் ஈடுபட்டு ஊதியம் பெறலாம் என்ற கருத்து சாலச் சிறந்தது. இம்மாதிரியான சிறிதும் ஆபாசமில்லாத படங்களை பட முதலாளிகள் தயாரித்து மக்களுக்கு நல்லறிவைப் புகட்ட வேண்டும்.



வசதி மிக்க ஜிப்ஸி இவள். அலங்காரம் அமர்க்களப்படுகிறது. உமா மிக்சர்ஸ் ''சித்தூர் ராணி பத்மினி''யில் ராகினி.

இவ்வாறு செய்தால் சினிமா கலை முன்னேற்ற மடையும்.

ச. சித. கோலாசி ஆச்சி,
கானுடுகாத்தான்.

உங்கள் நண்பன்

சென்னை காவல் படையினரின் நூற்றுண்டு விழாவை முன்னிட்டுத் தயாரிக்கப்பட்ட 'உங்கள் நண்பன்' படம் பார்த்தேன். போலீஸாரின் - முக்கியமாகச் சென்னை போலீஸாரின் பெருமையை உயர்த்தும் விதத்தில் அது அமைந்திருந்தது. போலீஸார் தவறு செய்யாதவர்களுக்கு எப்போதுமே நண்பர்கள் தான். இதை சில அருமையான நிகழ்ச்சிகளின் மூலம் நன்கு விளக்கி யிருக்கிறார்கள். தவறு செய்பவர்கள் எப்படியும் போலீஸுக்குத் தப்பமுடியாது என்பதை யாவரும் அறியும் வாய்ப்பை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதைப் போன்ற பல படங்கள் சினிமா நடிகர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டால் யாவரும் பார்ப்பார்கள். காரியமும் ஆகும்; காசும் கிடைக்கும்.

ஆர். நாராயணன்,
வேட்டைக்காரன்புதூர்.

கலைஞர்கள் கடமை

திரையுலகின் முடிசூடா மன்னராக விளங்கிய எம். கே. தியாகராஜ பாகவதர் காலமான செய்தி படவுலக ரசிகர்களுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. தன்னுடைய கர்ணாம்ருதமான கானத்தால் ரசிகப் பெருமக்களிடையே பெரும் புகழ் பெற்ற பாகவதரின் கடைசி நாட்கள் மகிழ்ச்சிக்குரிய தாயில்லை. நொடிந்து போன நிலையில் அவர் சிரமப்பட்டார். பாகவதர், என்.எஸ். கிருஷ்ணன் இருவரும் படவுலகின் இரு கண்களாக விளங்கியவர்கள். பாகவதரின் குடும்பத்திற்கு நிதி உதவி செய்ய வேண்டியது அவசியம். நம்மை விட்டுப் பிரிந்து செல்லும் கலைஞர்களில் பெரும்பாலோர் தங்கள் குடும்பத்திற்கு ஒன்றும் செய்யாமலேயே போய்விடுகிறார்கள். ஆகவே இன்று வசதியுடனிருப்போர் அவர்களது குடும்பங்களுக்கு ஏதாவது செய்தாக வேண்டும். பாகவதரின் குடும்பத்திற்கு உதவி செய்வது கலைஞர்கள் கடமை. நிச்சயம் செய்வார்கள் என்ற நம்பிக்கை என்னைப் போன்ற பலருக்கு முண்டு.

சுஜாதா,
சென்னை.

இப்படிப் பெண்களைப் பலவந்தப்படுத்தினுல் காரியம் ஆகிவிடுமென்று நினைப்பது தவறல்லவா? ஆனுல் அவள் (இ. வி. சரோஜா) எதற்கும் அஞ்சுபவளாகக் காணேமே...

ஏன் இந்த முயற்சி?

இப்பொழுதெல்லாம் நாம் சில விளம்பரங்களைக் காண்கிறோம். வட இந்தியப் படங்களை தமிழில் தயா

ரிக்கும் உரிமை பெற்றிருப்பதாகத் தமிழ் படாதிபதிகள் அறிவிக்கிறார்கள். ஆனால் இவற்றில் எத்தனை படங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன; பெற முடியும்? வடநாட்டில் தயாராகும்அந்தக் குறிப்பிட்ட படம் தமிழ் நாட்டிலும் வெற்றி பெற்று விடுகிறது. தமிழில் அது மீண்டும் தயாரிக்கப்பட்டால், மக்கள் அசல் படத்துடன் அதை ஒப்பிட ஆரம்பித்து விடுகிறார்கள். எப்படியிருந்தாலும் அசலும் நகலும் ஒன்றாகிவிட முடியுமா? அதுவே பல கை மாறி வந்ததாக இருக்கும். கடைசியில் அது தமிழ்ப் படமாக உருவாகி விடுகிறது. இதனால் தமிழ்ப்படங்களில் தமிழ்நாட்டுச் சூழ்நிலை இருப்பதில்லை. படமும் தோல்வியுறுகிறது. தமிழ்நாட்டில் அருமையான கதைகள் இருக்கின்றன. அற்புதமான வரலாற்றுக் கதைகளும் உண்டு. நீதி போதிக்கும் புராணக் கதைகளும் இங்கேதான் ஏராளம். இவைகளில் நல்லதைத் தேர்ந்தெடுக்காமல் நம் நாட்டுக் கொவ்வாத சூழ்நிலை கொண்ட கதைகளைப் படமாக்கித் தோல்வியுறுவானேன்?

சம்பத்,
சென்னை.

...ஒருத்தியைக் கவர அவர் செய்யும் சாகஸம், அப்பா; பெண்கள் தோற்றார்கள்! விநாயகா பிக்சர்ஸ் 'இரத்தினபுரி இளவரசி'யில் எம். ஆர். ராதா - குசலகுமாரி.

ஆசைஇருக்கிறது. ஆனால்?

நம் தமிழ்ப் படங்கள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று எல்லோரும் ஆசைப்படுகிறார்கள். ஆனால் இதைத் தகுந்த முறையில் செயல் படுத்த இயலவில்லை! சிவாஜி கணேசன் ஒருவர் போதாதா, மேனாட்டினரிடம் இந்தியாவுக்குப் பெருமை தேடித்தர?' என்று சிலர் நினைக்கிறார்கள். சிவாஜி கணேசன் சிறந்த நடிகர் என்பதை யாருமே மறுக்க முடியாது. ஆனால் அவர் நடிக்கும் எல்லாப் படங்களுமே நம்மிடையே வெற்றி பெற்று விடுகின்றனவா? இல்லையே. நாம் இங்கேயே பெரும்பாலான படங்களை மட்டம் என்று ஒதுக்கி விடுகிறோம். வெற்றிகரமாக ஓடும் படங்கள் எல்லாமே தரத்தில் உயர்ந்தவை என்று கூறிவிட முடியாது. ஆகவே அவை வெளிநாடுகளில் நம் பெருமையை உயர்த்தாது. இப்படி எந்தப் பக்கம் பார்த்தாலும் ஓட்டைப் படங்களே பெரும்பாலானவை நம்மிடமிருக்கின்றன. நல்ல கதை யம்சம் உள்ள படங்களை பெரும் அளவில் தயாரிக்க வேண்டும். புகழ்பெற்ற நடிகர்களைப் போட்டால் படம் ஓடிவிடும் என்ற மூட நம்பிக்கையை விட்டு விட்டு, நக்ஷத்திரங்களைத் தேடுவதை விட நல்ல கதைகளைத் தேடத் தயாரிப்பாளர்கள் முன்வரவேண்டும். இது நடக்குமென்று எதிர்பார்க்கலாமா?

குமாரி,
வேலூர்.

கேள்வி-பதில்

ர. தங்கவேலு, மதுரை

நடிகர் திலகமும் புரட்சி நடிகரும் ஒன்று சேர்ந்து ஒரு படத்தில் நடிக்கச் சம்மதித்தால் என்ன நடக்கும்?

தயாரிப்பாளர் திணறிப் போவார்!

பாகவதர் படவுலகுக்குச் செய்த சேவை என்ன?

அருமையான - எளிதில் மறக்க முடியாத பாட்டுக்களைப் பாடிச் சென்றிருக்கிறார். நடிகர்கள் உலகுக்கு "நடிகர்கள் எப்படி வாழக் கூடாது" என்பதற்கு ஒரு எச்சரிக்கைக் கல்லாக இருக்கிறார்.

'நீச்சல் உடை அழகி' மாடிலக்ஷ்மி ஏன் 'அழகுப் போட்டி'யில் கலந்து கொள்ள வில்லை?

'அழகிகளுக்கான போட்டி தானே? நடிகைகளுக்கல்லவே' என்று இருந்து விட்டாரோ என்னவோ!

'வளையாபதி'யில் வந்த முத்துகிருஷ்ணனும், 'காவேரியின் கணவன்' படத்தில் வரும் முத்துகிருஷ்ணனும் ஒருவரா?

ஒருவர்தான். ஆனால் வளையாபதியில் வந்த முத்துகிருஷ்ணன் நடிக்கவில்லை; காவேரியின் கணவனில் வந்தவர் நடிக்க ஆரம்பித்திருக்கிறார்!

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி

கல்யாணம் சிலருக்குக் கசப்பாக இருப்பதேன்?

அது ஒரு வேலியாக அமைந்து விடுவதால்!

கு. ரா. கிருட்டினன், சிதம்பரம்

சூர்யகலாவை ஏன் இப்படி சுவரொட்டிகளில் விளம்பரப்படுத்தி தமிழகத்தின் தெருவில் பெண்கள் தலை நிமிர்ந்து செல்ல முடியாமற் செய்து விட்டார்கள்?

காளைகள் நிமிர்ந்து நடக்க இருக்கலாம்!

இன்றைய தமிழ்ப் படவுலகம் முன்னேற தங்கள் அறிவுரை யாது?

'சிந்திக்கத் தொடங்குங்கள்' என்பதுதான்!

தங்கட்கு எவரைக் கண்டால் பிடிக்காது?

கலையுலகில் பிளவு ஏற்படுத்துபவர்களை!

பொ. ஞானமுத்து, மொரட்டுவ, இலங்கை

இசை அமைப்பாளர்கள் என்றால், பாட்டுக்களுக்கு மட்டும்தானா, அல்லது படத்தில் வரும் சம்பவங்களுக்கும் அவர்கள் தான் இசை அமைக்க வேண்டுமா?

படத்திற்குப் பூராவும் இசை அமைக்க வேண்டியது அவர்களது பொறுப்புதான்.

என். யோகானந்தன், பெங்களூர்

சிவாஜி கணேசனின் தந்தை இப்போது எங்கிருக்கிறார்?

அவருடனேயே இருக்கிறார்.

என். எம். அழகன், திருவாலங்காடு

பெண்களின் அழகும், மலைகளின் வளமும், மலர்களின் மணமும், கடலின் பரப்பும் இல்லாதிருந்தால்?

சஹாரா பாலைவனத்தைப் பார்த்து விட்டு வாருங்கள், தெரிந்துவிடும்.

'ஜன ரஞ்சகம்' என்றால் என்ன?

பாமர மக்களுக்கும் பிடித்து விட்டது என்பதுதான் பொருள்?

பரணிதரன், கமுதி

ஒரு படத்தின் வசூலைக்கொண்டு அப் படத்தின் தரத்தை நிர்ணயம் செய்ய முடியுமா?

வசூல் வேறு; தரம் வேறு. மிகச் சிறந்த படங்கள் பல வசூலைத் தராமல் இருந்திருக்கின்றன. சிறந்த வசூல் தந்த படங்கள் பல தரக் குறைவாக இருந்திருக்கின்றன.

ஆர். நடராஜா, இலங்கை

கலைஞர் மு. கருணாநிதி வசனம் எழுதும் படத்தில் சிவாஜி கணேசன் நடிக்கிறார் என்று சொல்கிறேன் நான். என் நண்பர் மறுக்கிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

கருணாநிதி வசனம் எழுதும் படத்தில் மட்டுமல்ல, அவரே தயாரிக்கும் 'குறவஞ்சி'யில் நடிப்பது சிவாஜி தான்.

டி. எஸ். சுகவனம், சேலம்

டெலிவிஷன் வந்தால் சினிமாத் தொழில் பாதிக்கப்படுமா?

டெலிவிஷன் உள்ள எல்லா நாடுகளிலும் சினிமா பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்தியாவும் இதற்கு விதிவிலக்காக அமையாது என்பது என் யூகம்.

பட்டுக்கோட்டைக்கு நினைவுச் சின்னம் எழுப்ப நடிகர் சங்கம் முன்வருமா?

கலைவாணர் இறந்தபோது அவருக்கு நினைவுச்சின்னம் எழுப்ப நடிகர் சங்கம் முன்வந்தது; ஆனால் செயலில் காட்டவில்லை. அதேபோல் பட்டுக்கோட்டைக்கும் நினைவுச்சின்னம் எழுப்ப நடிகர் சங்கம் முன்வரலாம்; ஆனால் செயலில் காட்டுமா என்பது சந்தேகம்தான்!

யுல் பிரன்னர் என்ற அமெரிக்க நடிகர் அகதிகளுக்கு நிவாரணம் அளிக்க ஐ. நா. ஸ்தாபனத்துடன் ஒத்துழைக்கிறாரே, அதேபோல் நம் நடிகர்கள் செய்வார்களா?

செய்யமாட்டார்கள்! பதிலுக்கு தனிப்பட்ட முறையிலேயே செய்து காட்டி வருகிறார்களே.

சிவாஜி பித்தன், சென்னை

சிவாஜி கணேசன், வைஜயந்திமாலா இருவரும் சேர்ந்து நடிக்கும் படங்களில் எது முதலில் வரும்?

ஜெமினியின் தமிழ்ப்படம்.

துரை. முருகேசன், காரமடை

'தனிமையில் தோன்றுவது எது?

சிந்தனை.

இதயத்தில் படரும் இருளை நீக்குவது எப்படி?

தன்னம்பிக்கை என்ற விளக்கைக் கொண்டு.

இளங்காதலர்களுக்கு வெண்ணிலவு கற்றுத்தரும் பாடம் என்ன?

அது சினிமாவாக இருந்தால் ஒரு 'டூயட்' பாடலை!

எஸ். டி. சுப்புலக்ஷ்மி, சென்னை

'தேவதா'வில் சாவித்திரி, 'எதிர் பாராத'தில் பத்மினி, 'கல்யாணப் பரி'சில் சரோஜாதேவி இவர்களது

இவரைப் பார்த்தால் மாப்பிள்ளை மாதிரி இல்லையா? - எம். ஆர். ஜே. யின் முதல் படத்தில் அசோகன்.

நடிப்பை வரிசைக்கிரமமாகச் சொல்ல முடியுமா?

பத்மினி, சாவித்திரி, சரோஜா தேவி.

அசு. அப்துல்ஹை, அரகண்டநல்லூர்

நடிகர்கள் காண்டிராக்ட் பத்திரத்தில் கையெழுத்திடும் போதும், 'ஆட்டோ கிராப்' புத்தகத்தில் கையெழுத்திடும் போதும் என்ன நினைப்பார்கள்?

முன்னதில் கையெழுத்திடும்போது அந்நியர் யாரும் இருக்கக்கூடாது என்று நினைப்பார்கள்; பின்னதில் கையெழுத்திடும்போது கூட்டம் சேராதா என்று நினைப்பார்கள்!

புலித்தேவனுக படத்தில் நடிப்பதற்கு ஏற்றவர் மனோகரா, பகவதியா?

தயாரிப்பாளரின் 'பர்ஸை'ப் பொறுத்தது இது!

கே. பி. மோகன கிருஷ்ணன், சென்னை

'இலட்சிய நடிகை' என்று அழைக்கப்படுவது விஜய குமாரியா? எம். என். ராஜமா?

எம். என். ராஜம் 'இலட்சிய நடிகை' என்று அழைப்பதை விரும்புவதில்லை.

கோவிந்தராஜன், சென்னை

எம். ஜி. ஆர். புலித்தேவனுக நடித்தால்...?

நாடகத்தில் வரும் சகாதேவனைப் போல் வசனம் பேசமாட்டார்!

வீ. மூ. இலக்குமணன், கும்பளா

தமிழ்ப் படங்களிலே வடஇந்தியசங்கீதம் கலக்காமல் தமிழ்ப் பண்பாடுடன், வெளிவந்த படம் ஒன்றைத் தெரிவிக்கவும்?

ஜெமினியின் 'ஒளவையார்'.

'ரத்தக்கண்ணீர்' நாடகத்தில் சினிமா நடிகர்களைக் கேலிசெய்த நடிகவேள் தற்போது எத்தனை படங்களில் நடித்து வருகிருர்?

அவரது கோஷ்டியினரே வியக்கும் அளவுள்ள படங்களில் நடித்து வருகிருர்!

இ. எம், எஹுசா, பாண்டிச்சேரி

'மரகதம்' படத்தில் சந்திரபாபுவுக்கு ஜோடியாக வரும் நடிகை யார்?

ஜூனியர் லக்ஷ்மிராஜ்யம்.

சந்திரபாபு இப்போது என்ன செய்து வருகிருர்?

ஓய்வைத் தேடி வருகிருர்.



பக்தியைப் பிரதிபலிக்கும் இக்காட்சியை பானு பிலிம்ஸாரின் 'சபாஷ் ராமு' படத்தில் காணலாம்.

பி. அனந்தராகவன், பலவேடு

வட நாட்டில் ஸ்டுடியோக்கள் அதிகமா? தென்னுட்டிலா?

வட நாட்டில்தான்.

ஏ. நாகேஸ்வரராவும் பத்மினியும் சேர்ந்து பிரதம பாகத்தில் நடித்த முதல் படம் எது?

தெய்வமே துணைதான்.

தா. மலர்மதி, அருப்புக்கோட்டை

ராஜ பக்தி, ராஜ நர்த்தகி எந்த அளவிற்கு வளர்ந்துள்ளன?

ராஜ பக்தி இவ்வாண்டு முடிவில் திரைக்கு வரப்போகிறது; ராஜநர்த்தகி நடனமாட ஆரம்பிக்கவில்லை.

ஜெயகுமார், வாணியம்பாடி

நாகய்யா ஒரு சிறந்த குணசித்திர நடிகர்தானே?

ஆமாம்- ஆனால் அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? 'பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரைதான். இப்போது சிவாஜி கணேசனைப் போன்ற சிறந்த குணசித்திர நடிகர் யாரும் இல்லை' என்று கூறுகிறார்.

திரைக்கதாசிரியர்கள் யாருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்?

கதாநாயகனுக்குப் போட்டியாக வரும் வில்லன் காரில் அறைபட்டுச் சாவதனால், கார் கண்டுபிடித்தவருக்கு. இல்லாவிடில் அவர் கதையே முடியாமற் போய்விடுமல்லவா?

நம்பியார், ஆர். பி. சண்டைக்குக் காரண மறிய, ''மதிவாணனைப் பார்க்க வேண்டும்.

காணமற் போனவன் திரும்பக் கிடைப்பதாகவும், அவனே கதாநாயகனாக மாறுவதாகவும் உள்ள ஒரே மாதிரியான கதைகளை ஏன் திரும்பத் திரும்ப படத்தயாரிப்பாளர்கள் உருவாக்குகிறார்கள்?

காணமற்போன படத்தின் 'வெற்றி'யை, அப்போதாவது 'கிடைக்கப் பெறுவோமோ' என்ற ஆவலில் இருக்கலாம்.

புதுமைக்கும் புரட்சிக்கும் உள்ள தொடர்பு என்ன?

புரட்சி பூக்கும் மலர்தான் புதுமை!

வேணுகோபால், நகரி

நம் தமிழ்ப் படங்களில் வரும் பயித்தியங்கள் அழகாக க்ஷவரம் செய்து கொண்டும், நேர்த்தியாக உடையணிந்தும் காணப்படுகிறார்களே பயித்தியக்காரர்கள் இப்படியா உல்லாச வாழ்க்கை வாழுகிறார்கள்?

'மேக்-அப்' செய்பவர் இங்கு பைத்தியமாகி விடுவார் பதிலுக்கு.

சினிமாப்பட மொன்று தயாரிக்க எவ்வளவு மூலதனமும் படிப்பும் வேண்டும்?

ரயில் பெட்டிக்கு ரயில் பெட்டித் தாவி, தான் எழுதிய கதையை அச்சிட்டு விற்று, அணு அணுவாகச் சேர்த்த வாஸன், இன்று தமிழகத்தின் பெரிய பணக்கார பட முதலாளியாக விளங்குகிறார்; வீட்டுக்கு வீடு நோட்டீஸை விநியோகம் செய்த நாகிரெட்டி உலகமே வியக்கும் வாஹினி ஸ்டுடியோவின் நிர்வாகியாகி யிருக்கிறார்; நாடகக் கட்டை தெருத் தெருவாகத் தூக்கிக் கொண்டு அலைந்த ஸ்ரீதர் இன்று 'வெள்ளி விழா' படத் தயாரிப்பாளர், டைரக்டராகி யிருக்கிறார். இவர்கள் எல்லாம்வைத்த மூலதனம் உழைப்பு, உழைப்பு, உழைப்புதான்! படித்த படிப்பெல்லாம் உலகம் தந்த அனுபவம்தான்!

ச. ந. தர்மலிங்கம், சத்தியமங்கலம்

இந்தியாவில் ஓடிய ஆங்கிலப் படங்களில் அதிக வசூல் தந்தது எது?

டிமிலியின் 'பத்து கட்டளைகள்'.

சிவாஜி கணேசன் ஆங்கிலம் கற்றிருந்தால்...?

அந்தக் குறை விரைவில் நீங்கி விடவிருக்கிறது!

அண்ணாத்துரை அரசியலில் ஈடுபடாமல் இருந்திருந்தால்...?

படவுலகிற்கு மேலும் பல 'வேலைக்காரி'கள் கிடைத்திருக்கும்.

அ. சிற்றரசு, மதுக்கரை

ஏ. நாகேஸ்வரராவிற்கும் சிவாஜி கணேசனுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்ன?

'இதுவல்லவோ தமிழ்' என்று எண்ணும்படி வசனம் பேசுவார் சிவாஜி. 'இதுவா தமிழ்?' என்று நினைக்கும்படி செய்து விடுவார் நாகேஸ்வரராவ்.

பி. எஸ். ராமசாமி, பனங்காட்டூர்

எம். ஜி. ஆரிடம் உள்ள கெட்ட பழக்கம் என்ன?

அதைத்தான் நானும் துருவித்துருவிப் பார்த்து வருகிறேன். இதுவரை ஒன்றும் புலப்படவில்லை!

ஜோகரைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

நுனிப்புல் மேயும் ஒரு படித்த முட்டாள்!

கண்ணதாசன், டி. எம். சௌந்தரராஜன், இருவரில் யாருக்குக் குழந்தைகள் அதிகம்?

சௌந்தரராஜன் வீட்டுக்குத் திரும்பினால் 'அப்பா' என்று அழைத்து ஒரு சிறு கிராமம் வந்தால், கண்ணதாசனைச் சுற்றி ஒரு உலகமே திரண்டு வரும்!

வி. கோசன், வலம்புரி

'ஜலந்தர் சிட்டி' ஏன் மலிவுப் பாதையில் இறங்கி யிருக்கிறது?

வியாபார ரகசியம்.

கலைஞர்களைத் தாக்கும் பத்திரிகை வேறு எந்த நாட்டிலாவது உண்டா?

கலைஞர்களின் அந்தரங்க ரகசியங்களை வெளிப்படுத்தும் பல பத்திரிகைகள் எல்லா நாடுகளிலும் உள்ளன. அமெரிக்காவில் இவை சற்று அதிகம்.

இப்போதெல்லாம் சினிமாவைப் பார்க்கும்போது நாடகத்தைப் பார்ப்பது போல் இருக்கிறதே, ஏன்?

காமிராவும் கற்பனையும் அங்கும் இங்கும் ஓட மறுப்பதால்!

கண்ணன், திருவாரூர்

எம். ஜி. ஆர். இப்போது என்ன செய்கிறார்?

தான் நடித்து வரும் படங்களை எல்லாம், கோடம்பாக்கத்தில் கட்டியுள்ள ஒரு புது தியேட்டரில் போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ராஜாதேசிங்கு படத்தில் எம். ஜி. ஆர். இரட்டை வேடங்களில் நடிக்கிறாரா?

ஆம்.

பாக்ஸிங் தெரிந்த நடிக, நடிகையர் யார்?

"வருந்தாதே அம்மா! கலங்கினால் எந்தக் காரியமும் ஆகாது. இந்த உண்மை தெரியாதா உனக்கு?"...

எனக்குத் தெரிந்து எந்த நடிக, நடிகையரும் இதுவரை போட்டதில்லை!

கவலைப்படாதவர் யார்?

சினிமா தியேட்டருக்குள் டிக்கெட் வாங்கி வந்து, குறட்டை விட்டுத் தூங்குபவர்!

லக்ஷ்மணன், விழுப்புரம்

சரவணா பிலிம்ஸ் பாகப்பிரிவினையில் நடிகர் திலகத்திற்குப் பங்கு உண்டா?

ஏன் இல்லை? பாதி வீட்டை, சுவரெழுப்பிக் கொடுத்திருந்தார்களே!

சூ. ஜே. ஆர். டல்மேடா, சென்னை

எம். ஜி. எம். ஸ்தாபனத்தார் ஒரு படம் தயாரிக்க, அதை வடநாட்டு சாந்தாராம் டைரக்ட் செய்ய, தமிழகத்து சிவாஜி கணேசன் அதில் நடித்தால் படம் எப்படி இருக்கும்?

சினிமா உலகில் ஒரு 'ஐக்கிய நாடுகள் சபை' போல் விளங்கும்!

ஆர். கண்ணன், கல்கத்தா

அக்டோபர்-59 'பேசும் படம்' இதழில் 124-ம் பக்கத்தில் பத்மினியின்

..."வேதனை எனக்கு தீராததாக ஆகிவிட்டதே!" - ஜூபிடரின் "அமுதவல்லி"யில் லக்ஷ்மிபிரபா - எம். என். ராஜம்.

பிறந்த நாள் விருந்து புகைப்படத்தில் சாவித்திரி இருக்கிறாரா?

இருக்கிறார். நிற்பவர் அவர்தான்.

என். சென்னியப்பன், சிவகிரி

பக்ஷிராஜாவின் அடுத்த தயாரிப்பு என்ன?

'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்' என்ற படம். மு. கருணாநிதி எழுதும் இதில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கதாநாயகனாக நடிக்கப் போகிறார்.

கு. கிருஷ்ணமூர்த்தி, காஞ்சீபுரம்

சென்னை தி. மு. க. மகாநாட்டில் கட்டபொம்மன் இசைத்தட்டு வைக்கப்பட்டபோது சில தோழர்கள், "சிவாஜி பேச்சு வேண்டாம். நிறுத்து, நிறுத்து!" என்று கத்தினார்களே, இவர்களைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கட்சியின் மீது கொண்டுள்ள அபிமானத்தால் தனிப்பட்டவர்மீது வளர்ந்திருக்கும் துவேஷத்தைக் காட்டுகிறது இந்தச் செயல். இதை விட்டு விடுவது நல்லது.

எம். ஓ. கணபதி, மஸ்கெலியா, இலங்கை

சரோஜாதேவியின் நடிப்புக்கும் பத்மினியின் நடிப்புக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஆரம்பத்திற்கும் அனுபவத்திற்கும் உள்ள வித்தியாசம்தான்!

ராமகிருஷ்ணன், திருச்சி

இலட்சிய நடிகருக்கும் இலட்சிய நடிகைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

முன்னவர் விளம்பரப்படுத்தி புதுமனை புகுந்தார்; பின்னவர் அதை ரகசியமாகச் செய்திருக்கிறார்.

ஆர். சம்பத் குமாரன், சேலம்

தாங்கள் எல்லோரும் விரும்பும் நண்பராக இருக்கிறீர்களே, காரணம் என்ன?

'விரோதத்தை வளர்ப்பதைவிட, நட்பை நாடுவது சிறந்தது' என்பது தமிழ்மறை யாதலால்.

எம். சம்புகேஸ்வரி, பம்பாய்

ஒட்டு மொழிப் படம் என்றால் என்ன?

பிறமொழிகளில் தயாராகி வந்த படத்தில் நடிகர்களின் வாயசைப்புக்கு ஏற்ப வேறு மொழியை ஒட்ட வைப்பது என்பது. சுருங்கச் சொன்னால் 'டப்பிங்' படம் என்பது.



Agfa

35mm and 16mm
Raw Cinefilm
for all purposes

AGFA PICTURE NEGATIVE FILMS:
PANKINE K and ULTRARAPID

AGFA SOUND RECORDING FILMS:
Tf 4 and Tf 6

AGFA FINEGRAIN RELEASE
POSITIVE FILM

AGFA DUPLICATING NEGATIVE FILM
AGFA DUPLICATING POSITIVE FILM

"AGFACOLOR" Negative Type B. 333 & G. 334
"AGFACOLOR" Positive Type 4, 5 and 7 and
various other types of Cinematograph Rawfilm

For particulars please write to:
The Sole Importers & Distributors:

REGE CINEFILMS PRIVATE LTD.
198, Jamshedji Tata Road, Bombay-1

Branches:
31, Chittaranjan Avenue, Calcutta-13
202, Mount Road, Madras-2

நான் ரஸித்த காட்சி

அவள் யார்

மகாலக்ஷ்மியின் வைர நெக்லேஸ் ஒரு சேட்டின் கடையில் இருப்பதாக சதாசிவத்தினிடம் வேலைக்காரி கூறுகிறாள். அம்போது சதாசிவம், 'ஒரு வேளை அடகு வைத்திருக்கலாம், சிங்கப்பூருக்கு செல்வதற்கு முன்னால்'' என்று சர்வசாதாரணமாகப் பதிலளிக்கிறார். தன் மனைவி நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டாளே என்ற வெட்கமும் சோகமும் பிறிட்டெழ உதட்டைக் கடித்து கொண்டு, உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு பேசுகிறார் அவர். இக்கட்டத்தில் சிவாஜி கணேசனின் சோக நடிப்பிலே நம் இதயமே அழுந்துகிறது. இக்காட்சியை நான் மிகவும் ரஸித்தேன்.

கடத்தூர் ஏ. ராமனுதன்,
சென்னை.

ஏதோ ஒரு கடிதத்தை சதாசிவத்திடம் கொடுக்க வருகிறாள் வேலைக்காரி. அப்போதுதான் அவர் தன் தவறை உணர்ந்து வருந்திப் பச்சாத்தாபப்பட்டுக்கொண்டிருந்தார். வெறும் தரையில் கவிழ்ந்து கிடக்கும் அவரையும் கண்ணீர் ததும்ப வீங்கிக்கிடக்கும் அவரது முகத்தையும் பார்த்தாள் அவள். ''ஏன், எதற்கு?'' என்று அவள் யோசிக்கவில்லை. அவரைப் பார்த்து அவள் ஆச்சர்யமோ திகைப்போ அடையவில்லை. அமைதியாக வந்தாள், கடிதத்தை வைத்தாள், போனாள். ஆமாம், சதாசிவத்தின் இந்த நிலையை அவள் எதிர்பார்த்தாள். அதனால்தான் அவளுக்கு அதில் ஒன்றும் புதுமை தோன்றவில்லை. மகாலக்ஷ்மி நிரபராதி என்பதை அவர் உணரத்தான்போகிறார்; அப்போது பச்சாத்தாபப் படுவார். இது அவள் எண்ணம். ஆகையால் அவர் மீது அவளுக்கு அனுதாபம் தான் பிறந்தது. இந்தக் காட்சி சொல்லாமல் சொல்லும் கலைநுணுக்கமும் கருத்தும் எனக்கு மிகப் பிடித்தது.

89696

சுந்தரமூர்த்தி,
கோயமுத்தூர்.

பாசப் பிரிவினை

பட்டணத்திலிருந்து வந்து தன் தம்பியிடம், ''ஏண்டா மணியா, பட்டணத்திலேருந்து எனக்கு என்ன வாங்கிட்டு வந்தே?...பரவாயில்லே, பல்லெ வெளக்கிட்டுப் பலகாரம் சாப்பிடவா'' என்று பாசத்தோடு தம்பியை அழைக்கிறான் கன்னையா. இந்தக் காட்சியை இப்போது நினைத்தாலும் என்னை சொக்க வைக்

''பேசாதே! வாயைத் திறந்தால் கொன்று விடுவேன்'' என்று கூறி யாரோ இந்த அழகியின் வாயைப் பொத்துகிறார்கள். பிரபுராம் பிலிம்ஸ் முதல் படத்தில் பி. சரோஜா தேவி.

கிறது. தன் தம்பியிடம் அன்பு கொண்டுள்ள ஒரு அண்ணன் எப்படி யிருப்பான் என்பதற்கு இக் காட்சி ஒரு நல்ல விளக்கம்.

வி. கோசன்,
வலம்புரி.

தன் தம்பிக்குத் திருமணம் நடக்கிறது. அப்பாவோ சாகக் கிடக்கிறார். ஒரு முறை சின்னவனைப் பார்க்க அவர் துடிக்கிறார். மானத்தை விட்டுத் தம்பியிடம் வந்து மன்றாடிக் கெஞ்சுகிறான் அண்ணன். தகப்பனர் திட்டியதை எடுத்துக் கூறுகிறான் சின்னவன். உடனே அண்ணன், ''கோழி மிதிச்சா குஞ்சு செத்துப் போகும்? நம்ப சின்னவயசிலே அப்பாவிடம் எவ்வளவோ திட்டு வாங்கினேம். இப்போ மட்டும் நாம்ப எதுக்கு கோவிச்சுக்கணும்?'' என்று உதாரணத்துடன் சமாதானப் படுத்துகிறான் அவனை. அப்போது என் கண்களில் நீர் திரையிட்டது.

''இன்னிக்கு மட்டும் நாம் என்ன அவ்வளவு பெரிய மனுஷனு வளர்ந்துட்டோம்?'' என்று தமையன் கூறும்போது நான் அழுதேவிட்டேன். உருக்கமான காட்சி!

கே. சம்பத்,
வேலூர்.

தன் சகோதரனின் நாட்டுப்பெண் பொன்னி, கருவுற்ற நிலையில் மாம்பழம் உண்ண விரும்புவதை அறிகிறார் வைத்தியலிங்கம். ஆனல் அவளுக்கு அது கிடைக்கக் கூடாது என்பதற்காக, அகிலாண்டம் கூடையுடன் மாம்பழங்களை அப்படியே வாங்கி விடுகிறாள். அவளை ஏமாற்றி இரண்டு பழங்களை எடுத்து, பொன்னியிடம் கொடுக்கிறார் வைத்தியலிங்கம். சண்டைக்காரர்களை தந்திரத்தால்தான் ஏமாற்றி காரியம் சாதிக்க முடியும் என்பதையும், கர்ப்பஸ்திரீயின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதையும் அழகுற விளக்கும் காட்சி இது.

ஆர். ஆர். எஸ்.,
காஞ்சிபுரம்.

பொன்னி கன்னையாவிடம் அன்பாகத்தான் இருக்கிறாள். நாமாக இருந்தால் அவளிடம் அதற்குள் காதல் கொண்டு விடுவோம். ஆனல் பாவம், கன்னையா! பரிசுத்தமான உள்ளம் உடையவன். அவளையே அவனுக்குக் கல்யாணம் செய்வதாக

இவளுக்கு (தாம்பரம் லலிதா) அவர் (டி. ஆர். மகாலிங்கம்) முகவாயைப் பிடிப்பது அவர்களது காதலைப் பிரதிபலிக்கிறது. இவர்கள் மகிழ்ச்சி யோடிக்கிறார்கள்...

அவன் தாய் சொல்லும்போது கூட, ''அம்மா, உனக்கு ஒரு பெண் இருந்தால், அவளை என்னைப் போல ஒரு நொண்டிக்குக் கொடுக்க உனக்கு மனம் வருமா?'' என்று கேட்கிறான். ''நம்மையே நம்பியிருக்கும் அந்தப் பெண்ணின் வாழ்வை நாமே பாழாக்குவதா?'' என்று அவன் கருணையுள்ளம் வேதனைப் படும்போது மனித இதயம் படைத்த அத்தனை பேரும் அப்படியே உருகி விடுவார்கள். அது மட்டுமல்ல. பொன்னி தன்னை மணந்து கொள்ள விரும்புகிறாள் என்று அறிந்ததும், அப்பப்பா! அவன் முகத்தில் தோன்றும் ஆனந்

தந்தை - ஆஹ்ஹா! சிவாஜி கணேசனைத் தவிர வேறு யார் அப்படி நடிக்க முடியும்!...நினைத்து நினைத்து ரஸிக்கிறேன் இந்தக் காட்சியை.

மா. ர. கோபால்,
பெங்களூர்.

கன்னையன் வெள்ளையுள்ளம் படைத்த கிராமத்து இளைஞன். அப்பாவியான அவன் தன் பெற்றோர் மூலம் தான் ஒரு குழந்தைக்குத் தகப்பனாகப் போவதை அறிகிறான்.

...இவள் (தாம்பரம் லலிதா) அவள் (எம். என். ராஜம்) முகவாயைத் தொடுவது தேறுதல் கூறுவதைக் காட்டுகிறது. ஜூபிடரின் ''அமுதவல்லி''யில்.

உடனே தன் மனைவியிடம் ஓடி, ரகசியமாக அவளிடம் தான் அப்பாவாகப் போவதாகக் கூறுகிறான். அவள் விஷயம் புரியாதவள் போல் வேண்டுமென்றே பேசுகிறாள். 'ஒனக்குத் தெரியாதுன்னு சொல்ல வந்தா என்னமோ கேலி செய்யறியே' என்பது போல் செல்லமாகக் கோபிக்கிறான். தூய்மையானவனின் நிர்மலமான இதயத்தை வெளிப்படுத்தும் அருமையான காட்சி இது.

எம்மொய்யார்,
சென்னை.

மனைவி அகிலாண்டத்தின் தாண்டவத்தைத் தாங்க முடியாத வைத்தியலிங்கம், தன் தம்பியுடன் பாகப் பிரிவினை செய்து கொள்ளுகிறார். பிரிவினை முடிந்ததும் பெற்றோரின் படத்தை தம்பி சுந்தரலிங்கத்திடம் கொடுத்துவிட்டு, பிரிவினைக்குத் தான் காரணமில்லை என்றும், இந்தத் தவறுக்குத் தன்னை மன்னிக்கும்படியும் கூறிக் குலுங்கக் குலுங்க சிறு பிள்ளைபோல் அழுகிறார். சோகம் நம் இதயத்தைப் பிழிகிறது. மானஸ்தனின் மனோநிலையைப் பிரதிபலிக்கும் அரியகாட்சி இது. பாலையா அற்புதமாக நடித்திருக்கிறார்.

சாரங்கபாணி,
கோவை.

நாலு வேலி நிலம்

கண்ணுச்சாமி மிக மிக நல்லவர். ராம்தாஸ், கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொடியவனாகி, கண்ணுச்சாமியை ஓட்டாண்டியாக்கி, கடைசியில் விஷம் குடித்து விடுகிறான். மரணப்படுக்கையி லிருக்கும் அவனிடம் வருகிறார் கண்ணுச்சாமி. கடன் கொடாமல்போனால் ஆத்மசாந்தி கிடைக்காது. ஆகவே ஏதாவது கொடு என்கிறார். ராம்தாஸின் மனைவி, தன் முந்தானையிலிருந்து நான்கணாவை எடுத்து கணவன் கையில் வைத்து, கண்ணுசாமியிடம் கொடுக்கச் செய்கிறாள். என்கடன் தீர்ந்து போச்சு என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் கண்ணுச்சாமி. இத்தனைக்கும் காரணமான வீராசாமி வாள்சுத்தியாரின் மனம் திருந்துகிறது, உள்ளத்தால் என்றும் பெரியவராகி நிற்போரின் மனப்பண்பையும், கிராமப் பழக்கத்தையும் விவரிக்கும் அருமையான காட்சி இது.

வேதராஜன்,
திருச்சி.

ராம்தாஸ் கண்ணுச்சாமிக்குத் துரோகமிழைத்து விட்டதையறிந்த

யாவரும் பதறி விடுகிறார்கள். ஆனால் அவர் மட்டும் நிதானமாக இருக்கிறார். பணம்போன வேதனையை மறைத்து பதட்டமடையாமலிருக்கிறார். 'ஒன்றரைவேலி நிலம் விற்று நாலுவேலி நிலம் வாங்கப் பேராசைப் பட்டேன். பலனடைந்தேன். ஆகவே போலீஸ் ஸ்டேஷனுக்கு வர மாட்டேன்' என்கிறார். நல்லவர்கள் கால வித்தியாசத்தால் தவறு செய்தாலும் அதை உணரும்போது, மற்றவரைக் குறைசொல்ல மாட்டார்கள் என்பதை விளக்கும் நீதிக் காட்சி இது.

பி. எஸ். ராஜன்,
செங்கற்பட்டு.

அபலை அஞ்சுகம்

வேலைதேடி ஜமீன் மாளிகைக்கு அஞ்சுகம் வருகிறாள். 'சிறை தண்டனை விதிக்கப்பட்டு, விடுதலை பெற்றவளுக்கு நம்பி எப்படி வேலை கொடுப்பது' என்று ஜமீன்தாரிணியிடம் கேட்கிறாள் நிர்மலா. 'குற்றம் புரிந்தவர்கள் மட்டுமேவா சிறைக்குப் போகிறார்கள்? நிரபராதிகளும் செல்கிறார்களே'' என்று சொல்லி அஞ்சுகத்தை வேலைக்கு வைத்துக் கொள்ளச் சொல்கிறாள் அவள். நல்ல ரசமான காட்சி இது.

பிரேமா,
சென்னை.

மழை பொழிகிறது. சொக்கன் வீட்டு வாசலில் பாடியபடி படுத்திருக்கிறான். திருட்டுப் பட்டம் சூட்டப்பட்டு ஜமீனிலிருந்து விரட்டப்பட்ட அஞ்சுகம் மழைக்கு ஒதுங்கி நிற்பது கண்டு அவன் ஓடிப்போய், அவளைத் தேற்றி அழைத்து வருகிறான். உள்ளமுருக்கும் நல்ல காட்சி இது.

சோமசுந்தரம்,
தாம்பரம்.

தெய்வமே துணை

தன்னால் தன் சகோதரனின் குடும்பத்தில் பூசல் வளர்ந்து கொண்டே வருகிறது என்பதை அவள் உணர்ந்தாள். எவ்வளவோ பொறுத்துப் பார்த்தாள். கடைசியில் வீட்டை விட்டே வெளியேறுவது என்று திட்டமிட்டு இரவோடிரவாகக் கிளம்பினாள். போகும்போது அவள் சகோதரனின் படுக்கையை அணுகி அவனைத் தொடாமல் அவன் கால்களைக் குறித்து வணங்கிக் கண்களில் ஒத்திக் கொண்டாள். இக்காட்சி பெரியவர்களிடம் பக்தியுள்ளவர்களை மெய்சிலிர்க்க வைக்கிறது.

ராம்சந்த்,
சென்னை-1.

வாணி தமிழ் - இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான்: தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-12-0.

தையல் கலை: இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும் பிறர் உதவி இல்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ, தபால் பெட்டி 239, சென்னை-1.

பேசும் படம்
போட்டோ ஆல்பம்

'கன்னத்தைக் கிள்ளுவார்; 'கண்ணே, கட்டிக் கரும்பே, கனிரசமே' என்று கொஞ்சுவார். நான் சிரிப்பேன்; அவர் செய விழுந்து சரணடைவார்'' இப்படியெல்லாம் சிந்தித்துச் சிரிக்கிறுள் இவள். மேகலாவின் "குறவஞ்சி'' தமிழ்ப் படத்தில் சாவித்திரி.

இந்தப் பார்வை ஆச்சரியப்படுவதைக் குறிக்
கிறது. எதிரே அப்படிப்பட்ட புதுமை என்ன
இருக்கும்? ஆ ... ஒரு அழகிய யுவதிதான் திடீ
ரென்று தோன்றி ஆச்சரியத்திலாழ்த்துகிறாள்!
ஜெயலட்சுமி பிக்சர்ஸ் தயாரிப்பான "நட
மாடும் தெய்வம்' 'படத்தில் சிவாஜி கணேசன்.

இந்தப் பார்வையில் காதல் பிரதிபலிக்கிறது. எதிரே அவர் வந்து விட்டாரோ ! ‘நகைகளும் ஆடைகளும் வேண்டாம்; அவர்தான் வேண்டும்’ என்ற எண்ணம் கொண்டவள் போலும்! கமால் சகோதரர்கள் தயாரித்துவரும் “தெய்வப் பிறவி” தமிழ்ப் படத்தில் அழகி பத்மினி.

இன்றைய நாகரீகத்தின் எல்லை இதுதான் போலும், என்று சிந்திக்கச் செய்யும் இவளது பார்வையிலே ஒரு அலக்ஷிய பாவம் பிரதிபலிக்கிறது. யார் இவள் வலையில் விழுந்து என்ன ஆகிறார்களோ! ஜெயலட்சுமி பிக்சர்ஸ் "நடமாடும் தெய்வம்" தமிழ்ப் படத்தில் சூர்யகலா.

இவர் பார்வையிலே ஒரு ஆச்சரியக் குறி! 'நாம் இந்த வாத்தியத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது? இவளா இப்படி அழகாக ஆடுகிருள்!' என்று அதிசயப்படுகிருர் இவர்! இவர் ஒரு இசைக் கலைஞர், அறிவாளி. ஜஉபி டரின் "அமுதவல்லி"யில் டி. ஆர். மகாலிங்கம்.

“ஆ…நான் கண்டுபிடித்து விட்டேன். சொல்லி விடட்டுமா? நீங்கள் என்னைத்தான் நினைத்தீர்கள்!” என்று இவள் கூறுகிறாள் போலும். பார்வையிலே வெற்றி எக்காளமிடுகிறதே! உமா பிக்சர்சாரின் பிரம்மாண்ட தயாரிப்பான “சித்தூர் ராணி பத்மினி”யில் வைஜயந்திமாலா.

இவள் ஒரு கிராமப் பெண். அந்த வயக்காட்டு
அத்தானுக்குச் சோறு பொங்கக்கூட நினை
வில்லாமல் அவனைப்பற்றிய இன்ப நினைவுடன்
மகிழ்ந்திருக்கிறாள். பானை நிறைய அத்தா
னுக்குச் சமைப்பேன் என்கிறாளா-மனோகர்
பிக்சர்ஸ் "மதுரை மன்ன"னில் சரோஜாதேவி.

"இனி நம்மைப் பிரிக்க யாராலும் முடியாது. நீ வீணாகக் கவலைப்படாதே" என்று தேறுதல் கூறுகிறான் சலிம். ஆனால் அனார்கலி சாந்தி மடையவில்லை. கே. ஆசிப் தயாரித்து டைரக்ட் செய்யும் "மொகலே ஆசம்" பிரம்மாண்ட தமிழ்ப் படத்தில் திலீப்குமார் - மதுபாலா.

அமுதவல்லி

(தொடர்ச்சி)

காட்சி 3

அஞ்சாதீர்கள் !

சந்திரன் சிறு குழந்தையாக இருக்கும் போது, ஒரு பாம்பு குழந்தையைக் கடிக்க வருவதறிந்து சிவஞானப் பெரியார் அதை அடித்துக் கொன்று விடுகிறார். "அப்பா! அப்பா!!" என்று கூவியபடி இறப்பது நாககுமாரன். உடனே நாகராஜன் தோன்றி, சந்திரன் வளர்ந்து பருவம் எய்தியதும், அதே சித்ரா பௌர்ணமி தினத்தில் நிலா மறைவதற்குள் கடும் விஷமுள்ள பாம்பு அவனைக் கடித்துக் கொன்றுவிடும், என்று சாபமிட்டுச் செல்கிறான். இப்போது, அறிவும் இளமையும் பொங்கி வழியும் மகன் திருமணம் பற்றி மனைவி பார்வதி கூறுவதைக் கேட்டு சிவஞானப் பெரியார் நாகராஜனின் சாபம் பற்றிக் கூறுகிறார். 'இதை யாராலும் மாற்ற முடியாது' என்று அவர் கூறும்போது சந்திரன் வருகிறான்.

சந் : விதியையும் மதியால் வெல்ல முடியும்.

சிவ : நான் செய்த பெரும் தவறால் உனக்குக் கொடிய முடிவைத் தேடி வைத்துவிட்டேன்.

சந் : இல்லையப்பா! இது உங்கள் தவறன்று. விதியின் தவறு. இனி அதைத் திருத்துவதே மதியுடையவன் செயல். ஏனம்மா இந்த வேதனை? மகேஸ்வரன் விதித்த விதியையும் மரணதேவனின் பாசக் கயிற்றையும் எதிர்த்து வென்றது மார்க்கண்டேயனின் நெஞ்சுரம்.

பார் : சந்திரா.

சந் : அம்மா! வருந்தாதீர்கள். எந்த இடத்தில் எனக்கு சாவு காத்திருக்கிறதோ, எந்த நாகராஜனின் விதிப்பாம்பு என்னைக் கொல்வதற்கு உருவாகுமோ அந்த நாகலோகத்தை நோக்கி இப்பொழுதே புறப்படுகிறேன்.

பார் : சாவை நோக்கிச் செல்கிறேன் என்கிறாயே, பெற்ற மனம் எப்படி சம்மதிக்கும்?

சிவ : உன் கெதி என்ன ஆயிற்று என்பதை அறியாமலே நாங்கள் உயிர் நீக்க வேண்டுமா?

சந் : அப்பா! இங்கே வேதனைக் கண்ணீர் வடித்து விதியை எதிர் நோக்கிக் காத்திருப்பதைவிட விதியை வெல்லும் மார்க்கத்தைத் தேடிச் செல்வது நல்லதப்பா. குறித்த தினத்திற்குள் என் சாவை வென்று சித்திரா பௌர்ணமி கழிந்த மூன்றும் நாள் உங்களிடம் வந்து சேருகிறேன்.

பார் : குறித்த தினத்திற்குள் நீ திரும்பி வராவிட்டால் நாங்கள் உயிர் நீத்துவிடுவோம் சந்திரா.

சந் : அம்மா! தந்தையின் பாசம், தாயின் கண்ணீர் தமையனின் கடமை இவை மூன்றும் எந்த நிலையிலும் என் உயிரைக் கவசம்போல் காக்கும். என்னை ஆசி கூறி அனுப்புங்கள்.

காட்சி 4

பல்லக்கிலே காதல்

காஞ்சி மன்னர் மகள் அமுதவல்லிக்கு மண முடிக்கத்தீர்மானிக்கிறார். துரோகம் செய்து, நாட்டைக் கைப்பற்ற நினைக்கும் மந்திரி, சைத்திரிகனொருவனைக் கொண்டு, அசடான தன் மகன் அழகேசனை மிக அழகான இளவரசன்போல் வரையச் செய்து, இளவரசர்களின் படங்களுடன் காட்டுகிறான். ஆனால் இளவரசி அமுதா, கன்னி விரத பூஜை முடிந்த பின் எதுவும் சொல்வதாகக் கூறிப் போகிறாள்.

விதியை மதியால் வெல்லக் கிளம்பிய சந்திரனை, ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் பார்த்து, தேள் பச்சை குத்தி தம்முடன் பலவந்தமாக அழைத்துச் செல்கின்றனர். கன்னி விரதப் பூஜை முடியும்போது கலாட்டா ஏற்படுவதால் அமுதவல்லி அரண்மனைக்குக் கிளம்புகிறாள். அவள் பல்லக்கில் பதுங்கியிருக்கிறான் சந்திரன். தேள் பச்சை குத்திக் கொண்டிருக்கும் கொள்ளையர்கள், அரசாங்கத்தால் தூக்கு மேடைக்கு அனுப்பப்பட விருக்கிறார்கள். இதை யறிந்து சந்திரன் திடுக்கிடுகிறான். பல்லக்கில் அவனைக் கண்டு திடுக்கிடுகிறாள் அமுதா. அவள் கூச்சலிடாதபடி அவள்

வாயைப் பொத்துகிறுன் சந்திரன். அவன் மந்திரி குமாரன் அழகேச ஃனப் போலவே இருப்பதால் மேலும் வீறிடவில்லை அமுதா.

சங் : பயப்படாதீர்கள். நான் திருடனல்ல.

அமு : ஆ! நீங்களா?

சங் : என்னை தெரியுமா உங்க ளுக்கு ?

அமு : நன்ருய் இருக்கிறது. கண்ணி யமுள்ள மனிதர்கள் இப்படி ஒரு கன்னிப் பெண்ணின் பல்லக்கிலே கள்ளத்தனமாக புகவும் மாட்டார்கள். கைகூசாமல் தொடவும் மாட்டார்கள்.

சங் : மன்னித்துக் கொள்ளுங்கள். வேறு வழியில்லை, தேவி !

குதிரை வீரன் : உள்ளே ஏதோ பேச்சுக்குரல் கேட்டுதே !

சங் : உனக்கென்ன மூளைக் கலக்கமா? இனி எந்தக்குரல் கேட்டா லும் ஒட்டுக் கேட்காமல் அப்பால் போ! ...காட்டிக் கொடுத்து விடுவீர்களோ என்று நினைத்து...

அமு : காட்டிக் கொடுத்தால் எனக் கும் அல்லவா அவமானம்?

சங் : உண்மையில் நான் யார் என் பது தெரிந்தால் தவருக நினைக்க மாட்டீர்கள்.

அமு : நீங்கள் போடும் வேஷம் தெரியுமே எனக்கு. கைதேர்ந்த கள்வர் தான் நீங்கள். கானம்பாடிக் கன்னியர் உள்ளத்தை கன்னமிடலாம். கண்ணுல் பேசிக் கருத்தைக் கொள்ளை இடலாம். கடைசியில் கையைப்பிடித்து கள வாடலாம் என்ற எண்ணம்தானே உங்களுக்கு?

சங் : இல்லை...இல்லை...

அமு : மந்திரிகுமாரன் என்ற தைரியமா?

சங் : நான் மந்திரிகுமாரன் அல்ல! நான்...ஒரு இசைவாணன்! நீ...நீ...நீ... நீங்கள் ராஜகுமாரியா?

அமு : ம்...நானும் ஒரு இசைவாணி தான்! ம்...என்னைப் பார்க்கத்தானே இந்த இசைவாணர்...

சங் : நல்லவேளை...உங்களை நான் பார்த்தேன். இல்லாவிடில் என் உடலில் உயிரே இருக்காது!

அமு : ஓகோ...அவ்வளவு தூரத் திற்கு முற்றிவிட்டதா? உங்கள் உயி ரைப் பத்திரமாகப் பார்த்துக் கொள் ளுங்கள்.

சங் : அது உங்கள் கையில்தான் இருக்கிறது!

அமு : ம்... இனி என் கையிலிருந்து நீங்கள் தப்பமுடியாது.

சங் : தேவி...தேவி! தயவுசெய்து என்னைக் காட்டிக்கொடுத்து விடா தீர்கள்.

அமு : ஸ்...வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருக்கவேண்டும்.

சே : தேவி!

அமு : அரண்மனை வசந்த மண்ட பத்திற்குப் போ...

சந்திரனை மணக்கச் சம்மதம் கொடுக்கிருள் அமுதா. ஆனல் அழ கேசனை அவள் விரும்புவதாக மந்திரி நினைக்கிருர். மணமுடிக்க மன்னர் முடிவு செய்கிருர்.

காட்சி 5

பாதாளச் சிறை!

திருமண நாளன்று, சந்திரன் அமைச்சர் விட்டில் வந்து மாட்டிக் கொள்ளுகிருன். தன் மகனைப் போலவே இருக்கும் சந்திரனைக் கண்டு மந்திரி திடுக்கிடுகிருர். தன் மகன் அழகேசன் காக்காய் வலிப்பு கண்டு விழுந்து கிடப்பதைப் பார்க் கிருர். தேள் பச்சைக் குத்தப்பட்ட சந்திரன், பெற்ருேர் முகத்தில் விழிக்க வேண்டுமானுல், தன் மக னைப்போல் நடித்து அமுதாவுக்கு தாலி கட்டும் வரை, மாப்பிள்ளை யாக நடிக்க வேண்டும் என்று நிபந் தனை போடுகிருர். ஆனுல் சந்தர்ப்ப சூழ்நிலையால் சந்திரனே தாலியும் கட்டி விடுகிருன். பள்ளியறைப் பிர வேசமும் அன்றே நடைபெற வேண்டுமென்கிருர் அரசர். 'அவ னைத் தீண்டாதே' என்று எச்சரித்து அனுப்புகிருர் அமைச்சர். தான் அவளைத் தீண்டக் கூடாது என்பதற் காகக் கீத மிசைத்து அவளை மயங் கச் செய்து விடுகிருன் சந்திரன். மறு தினம் மந்திரியிடம் அவன் இது பற்றி விவாதிக்க, அவர் அவனைத் தன் மகனுக ஏற்பதுபோல் நடித்து,

பாலிலே மயக்க மருந்து கலந்து கொடுத்து, அவன் மயங்கி விழுந்ததும் கொல்லிமலைக் காட்டில் கொலை செய்யுமாறு ஆட்களிடம் அனுப்புகிறார். அமுதாவின் அறைக்குப் போகும் அழகேசன் அவளிடம் பூரா விவரங்களையும் கூறி அவளை அக்காவாக ஏற்கிறான். கணவனைத் தேடி கொல்லிமலைக் காட்டுக்குப் போய் விடுகிறாள் அமுதா.

மந்திரியின் ஆளான சத்திரந்துப் பொறுப்பாளன் கார்மேகம், கருடன் என்ற சந்திரனின் நண்பனை தன் சகோதரி காந்தாயிக்கு மணமுடிக்க விரும்புகிறான். அதற்காக அவனைப் பலவந்திக்க, அவன் தப்பி மன்னரிடம் முழு விபரங்களையும் கூற வருகிறான். மன்னர், சேனாதிபதி, மந்திரி, அழகேசன், கார்மேகம் முதலியோர் அங்கே இருக்கிறார்கள், தோழி வந்து இளவரசி பற்றிக் கூறுகிறாள்.

தோழி : இளவரசியை எங்கே தேடியும் காணோம்.

மன் : அழகேசா! உன் மனைவி எங்கே போனாள்? உன்னுடன்தானே இருந்தாள்? சொல், உண்மையைச் சொல்.

அழ : அவ என் மனைவி இல்லே. என் அக்கா. அப்படித்தான் நான் அவளைக் கூப்பிடணும்னு ராத்திரி கத்தியைக் காட்டினா. நான் பயந்து போயிட்டேன். அக்கா எங்கேயோ போயிட்டா.

மந் : கேட்டீங்களா அரசே! நான் அப்போதே சந்தேகப்பட்டேன், இதில் ஏதோ சூது இருக்கிறது என்று. நாடாளும் மன்னனின் மகளை மருமகளாகப் பெற்றால் மதிப்போடு வாழலாம் என்று கனவு கண்டேன். ஆனால் அவளோ என் மகனின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு நாடறிந்த ஒரு திருடனைத் தேடிக்கொண்டு ஓடிவிட்டாள்.

கரு : யாரய்யா திருடன்?

கருடன் வருகிறான்.

கரு : நீதான் திருடன். என் சினேகிதனை மிரட்டி அவனைக் கூலிக்குத் தாலி கட்டச் சொன்னே.

சேனா : நீ யார்?

கார் : இவன் சோறு திருடி.

அர : நீ யார்?

உலகப்பிரசித்தி பெற்ற தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்கு குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகள் உட்கொண்டு பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது.

தொண்டை, மார்பு உபாதைகளுக்கான பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டு தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்தை சீக்கிரம் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேலை செய்வதை உணருங்கள் . . . வேதனையைக் குறைக்கவும் கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது.

பெப்ஸ்
தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணம் அளிக்கும் வில்லைகள்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-56-TAM

சோல் ஏஜெண்டுகள்:
தாதா & கோ.,
86, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

கரு: இவரு சத்திரத்து சோத்தை சொரண்டி விக்கிற பெருச்சாளி.

அர: உண்மையைச் சொல், என்ன நடந்தது?

கரு: உங்ககிட்ட உண்மையைச் சொல்லத்தானே ஓடியாந்திருக்கேன். என்னை சோறு திருடின்னு அடைச்சு வைச்சாங்க. என் சினேகிதரெ மிரட்டி இளவரசியாருக்கு தாலி கட்ட அனுப்பிச்சாரு இந்த மந்திரி. அவ்வளவையும் என் கண்ணுலே பார்த்தேன்.

அர: தாலி கட்டியவன் உன் சினேகிதனு?

கரு: ஆமாம்! தென்பாண்டிச் சீமையிலே ஒரு பண்டிதர் மகன், சந்திரவாணன்னு பேர். கலியாண சமயத்தில் வலிப்பு வந்திடுச்சி. அதனுல்தான் என் சினேகிதெனப் போய்...

மங்: சுத்தப் பொய். என் மகனுக்கு காக்காய் வலிப்பா? ஒரு நாளும் கிடையாது.

கரு: கிடையாதா? பொய் சொன்னுலும் பொருத்தத்தோட சொல்லணும். இப்ப நான் வரவழைக்கட்டுமா?

அழகேசன் அருகில் சென்று பேசுகிருன்.

கரு: கல்யாணம்...கல்யாணம்.

அழ: ஐய்யய்யோ.......ஐய்யய்யோ வேண்டாம்வேண்டாம். நீ சொல்றதெல்லாம் உண்மைதான்...தாலி கட்டினவன் இவனுடைய சினேகிதன்தான். அவன் ஏன் என்மாதிரி அழகா இருந்தான்...? அதனுலதான் எங்க அப்பா அவனே விட்டு எனக்கு....இல்லே....இல்லே.... இளவரசியக்காவுக்கு தாலி கட்டச் சொன்னுரு. இல்லையாப்பா...?

மங்: சீ போ... (**அரசர் பக்கம் திரும்பி**) அரசே!

மன்: போதும்! இனி உமக்குப் பேச வாய் கிடையாது. சேனுதிபதி! உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த இந்த இருதய மற்றவனே பாதாளச் சிறையில் அடையுங்கள்.

இரண்டு வீரர்கள் வந்து அவர்களை அழைத்துச் செல்கிருர்கள்.

காட்சி 6

குறிசொல்லும் குறத்தி!

அமுதவல்லி கொல்லி மலைக்கு ஓடுகிருள். அங்கே நரிக்குறத்திகள் இருவரின் உதவியுடன் சந்திரனைக் காப்பாற்றி அழைத்து வருகிருள். அவனுக்குக் குறிசொல்லிக் கேலி செய்கிருள். சம்பவங்களை அவள் அப்படியே சொல்லவே, வேதனைப் படுகிருன் சந்திரன்.

சங்: போதும் குறத்தி...போதும்! நான் கூலிக்குத்தான் தாலிகட்ட சம்மதித்தேன். அது என் விதியின் பாதையிலெ குறுக்கிட்ட பயங்கர சம்பவம்... தாலி கட்டியதோடு ஓடியிருக்க வேண்டும்...மீண்டும் சந்தர்ப்பமே எனக்குச் சதி செய்துவிட்டது. நள்ளிரவிலே பள்ளியறையிலே என்னுடன் ஆசை மொழி பேசிய வெள்ளிமுகத்தாள் யார் தெரியுமா?

குற: தெரியும்.. நீ பல்லக்கிலே பாத்த பருவப்பொண்ணு...

சங்: அது உனக்கு எப்படி தெரியும்...?

குற: உன் கை சொல்லுதே சாமி. உன் கை சொல்லுதே. ஏன் சாமி. உனக்கு எம்மாங் கல்மனசு...அம்புட்டு ஆசை வைச்சிருந்த பொண்ணே ஏமாத்திட்டு வந்திட்டயே...

சங்: நான் ஏமாற்றி வரவில்லை... என் உயிரை யெல்லாம் அங்கு வைத்துவிட்டு உயிரற்ற ஒரு நடைபிணமாகத்தான் அங்கிருந்து புறப்பட்டேன். என் மீது அவள் கொண்டுள்ள பாசத்தை அறிந்தேன். அவளிடம் என் உள்ளத்தை பறி கொடுத்துவிட்டதையும் உணர்ந்தேன்.—மோசம் நடந்துவிட்டது என்று கூறிவிடத்தான் துடித்தது என் உள்ளம். ஒரு பைத்தியத்திற்கு அவள் பலியாவதை பகிரங்கமாக தடுக்கத்தான் தூண்டியது என் உணர்ச்சி.

குறத்தி அழுகை தாங்காமல் விம்முகிருள்.

சங்: நீ ஏன் குறத்தி அழுகிருய்?

குற: ஒண்ணுமில்லே... பாவம்! அந்தப் பொண்ணு - உள்ளதைச் சொல்லியிருந்தா உன்கூட புறப்பட்டு இருப்பாளே...

சங்: அவள் சாதாரண பெண் அல்ல அம்மா!..ஒரு நாட்டின் இளவரசி. துன்பத்தின் வாடையே தெரியாதவள் — துன்பத்தை கட்டிச் சுமக்கப் பிறந்தவனுேடு - ஏன் துயர்ப்பட வேண்டுமென்று சொல்லிக் கொள்ளாமல் பிரிந்தேன். அம்ம...! ஆனுல் என் அமுதா ஒருத்தியைத் தவிர, என் இதயத்திலே இடம் பெறக்கூடிய பெண் 'இந்த உலகத்தில்

நாளுக்கு நாள்
நாளுக்கு நா
ரெக்ஸோனு
சோப்
உங்கள் சருமத்தை எழிலோங்கச் செய்கிறது
ரெக்ஸோனுவில் இருப்
பது கேடில்–சரும எழி
லுக்கான பற்பல என்
ணெய்கள் இணைந்த
விசேஷத் தைலமாகிய
'கேடில்' உங்கள் சருமத்
திற்கு ஊட்டமளித்து,
அதிகமென்மையுடனும்,
அழகுடனும் மிளிரச்
செய்கிறது.
உங்கள் எழிலுக்கான
சோப் ரெக்ஸோனு!
Rexona
BLENDED WITH CADYL

எவரும் இல்லை - எந்த ஜென்மத்திலும் இல்லை...

குற : அத்தான்...! அத்தான்!...

சங் : ஆ...! அத்தான்!

குற : ஆமத்தான்...

சங் : அமுதா...!

குற : உங்கள் வெறுப்போடு விளையாடிய குறத்தி மறைந்து விட்டாள். உங்கள் கருத்திலே கலந்து, நெஞ்சிலே நிறைந்து, உங்கள் உள்ளமெல்லாம் நிறைந்திருக்கும் அமுதாதான் அத்தான்!

சங் : அமுதா......அமுதா......அரச போகங்களை உதறியெறிந்து இந்த ஏழையின் பொருட்டு காடுமேடுகள் கடந்து வந்திருக்கிறுயே.

அமு : நீங்கள் எங்கிருக்கிறீர்களோ அங்குதானே அத்தான் நானும் இருக்க வேண்டும் ?

சங் : இனியாவது நீ அரண்மனைக்கு திரும்பிவிடு. வரும் சித்ரா பௌர்ணமிக்குப் பின்னும் நான் உயிருடனிருந்தால் மீண்டும் சந்திப்போம்.

அமு : அத்தான்! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

சங் : அமுதா! மரணத்திலிருந்து என்னைக் காப்பாற்றினுய், மற்றொரு மரணம் எனக்காக காத்திருப்பது அறியாமல்.

அமு : அத்தான்!

சங் : வரும் சித்ரா பௌர்ணமியன்று விஷப்பாம்பு ஒன்று என்னைக் கடித்துக் கொன்றுவிடும் என்பது சிறு வயதில் எனக்கு ஏற்பட்ட சாபம். அந்த விதியை வெல்ல, வழி தேடித்தான் புறப்பட்டேன், அமுதா...

அமு : இனிதான் அத்தான் இணை பிரியாது நான் உங்களோடு இருக்க வேண்டும். விதியோடு நடக்கும் போராட்டத்தை சதிபதிகளாக நடத்துவோம். அல்லது இருவருமே மடிந்து விடுவோம். அத்தான்...அந்த பாக்கியத்தை எனக்கு மறுக்காதீர்கள்.

சங் : அமுதா...

அமு : அத்தான்!

இருவரும் மகிழ்கிறுர்கள்.

இடையே...

கருடன் கொல்லிமலைக் காட்டில் காட்டு ராணியின் ஆட்களிடம் சிக்கி அவள் முன் நிறுத்தப் படுகிறுன். பிறகு அவளை ஏமாற்றி, யாவரையும் மயக்கும் ஊது குழலை அபகரித்துக் கொண்டு, கருட வேடத்தில் கிளம்பி நாகலோகம் வருகிறுன். அங்கே ஏற்கெனவே அமுதவல்லியும் சந்திரனும் வந்திருக்கிறுர்கள். நாக குமாரியை மணப்பவனுக்கு மரணமில்லை என்பதை ஒரு வயோதிகர் மூலமறிந்த அமுதா, நாககுமாரியை கணவனுக்கு மணமுடிக்கத் தீர்மானித்து ஆணுடையில் சுயம்வர மண்டபம் செல்கிறுள். பூலோகவாசி யாரிருந்தாலும் தன்னிடம் ஒப்படைக்குமாறு சிப்பாய்களிடம் கூறுகிறுன் கருடன். சிப்பாய்கள் அவன் நிஜக் கருடன் என்றெண்ணி, ஒரு நாக கன்னிகையை உணவாக அனுப்புகிறுர்கள். அவளை வாழ்த்தி அனுப்புகிறுன் கருடன்.

காட்சி 7

சுயம்வர மண்டபத்திலே பாடி ஆடும் நாக குமாரியின் கழுத்தில், ஆணுடையிலிருக்கும் அமுதா வீசிய மாலை விழவே, அவளே நாககுமாரியின் கணவனுகி பள்ளியறை செல்கிறுள்.

நாக : உஸ்.........உஸ்....பரவாயில்லை. மரியாதை காட்டியது போதும். பாவம் கால் வலிக்கும். ஏய்...ஏய்... உட்காருன்னு உட்காரமாட்டே! ஒன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. எனக்குப் பொருத்தமானவன்தான் நீ. என்ன பளபளப்பான கை! இந்தக் கையாலே தானே எனக்கு நீ போட்டே... ஒண்ணை மறந்துட்டேனே. கொஞ்சம் இரு... இதோ வர்றேன். (ஒரு மாலையைக் கொண்டு வந்து) இந்த மாலையை எங் கையாலேயே நான் இப்பவே போடணும். அப்பத்தான் மணச்சடங்கு பூர்த்தியாகி நீ எனக்கு தெய்வீகப் புருஷனுவே...

அமு : நாககன்னிகா! கொஞ்சம் பொறு...நான்.

நாக : அடடே ... மறந்துட்டேன்... கொஞ்சம் இரு. (சந்தனக் கிண்ணத்துடன் வந்து பூசியவாறே) சந்தனம் பூசிட்டுத்தான் மாலையைப்



பிரகாசிக்கும் கிராமம்

- சிறந்த சாலைகள், கழிவு நீர் கால்வாய்கள்
- சுத்தமான கிராமம், சிறந்த தேக ஆரோக்யம்
- அபிவிருத்தியடைந்த விவசாயம், அதிகரித்த மகசூல்
- எழுத்தறியாமையையும் தீண்டாமையையும் ஒழித்துக்கட்ட தீவிர முயற்சி
- தண்ணீர் குழாய்கள்போன்ற நல்ல வசதிகள், மாட்டுச் சாணத்திலிருந்து காஸ் தயாரிக்கும் அரியதோர் இயந்திரம்

இவைகளும் மற்றும் சில அபிவிருத்திகளும் மத்தியப் பிரதேசத்தின் ரெய்கார் சமுதாய நல வளர்ச்சி பிளாக்கைச் சேர்ந்த படேல் பாலி கிராமத்தின் சாதனைகளாகும். அக் கிராமத்தினர் தாங்களே முன் வந்து அபிவிருத்தி முயற்சியில் ஈடுபட்டதின் பலன்களே அவை.

படேல்பாலி அடைந்த வசதிகளை உங்கள் கிராமமும் அடைய முடியும். கிராம அபிவிருத்தி உங்களுக்கு சிறந்த வாழ்க்கையை அளிப்பதுடன் நாட்டின் முன்னேற்றத்தையும் துரிதப்படுத்துகிறது.

திட்டத்துக்கு உதவுங்கள் —

முன்னேற்றம் அடையுங்கள்

DA-59/253

போடணும். ம்...சட்டையைக் கழட்டு. தலைப்பாகை வேறே ... எதுக்கு?... ம் ... எடு எல்லாத்தையும்.

அமு : வேண்டாம் ... நாககன்னிகா ... வேண்டாம்.

நாக : ஊஹூம் முடியாது! நான் சொல்றபடிதான் நடக்கணும். இல்லேன்னு எனக்குக் கோபம் வந்துடும் ...வந்துடும்.

அமு : வேண்டாம். நாககன்னிகா ...வேண்டாம்!

நாககன்னிகை தலைப்பாகையை இழுக்கிருள். அமுதா பெண்ணெனத் தெரிகிறது.

நாக : நீ....நீ....பெண்ணு? என்னை ஏமாற்றி விட்டாயே. என் ஆசையையெல்லாம் அழித்து விட்டாயே. என் வாழ்வையே நாசமாக்கி விட்டாயே. மோசக்காரி! உன்னை என்ன செய்கிறேன் பார்...

அமு : கன்னிகா ... கொஞ்சம் பொறு.

நாக : பொறுப்பதா? ... அடிகள்ளி! ஆயுள் முழுவதும் என்னை நித்திய கன்னியாகவே இருக்கும்படி செய்து விட்டாயே! என்னால் தழைக்க வேண்டிய எங்கள் நாகவம்சம் உன்னால் அழியப் போகிறது ... அதற்கு முன்னால் நீ அழிந்து போ... அழிந்துபோ...அழிந்து போ.

அமு : சகோதரி ஆடி அசையும் உன் மலர்ப்பாதங்களில் என் உயிரைப் பணயம் வைக்கிறேன். உனக்கு இதய சாந்தி ஏற்படும் என்ருல் என் உயிரை எடுத்துக்கொள். அதற்கு முன்னால் நான் உனக்குத் தர விரும்பும் வாழ்வைப்பற்றிக் கொஞ்சம் கேள்.

நாக : வாழ்வு! இனிமேல் எனக்கு என்ன வாழ்வு தரப்போகிருய்? இனி எனக்கு ஒரு புருஷனை உன்னால் தர முடியுமா?

அமு : என்னால் தரமுடியும். கலங்காதே சகோதரி. என் கணவரையே உனக்கு நான் கொடுத்து விடுகிறேன்.

நாக : என்ன, உன் கணவரையா?

அமு : ஆமாம்! நான் மாலை வீசியது எனக்காக அல்ல. என் கணவருக்காக. அவரையே உனக்கு நான் தருகிறேன். அவருடைய வடிவழகைப் பார்த்தால் நீ பரவசமடைவாய். அவர் வாய் திறந்து பேசினல் மெய்மறந்து கேட்பாய். அவருடைய கண்களை கண்டால் கவிதை பாடுவாய். அவர் கானம் பாடினல் நீ வானம்பாடிகளை மறந்து விடுவாய்.

நாக : நான் உடனே பார்க்கணும்! எங்கேடி அவன்?

அமு : இதோ அழைத்து வருகிறேன்.

நாக : அதுவரை பொறுக்க முடியாதடி என்னல். எங்கிருக்கிருன் சொல்லு?

அமு : கௌரி கோவில் மண்டபத்தில்.

நாக : ஓஹோ...சரி வா பார்க்கலாம்.

நாககுமாரி மந்திரத்தால் சந்திரனைப் பார்த்துவிட்டு அவனைத் தூக்கம் கெடாமல் கொண்டு வருமாறு தோழிகளுக்குப் பணிக்கிருள்.

காட்சி 8

சந்திரகாந்த ரசம்!

அமுதாவின் வேண்டுகோளுக்கிணங்க, சந்திரன் நாககன்னிகாமீது ஆசைவைக்க முயன்றும் அவனல் அது முடியாமல் போகவே, கன்னிகா சீறுகிருள். அமுதாவைத் தனியே அழைத்துக் கோபிக்கிருள். நாககன்னிகையை மணப்பவனுக்கு அவளைத்தவிர, வேறு யாராலும் மரணம் ஏற்படாது. ஆனல், தானே சந்திரனை கொல்லப் போவதாகப் பொறுமுகிருள் நாககன்னிகா.

நாக : கந்தர்வனைப் போன்ற ஆடவனைக் காட்டி கள்ளமே அறியாத இந்தக் கன்னியின் உள்ளத்திலே காதல் கனலை மூட்டினய்! இந்த நாகரத்தினத்தைத் தருகிறேன் என்று கெஞ்சியவளை அவன் நஞ்சென வெறுக்கத் துணிந்தான்! நானும் நஞ்சாகவே மாறி விடுகிறேன்.

அமு : சகோதரி! கொஞ்சம் பொறுமையாகவே இரு!

கன் : பொறுமை! அவன் உள்ளம் உன்னிடம்;உருவம்என்னிடமா?..இதை எந்தப் பெண்தான் பொறுப்பாள்?

அமு : கன்னிகா !...கன்னிகா...

கன் : இல்லை! என் கோபம் எல்லை மீறிப் போகுமுன் என்னைக் கொன்று

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்!

மாய மோதிரம்

இந்த மாயமோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவரானாலும், அல்லது தொலை தூரத்தில் இருந்தாலும், அவனே அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனே அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1.94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

***Principal,* BENGAL MESMERISM HOUSE**

(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)

ரூ. 300 இனும்

இந்த மகாகாளி இயந்திரத் தகடை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டை கைவசம் வைத்துக்கொண்டு தியானம் பண்ணும்போது. இந்த மகாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1.25 ந. பைசே. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3.12 நயா பைசே. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத்தகடு ஒன்று ரூ. 3.88 நயா பைசே. தபால் செலவு தனி. சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனும்.

THE BENGAL MESMERISM HOUSE (M. P. X.)

JULLUNDUR CITY (Pb)

விடு...இந்தக் காதலே காலகண்ட விஷமாக மாறுமுன் என்னைக் கொன்று விடு...

அமு : கன்னிகா! அவருக்கு அழியாத அமர வாழ்வளிக்க வேண்டிய நீ ஏன் சாக வேண்டும்? உன்னை நிச்சயமாக அவரோடு வாழ வைக்கிறேன். என்னை நம்பு சகோதரி.

கன் : அவன் இதயத்தில் நீ இருக்கும்வரை, என் முகத்தை ஏறெடுத்தும் பார்க்கமாட்டான்.

அமு : அப்படியானால் அந்த வாளை என் நெஞ்சிலே பாய்ச்சிவிடு!...மடிந்து போகிறேன்.

நாக : நீ போய்விட்டால் இன்னும் உன்னை அதிகமாக நினைத்து உயிருள்ளவரை உருகிக் கொண்டே இருப்பான்.

அமு : பின் என்னதான் செய்வது? என்னை மறப்பதற்கு ஏதாவது வழி இருந்தால் சொல், செய்கிறேன்.

நாக : செய்வாயா?...

அமு : அவர் வாழ்விற்காக எது வேண்டுமானாலும் செய்வேன்.

நாக : மச்ச கன்னிகா! சந்திரகாந்த ரசம் கொண்டு வா...

சந்திரகாந்த ரசம் வருகிறது.

நாக : இந்த சந்திரகாந்த ரசத்தை எந்தப் பெண் தன் கையால் தன் காதலனுக்குக் கொடுக்கிறாளோ, அவளை அவன் மறந்து விடுவான்...

ரசத்தை தன் கையில் வாங்கிக் கொள்கிறாள் அமுதா.

அமு : இந்த ரசத்தை என் கையால் தானே அவருக்குக் கொடுக்க வேண்டும்? கொடுக்கிறேன்...இனி என் ஆசை முகத்தை அவர் மறந்து விடட்டும். 'அமுதா!...அமுதா'...என்று ஆயிரந் தடவை கூப்பிட்ட அவர் வாய் இனி என்னை "வா" என்று அழைக்கவும் மறுக்கட்டும். அவருடைய அன்புள்ளத்திலிருந்து அமுதாவின் சித்திரமே அழிந்து விடட்டும்...!

வேகமாகப் போகிறாள். சந்திரன் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருக்கிறான்...அமுதா ரசத்துடன் வருகிறாள்.

சந் : அமுதா!

அமு : அத்தான்!

சந் : என்ன நடந்தது?

அமு : எல்லாம் என் மனம்போல் தான் நடந்தது.

சந் : அந்த நாககன்னிகை என்ன சொன்னாள்?

அமு : ஒன்றுமில்லை...உங்கள் வாழ்வைத்தான் உங்களுக்கு அனுப்பி யிருக்கிறாள்.

சந் : பின் உன் கண்களில் ஏன் கண்ணீர் ததும்புகிறது?

அமு : இல்லை! அவள்...உங்கள் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள்... என்று நினைத்தேன்.

சந் : போதும் நாககன்னிகையைப் பற்றிப் பேசியது...நம்மைப் பற்றி பேசு அமுதா. "உன்னோடு தனித்துப் பேச வேண்டும். உல்லாசத்திலே தன்னை மறந்திருக்க வேண்டும்" என்றெல்லாம் இத்தனை நாளாக என்ன தவி தவிக்கிறேன் தெரியுமா?

அமு : தெரியுமத்தான். நீங்கள் சிந்தை மயங்கிச் சிரித்து மகிழ இதோ தேவ அமுது.

சந் : நீ என் அருகில் இருக்கும் போது இதெல்லாம் எதற்கு?

அமு : அத்தான்! அன்று நம் மணநாள் இரவிலே ஆசையோடு என் கையால் பால் கொடுத்தேன்; சாப்பிடவில்லை. பிறகு உங்களைச் சோதிக்கும் குறத்தியாக வந்து என் கையாலே ஆசையோடு பழம் பறித்துக் கொடுத்தேன்; புளிக்கிறதென்று புறக்கணித்து விட்டீர்கள்.

சந் : இப்போது அமுதா, உன் கையால் தரும் இந்த அமுதை நான் ருசித்துச் சாப்பிட வேண்டும். உன் குறை நீங்க வேண்டும். அவ்வளவுதானே? கொடு, உன் கையாலே கொடு. உன் முகத்தின் மோகனப் புன்முறுவலைப் பார்த்துக் கொண்டே சாப்பிடுகிறேன்.

அமு : அத்தான்...

கையை இழுத்துக் கொள்கிறாள்.

சந் : அமுதா...

அமு : என் நெஞ்சின் தாபம் தீர ஏதாவது இரண்டு வார்த்தை சொல்லுங்கள் அத்தான்.

சந் : என் உள்ளத்தில் பாசம் அனைத்தையும் உருக்கி வார்த்து இரண்டு வார்த்தைகளில் சொன்னால் உன்னை மறக்கவே முடியாது.

அமு : என்னை மறக்கவே உங்களால் முடியாதா அத்தான்...?

சங் : மறப்பது என்றால் வசந்தம் போல் என் வாழ்வில் ஏன் வந்தாய்? இன்பக்கதைகள் பேசி என் இதயமெல்லாம் நீயாக ஏன் நிறைந்தாய்?

அமு : அத்தான் ... சாப்பிடுங்கள் அத்தான்!

சங் : அமுதா! ஏன் உன் கை நடுங்குகிறது?

அமு : ஒன்றுமில்லை. 'என்னால் உங்களுக்கு எவ்வளவு ஆனந்தமளிக்க முடிகிறது? வறண்ட வாழ்வை உல்லாசத் தோப்பாக்க முடிகிறது என்றெல்லாம் நினைக்கும்போது, என் உள்ளமெல்லாம் துடிக்கிறது. அதனால் தான்...

சங் : அமுதா! நாளையக் கவலைகள் இன்று இன்பமாய்க் கூடியிருக்கும் வானம்பாடிகளுக்கு இல்லை. ஏதாவது பாடு அமுதா-நீ. உன் கானத்தோடு கலந்து தரும் இந்தப் பானத்தை நான் ஆனந்தமாகப் பருகுவேன். பாடு.

அமுதா பாடுகிறாள். அவன் சந்திர காந்த ரசம் பருகிவிட்டுச் சாய்கிறான்.

அமுதாவின் அலறல்

தனக்காக கணவனை தியாகம் செய்யத் துணிந்தாள் அமுதா என்று மகிழ்ந்து அவளையும் தன்னுடனேயே இருக்குமாறு வேண்டுகிறாள் நாககன்னிகா. நாகராஜன் சித்ரா பௌர்ணமி விழாவிற்காக நாகாபரணன் ஆலயத்தில் விரதமனுஷ்டிக்க மகளை அனுப்புகிறான். சந்திரனின் பெற்றோர் அங்கே கொண்டுவரப்படுகின்றனர். சந்திரனும் கொண்டு வரப்படுகிறான். பெருமையுடன் ஒருவனை ஏவுகிறான் நாகராஜன். அவனால் சந்திரனை நெருங்க முடியவில்லை.

கால : தேவா! தேவா! என்னால் ஒன்றும் முடியவில்லை. ஏதோ ஒரு சக்தி என்னைத் தடுக்கிறது.

நாக : என்ன! என் சபதத்தை நிறைவேற்ற முடியவில்லையா உன்னால்?

கால : மன்னிக்க வேண்டும் தேவா! எதிர்த்து வரும் காலாக்கினியை என்னால் நெருங்கவே முடியவில்லை!

நாக : ஆ! தோல்வியா? நாகலோகத்தில் நாகராஜனுக்குத் தோல்வியா?

அமு : மாமா...ஒரு வார்த்தை!

நாக : என்ன?

அமு : அவர் உயிரைக் காக்க ஏதோ ஒரு சக்தி தடுக்கிறது!

நாக : அதனால்?

அமு : அவரை மன்னித்துவிடக் கூடாதா?

நாக : மன்னிப்பதா? என் சபதம் சிதைவதா? என் புஜபலம் எங்கே போயிற்று? மகேஸ்வரன் தந்த இந்த வாளின் சக்தி எங்கே போயிற்று?

அமு : நிறுத்தும் நாகராஜரே! உமது சபதம் என்ன? நாக சர்ப்பம் ஒன்று அவரைக் கடித்துக் கொல்லும் என்பதுதானே?

நாக : ஹூம்...அப்படியானால் நானே நாகசர்ப்பமாக மாறி அவனைக் கடித்துக் கொல்கிறேன்.

அமு : அது உம்மாலும் முடியாது. அந்தக் காலாக்கினி உம்மையும் சுட்டெரித்து விடும்.

நாக : என்ன? என்னையும் சுட்டெரிக்கக் கூடிய சக்தி என் உலகத்தில் இருக்கிறதா?

அமு : இருக்கிறது. அதுதான் உம் மகளின் சக்தி. நாககுல மங்கையர் தம் கணவரைக் காப்பாற்ற கௌரி அளித்த சக்தி.

நாக : அதற்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம்.?

அமு : இவர் உமது மருமகன். உமது மகள் கன்னிகாவைக் கைப் பிடித்த கணவர்.

நாக : என் மருமகனா? அப்படியானால் நீ?

அமு : அவர் மனைவி.

சங் : அமுதா!

நாக : இந்த நாகராஜனை ஒரு பெண்ணா வஞ்சித்தாள்?

அமு : வஞ்சிக்கவில்லை. என் கணவருக்கு வாழ்வளித்தேன்.

நாக : அதற்காக என் கன்னிகாவின் வாழ்க்கையைக் கானல் நீராக்கினாய்!

அமு : இல்லை! கனிச்சோலை யாக்கினேன். அவள். ஆனந்தமாகத்தான் இருக்கிறுள்.

நாக : என் மகளுக்கு நீ ஆனந்தம் அளித்தாய்.

அமு : ஆம்! என் உள்ளத்து உணர்ச்சிகளை யெல்லாம் உடைத்தெறிந்து, என் ஆபாசங்களை யெல்லாம் அடக்கி, நாயகரின் உள்ளத்திலிருக்கும் என் உருவத்தை அழித்து, நான் காலமெல்லாம் வழிபடும் இந்தத் தெய்வத்தை அவள் கணவராக்கினேன்.

சந்திரன் அருகே செல்கிருள்.

சந் : அமுதா!

நாக : ம்...ம்...இதெல்லாம் என் சபதத்திற்குச் சமாதி கட்ட நீ வகுத்த திட்டங்கள்.

அமு : இல்லை! என் கணவரைக் கொல்ல உங்கள் விதி திட்டமிட்டது. அந்த விதியை வெல்ல சதிதர்மம் இந்த ஒரே வழியைத்தான் காட்டியது.

சந் : அமுதா! நீ எவ்வளவு பெரிய தியாகம் செய்திருக்கிருய், நான் உயிர் பிழைக்க!

நாக : ஹ....ஹ....ஹ......நீ உயிர் பிழைப்பது! அறியாப் பெண்ணே! கணவன் உயிரைக் காக்க கட்டினுய் பல பல கோட்டைகள்; தீட்டினுய் பல பல திட்டங்கள்.ஒன்றை மறந்து விட்டாய். இந்த நாகராஜன் யார் என்பதை மறந்து விட்டாய்! என் சபதத்தை நிறைவேற்றத்தான்போகிறேன்...அதை உன் கண்களால் பார்க்கத்தான் போகிருய்...! பிடித்துக் கட்டுங்கள் இவர்களை...!

போகிருன். அமுதாவும் அவன் பின் செல்கிருள். நாகவீரர்கள் சந்திரனின் பெற்ருேர்களை இழுத்துச் செல்கிருர்கள்.

காட்சி 9

நாகராஜன், மகளிடம் சென்று 'உன் தமையனைக் கொன்றவரின் தனயனைக் கொல்' என்று மகளிடம் கூறுகிருர். அவள் ஒப்புக்கொள்ளுகிருள்.

நாக : கன்னிகா!

கன் : அப்பா.:.உங்கள் இஷ்டப்படியே விரதமெல்லாம் முடிந்து விட்டேனப்பா.

பூசைத்தட்டை அவர் கையில் கொடுக்கிருள்.

நாக : மகிழ்ச்சி! கன்னிகா! விரதம் முடிந்து விழா எடுக்கும் இந்தப் புண்ணிய நேரத்திலே உனக்காகவும் நம் நாகர் உலகத்திற்காகவும் நீ செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கிறதம்மா.

பூசைத்தட்டை தோழிகளிடம் கொடுக்க, அவர்கள் போகிருர்கள்.

கன் : சொல்லுங்களப்பா! செய்கிறேன்...

நாக : உனக்கொரு அண்ணன் இருந்தான், இந்தநாகலோகத்தின் சுடர் விளக்குப் போல. உன்மீது தன் உயிரையே வைத்திருந்தான்.

கன் : அப்பா...எங்கே அப்பா என் அண்ணன் ?

நாக : உனக்காகத் தாழம்பூ பறிக்கப் பூலோகம் சென்ருன். சென்றவன் திரும்பி வரவே இல்லை!மடிந்துவிட்டான்.

கன் : அப்பா!

நாக : உன் வீரத்தமையன் போர்க்களத்திலே மடியவில்லை. எதிரிகளின் அவைக்களத்திலே சரியவில்லை. அற்பன் ஒருவனின் சூதுக்களத்திலே சாய்ந்துவிட்டான்.

கன் : அப்பா!

நாக : தன் மகனுக்காக என் மகனைக் கொன்று விட்டான் ஒரு கொடிய மானிடன். அவனைப் பழிக்குப் பழி வாங்குவதாகச் சபதம் செய்தேன் அன்று.

கன் : அந்தச்சபதத்தை நான்நிறைவேற்றுகிறேன் இன்று. எங்கே இருக்கிருன், அந்தக் கொடியவன்?

நாக : மகளே! நீ தரப்போகும் சாவைச் சந்திப்பதற்காக நம் சபா மண்டபத்திலே கட்டிப் போடப்பட்டிருக்கிருன்.

கன் : அந்தப் பழிகாரனின் இரத்தத்தைக் " கொண்டே என் அருமை அண்ணனின் கல்லறையைக் கழுவுகிறேன்.

அமுதாவின் குரல் : கன்னிகா! சற்று நில்!

நாக : உன் தந்தையின் பொருட்டு நீ நிச்சயமாக பழி வாங்குவாய் அல்லவா?

கன் : நிச்சயமா!...ஏன் சந்தேகம் ?

1960-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1960-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினுல் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுதும் கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனுல் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிமளினுல் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும் ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனுல் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri Swami Satnarayan Raj Jyotishi, (P. M.)
JULLUNDUR CITY (Punjab)

இனும் ! இனும் !! இனும் !!!

எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.

3 புட்டிகள் (பூராமுறை] ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி மியூட் (பொம்மை) வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனும். அங்கீகரிக்காமல் போனுல் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P. P. M.)
Jullundur City.

நாக : எந்த நிலையிலும் எவருக்காகவும் பின்வாங்கமாட்டாயே?

கன் : மாட்டேன்.

நாக : சத்தியமாக?

கன் : அப்பா...நான் வணங்கும் நாகாபரணன் மீது ஆணையாக.

அமுதவல்லி அங்கே வருகிருள்.

அமு : வேண்டாம், கன்னிகா வேண்டாம். நீயும் சத்தியம் செய்து கொடுத்து விடாதே.

திடுக்கிட்டுத் தவிக்கும் கன்னிகா, விவரமறிந்து தந்தையிடம் வேண்டுகிருள்.

கன் : அப்பா! நீங்கள் கொல்லச் சொல்வது என் கணவரை.

நாக : இல்லை. உன் தமையனைக் கொன்றவனின் தனயனை.

கன் : அவர் என் நாயகர்.

நாய : ஆனல் நாகராஜனின் பரம விரோதி. என் வம்ச விளக்கு அணைவதற்குக் காரணமாயிருந்த ஜன்ம சத்துரு. அந்தப் பழிகாரன் சாகத்தான் வேண்டும்.

கன் : என் கையால்...

நாக : ஆமாம்! உன் அருமைத் தமையனின் ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

கன் : அதற்காக? ... கணவனைக் கொல்லும் காதகி யென்ரு, பழியை மனைவி சுமக்க வேண்டும்?

நாக : கன்னிகா! உன் தந்தையின் சபதத்தை நிறைவேற்றுவதுதானம்மா மகளின் தர்மம்.

கன் : இல்லையப்பா, கணவரின் உயிரைக் காப்பதுதான் மனைவியின் ஒரே தர்மம்.

நாக : பிடிவாதம் பிடிக்கிருயா மகளே?

கன் : சற்றுக் கருணை காட்டுங்கள் என்றுதான் மன்ருடுகிறேனப்பா!

நாக : முடியாது! கல்லாகிவிட்ட என் நெஞ்சியிலிருந்து நீ கருணையை எதிர்பார்க்க முடியாது.

கன் : அப்படியானுல்...என் இதயத்தையும் கல்லாக்கிக் கொண்டு உயிருக்குயிரான இன்ப ஓவியத்தை அழித்து விடுவேன் என்று நீங்களும் எதிர்பார்க்க முடியாது...!

நாக : தந்தை ஆணையிடுகிறேன்.

கன் : ஆணை அன்பிற்கு அணை போட முடியாதப்பா.

நாக : அன்பு! அதை மறந்துவிடு!

கன் : அதைவிட இறந்துவிடு என்று சொல்லுங்களப்பா.

நாக : கன்னிகா! கடைசியாக நாகராஜன் கட்டளையிடுகிறேன்.

கன் : கட்டளையை மீறுவதால் எது வரினும் வரட்டும். என் உடலிலே உணர்ச்சியும், உள்ளத்திலே மனச்சாட்சியும் இருக்கும்வரை அது ஒரு போதும் நடக்காது.

நாக : உணர்ச்சி, மனச்சாட்சி அவ்விரண்டையுமே உன்னிடமிருந்து அழித்து விடுகிறேன்.

கன் : அப்பா...

நாக : உன்னை ஒரு உணர்ச்சியற்ற விஷப்பாம்பாக மாற்றிவிடுகிறேன்.

கன் : அப்பா! வேண்டாமப்பா.

கெஞ்சுகிருள். ஆனல் அவர் மகளையே பாம்பாக்கி விடுகிருர்.

காட்சி 10

அவள் ஒரு தியாகி

அமுதாவும் சந்திரனும் தப்ப முயன்றும் முடியாமல், பாம்பாக மாற்றப்பட்ட கன்னிகாவே கணவனைக் கடிக்க, அவன் சாய்ந்து விடுகிருன். கன்னிகா சுய உருப்பெறுகிருள். அவளைப் பார்த்ததும் அமுதா சீறுகிருள்.

நாக : அத்தான்...

அமு : ...நீ ஏன் அழுகிருய்? தந்தையின் சபதத்திற்காக சதி தர்மத்தைச் சாய்த்து விட்டவளே, நீ ஏன் அழுகிருய்? பார்!...உன் கண்களிலே ஒளியிருந்தால் தலை நிமிர்ந்து பார்...பெண்ணினத்தின் பெருமைக்குத் திருவிளக்கான கௌரிதேவியைப் பார்! கைலாசநாதனையே கணவனுக அடைய வேண்டுமெனக் கடுந்தவமிருந்தாள். அந்தக் கணவனை ஆண்டி யென்று ஏளனம் செய்த தந்தையை, பெற்ற தந்தை யென்றும் பாராமல் எதிர்த்துப் போராடி வேள்வித் தீயிலே வீழ்ந்தாள். நீ...கணவனுக்கே காலனுகிவிட்ட பெரும் பழியை ஏற்று நிற்கிருய்! அதோ பெண்ணினத்தின் பெருமைக்குத் திருவிளக்கான கௌரிதேவியைப் பார்!

கன் : அக்கா...அக்கா!

அமு : தங்கை எனக்கருதி இந்த தங்க விக்கிரகத்தை ஒப்படைத்தேன் உன்னிடம். அழித்து விட்டாய் அன்புத் தெய்வத்தை. அடி வஞ்சகி! கணவன் உயிரைக் காப்பேன் என்று இந்த கௌரியம்மன்மீது ஆணையாக வாக்களித்தாய். அதே சக்தியம்மன் சன்னதியில் சாகடித்து விட்டாய் சதி தர்மத்தை.

கன் : இல்லையக்கா! என்னையும் அறியாமல் நடந்துவிட்டது இந்த அநியாயம்.

89696

அமு : நடத்திவிட்டாய் அநியாயம். கிடத்திவிட்டாய் என் நாயகரைப் பிணமாக. என்னைமட்டும் ஏன் விட்டு வைத்திருக்கிறாய்?...மீண்டும் பாம்பாக மாறி என்னையும் கடித்துக் கொன்றுவிடு. உம்...

நாககன்னிகா தன் தவறுணர்ந்து தகப்பனாரிடம் கெஞ்சுகிறாள்.

கன்னி : அப்பா! கணவனை இழந்து கதறும் அந்தப் பெண்ணைப் பாருங்கள்! அவர் உடம்பிலேறிய விஷத்தை இறக்கி விடுங்கள். மனமிரங்குங்கள் அவள் தன் அன்புக் கணவரோடு வாழட்டும்.

நாக : நடக்காது.

கன்னி : மன்றாடுவது உங்கள் மகள் அப்பா.

நாக : சபதம்தான் எனக்குப் பெரிது.

கன்னி : முடிவை மாற்ற மாட்டீர்கள்? அவரைக் காப்பாற்ற மாட்டீர்கள்?

நாக : மீண்டும் மீண்டும் கேட்பதில் அர்த்தமில்லை.

கன்னி : காப்பாற்ற மாட்டீர்கள்...?

அமு : கன்னிகா!

நாககன்னிகா பாம்பாக மாறி சந்திரனின் உடலிலிருந்து விஷத்தை உறிஞ்சிக் குடித்து விடுகிறாள்.

நாக : மகளே! என்ன காரியம் செய்கிறாய்?...ஐய்யய்யோ! இனி...என்னால் கூட உன்னைக் காப்பாற்ற முடியாதே...கன்னிகா!

பாம்புருவத்திலிருந்து நாக கன்னிகா சுய உருவம் பெற்று நிமிர்கிறாள்.

நாக : மகளே கன்னிகா ... ஐயோ என்ன காரியம் செய்துவிட்டாயம்மா? கன்னிகா! கக்கிய விஷத்தை மீண்டும் உட்கொண்டு விட்டாயே...மாண்டு போவாயே மகளே, மாண்டு போவாயே.

கன் : எப்போது நச்சரவமாக்கி நாயகரைக் கடிக்கும்படி என்னை ஏவினீர்களோ, அப்போதே நான் மாண்டு விட்டவள்தான்! பெற்ற பாசத்தைக் கொன்றுவிட்டு இப்போது புலம்புவதால் என்ன பயன்? பழிவாங்கும் எண்ணத்தையே பெரிதெனக் கொண்டீர்கள்! மகனை இழந்த நீங்கள் இன்று மகளையும் இழக்கிறீர்கள்!

நாக : அம்மா...கன்னிகா!

அமு : சகோதரி! எனக்காக எவ்வளவு பெரிய தியாகம் செய்து விட்டாய்!

நாக : இல்லையக்கா! மாங்கல்யத்திற்காக மாற்றாள் ஒருத்திக்கு தன் கணவனையே மனமுவந்து தந்த உன் தியாகமே பெரிய தியாகமக்கா!

அமு : சகோதரி...!

நாக : கன்னிகா...என்னை விட்டுப் போகிறாயா அம்மா?

கன் : யாரும் அழாதீர்கள்.... அப்பா! உங்களின் சபதமும் நிறைவேறியது...அக்காவின் விருப்பப்படியே பதியின் உயிரும் காப்பாற்றப்பட்டது. நான் சந்தோஷமாகவே சாகிறேனப்பா..சாகுமுன் ஒன்றே ஒன்று கேட்கிறேன். இனி பகையை மறந்து விடுங்கள். அக்காவையே உங்கள் மகளாகவும் அவரையே உங்கள் மருமகனாகவும் நினைத்து எல்லா நலனும் பெற்று வாழ வாழ்த்துங்களப்பா...

நாக : அம்மா ...கன்னிகா!...கன்னிகா! மகளே கன்னிகா!

கன்னிகா சுருண்டு இறந்து விடுகிறாள்.

சங் : அமுதா! அமுதா!..கன்னிகா!..

அமு : ஆமத்தான்! உங்களுக்கும் எனக்கும் வாழ்வளித்த தெய்வம் கன்னிகா!

நீண்ட நாள் துன்பத்தின் முடிவிலே இன்பத்தின் எல்லையை அடைய படகிலே சந்திரனும் அமுதாவும் ஆனந்தத்துடன் கிளம்புகிறார்கள். ★

விவரங்களுக்கு :

K. A. S. புரொடக்ஷன்ஸ்

21/11 ரங்கநாதன் தெரு, சென்னை-17.

REGD. No. M4523
பேசும் பட
டிஸம்பர் 1959 • 75 காசு
சாண்டோ
M.M.A. சின்னப்பா தேவர்
அமரா புரொடக்ஷன்ஸ்
உத்தமி பெற்ற ரத்தின
PSR
தயாரிப்பு:
E. ராதாகிருஷ்ணன்
டைரக்ஷன்:
M.A. திருமுகம்